
2012, September 16 - 30


எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

சிறப்பு
இலங்கை விலை
100/=















## ஹக்கீமின் அரசியல் பேரம்

### கிழக்கு முஸ்லிம்கள் கொடுத்த விலை என்ன?


| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA..........US$ 10.00 |
| SRI LANKA....SLR 150.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

9 772279 203000

உலகம் முழுவதுமுள்ள தமிழர்களுக்கான
பிரத்தியேக திருமணசேவை

THIRUMANAM.LK™
இருமனம் சேர்ந்தால் திருமணம்

இன்றே உங்கள் அங்கத்துவத்தைப் பதிவு செய்து
வாழ்க்கை துணையை தெரிவுசெய்யுங்கள்...

www.thirumanam.lk



# வாழ்வின் அழகிய தருணங்களை மேலும் அழகாக்கிடும்



பத்தே நாட்களில்
வித்தியாசத்தை உணருங்கள்

100% NATURAL

**Fadna**

**X-Tea**

பெட்னா X டீ

நாடு முழுவதிலுமுள்ள பாமசிகள் மற்றும் கீல்ஸ், ஆர்ப்பிகோ,
லாப்ஸ் உட்பட அனைத்து சூப்பர் மார்க்கட்டுகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் Dr.சலீம்-077-6562777 **www.fadna.com**

Rs.285/=

# உள்ளடக்கம்


எமது விருந்தினர்
முன்னாள் பிரதம நீதியரசர்
சரத் என். சில்வா 10

கிழக்குத் தமிழரின் பிரதான குரலாக
தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு 12
குமார் டேவிட்

ஹக்கீம் முடக்கிய கிழக்கு
முஸ்லிம்களின் தனித்துவ வேட்கை 16
மாறவர்மன்

தேர்தல்கள் கற்றுத்தரும் பாடங்கள் 18
என்.சத்தியமூர்த்தி

சுடலை ஞானம் 24
மறவன் புலவு க.சச்சிதானந்தன்

டில்லி டயறி 26
எம்.பி.வித்தியாதரன்

மாலைதீவு; ஒரு புரட்சியின் கதை 32

சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல்
அரசியல்வாதிகள் சொல்வதென்ன? 37
எம்.காசிநாதன்

பிரபாகரன் கதை; நூல் விமர்சனம் 41
பெ.முத்துலிங்கம்

9/11 அமெரிக்காவுக்கு கிடைத்த வரம் 44
பேராசிரியர் சி.சிவசேகரம்

அமெரிக்கா விதைத்த
வினைகளின் அறுவடை 46
பேராசிரியர் அ.மார்க்ஸ்

கருவறைக்குள் சத்திரசிகிச்சை 55
டாக்டர் எம்.கே.முருகானந்தன்


மிருகவேள்வி கிளப்பும் சர்ச்சைகள் 57

திருவிளையாடலுக்கு
ஒரு திருவிளையாடல் 61

கடைசி பக்கம் 64
பேராசிரியர் சி.மௌனகுரு






10


24


41




எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2012, செப்டெம்பர் 16-30



44


16


57


18


61


55


64

## ஆசிரியரிடமிருந்து...

# வரலாற்றில் ஹக்கீமுக்கு உரிய இடம் எது?

கிழக்கு மாகாண சபையின் புதிய நிருவாகத்தை அமைப்பதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத்தான் ஆதரவை வழங்குவதாக இருந்தால், அது தொடர்பிலான தீர்மானத்தை எடுப்பதற்கு காங்கிரஸின் தலைவரான நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு தேர்தல் முடிவுகள் வெளியாகிய மறுகணமே, அல்லது அவ்வாறில்லாவிட்டாலும் ஒரு சில மணித்தியாலங்களிலேயே இயலுமாக இருந்திருக்கும். இதைப் புரிந்துகொள்ளாமல் அல்லது புரிந்துகொள்ள முடியாமல் பலரும் தீர்மானத்தின் அறிவிப்புக்காக பத்து நாட்கள் காத்திருந்திருக்கிறார்கள் என்றால், அவர்களுக்காகப் பரிதாபப்படுவதைத்தவிர, வேறு எதையும் செய்வதற்கில்லை.

தேர்தல் முடிவுகள் வெளியானதற்குப் பிறகு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களினால் கிழக்கு மாகாணத்தின் புதிய நிருவாகத்தை அமைப்பது தொடர்பில் அளவு கடந்த விட்டுக் கொடுப்புகளுடன் முஸ்லிம் காங்கிரஸை நோக்கி தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய கருத்துகளை மீண்டும் இங்கு நினைவூட்டுவது கூட தேவையற்ற விடயம்.

தமிழ் பேசும் மக்கள் என்ற வகையிலும் ஒரேபிராந்தியத்தில் அருகருகாக வாழ்கின்ற வர்கள் என்ற முறையிலும் கிழக்கிலங்கையில் தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களது பாரம்பரிய வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்கும் இரு சமூகங்களுமே பேரினவாத அரசியல் கலா சாரத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக எண்ணற்ற பொதுவான பிரச்சினைகளில் ஒன்றிணைந்து குரல் கொடுத்து ஜனநாயக ரீதியான அரசியல் போராட்டங்களை (நீண்டகால கசப்புணர்வுகளுக்குப் பிறகு) முன்னெடுப்பதற்கு கிடைத்ததொரு அரிதான வாய்ப்பைத் தவறவிட்ட ஒரு முஸ்லிம் தலைவராகவே வரலாற்றில் ஹக்கீம் இடம்பெறப் போகிறார் என்பது மாத்திரம் நிச்சயம்.




## அரசியலுக்கு கூடுதல் முக்கியத்துவம்

சமகாலம் செய்திச் சஞ்சிகையில் வெளிவரும் சமகால நிகழ்வுகள் பற்றிய ஆக்கங்கள் வித்தியாசமான பார்வையுடன் வெளிவருகின்றன. அதுவும் இலங்கையில் இப்படியானதொரு படைப்பை நாம் பெரிதும் வரவேற்கிறோம்.

எனினும், சமகாலம் அரசியலுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கும் சஞ்சிகை என்பதால் அதைத் தொடர்ந்து வாசிக்கும் போது சற்று ஜனரஞ்சகமான விடயங்களும் அவசியம் என்கின்ற உணர்வும் துளிர்விடத்தான் செய்கிறது.

சமகாலத்தில் வெளிவரும் ஆக்கங்கள் பெரும்பாலும் அரசியல் பற்றியதும் அதேநேரம் ஆழமான கருத்துகளையும் கொண்டதாக இருக்கும் நிலையில், அவற்றை இன்னும் ஈடுபாட்டுடன் வாசித்து முடிக்க இடையிடையே ஜனரஞ்சகமான ஆக்கங்களும் வந்தால் சுவாரஸ்யமாக இருக்கும் என்பது வாசகன் என்ற வகையில் எனது அபிப்பிராயமாகவும் வேண்டுகோளாகவும் இருக்கிறது.

கே.துஷ்யந்தன்
கொழும்பு - 05

## வாரமொருமுறை வந்தாலென்ன?

பல்வேறுபட்ட பயன்தரும் அம்சங்களுடன் மாதத்திற்கு இருதடவைகள் "சமகாலம்" சஞ்சிகையை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிரைவேட் லிமிட்டெட்டினருக்கு எனது பாராட்டுகள். உள்ளூர் விடயங்களை மட்டுமன்றி உலக விவகாரங்களையும் "சமகாலம்" அலசும் விதம் அபாரம். இதனால் மாணவர்களாகிய என்னைப் போன்றவர்கள் பெரும் பயனடையக்கூடியதாகவுள்ளது.

எனவே தற்போது மாதத்திற்கு இரு தடவை வெளிவரும் சமகாலத்தை வாரத்திற்கொரு தடவை வெளியிட்டால் நாம் நன்றியுடையவர்களாக இருப்போம் என்பதனை ஆசிரியரின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

கிருபாகரன் ரிஷிகேஷ்
கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி


## ஜனரஞ்சக அம்சங்கள்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தால் கடந்த ஜூலை மாதத்திலிருந்து மாதமிருமுறை வெளிவரும் "சமகாலம்" செய்திச் சஞ்சிகை, அரசியல், சமூகவியல் தொடர்பான சமகால விடயங்கள் தொடர்பான ஆக்கபூர்வமான கட்டுரைகளை தாங்கி வருவது அத்துறைகளில் ஈடுபாடுடையவர்களுக்கு பயனுள்ளதாக அமைகிறது.

உள்நாட்டு அரசியல் நிலைவரம் மட்டுமன்றி அண்டை நாடான இந்தியா உட்பட பல்வேறு நாடுகளினது தற்போதைய அரசியல் நிலைவரங்களை அறிந்துகொள்ள சமகாலம் வழிவகுக்கிறது. குறிப்பாக கடந்த இதழில் வெளியான வடமாகாணத் தேர்தலை அரசு தாமதிப்பது ஏன்? என்ற தலைப்பிலான கட்டுரை மூலம் பல விடயங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

தரமான தாளில் அழகான பக்க வடிவமைப்பில் இலகுவான மொழிநடையில் வெளிவரும் கட்டுரைகள் வாசிக்கும் ஆர்வத்தை தூண்டும் வகையில் அமைந்துள்ளன. கட்டுரைக்குப் பொருத்தமாக பிரசுரமாகும் படங்களும் வாசகர்களை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன. தொடர்ந்தும் "சமகாலம்" சமகால கள நிலைவரங்களை வெளிக்கொணர வாழ்த்துகிறோம்.

வி.கௌரி, வெள்ளவத்தை




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 06

**2012, செப்டெம்பர் 16 - 30**

A Fortnigtly Tamil News Magazine


**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்

**உதவி ஆசிரியர்கள்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்
துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk


வடக்கில் இராணுவத்தை குறை...
வடமாகாண சபை தேர்தலை நடத்து...

# வாக்குமூலம்....

இராணுவத்தளபதியாக நான் இருந்தகாலத்தில் இராணுவ அதிகாரியாரும் தாக்கப்பட்டிருந்தால் குற்றவாளிகள் கைது செய்யப்படுவதை நான் உறுதிப்படுத்தியிருப்பேன். அதிர்ஷ்டவசமாக நான் தொழில்சார் அதிகாரியாக இருந்ததால் இராணுவ அதிகாரியையோ, சிப்பாயையோ இவ்வாறு நடத்தும் நிலைக்கு இறங்கியிருக்க வில்லை. நான் தற்போது இராணுவத்தளபதி யாக இருந்திருந்தால் நிச்சயம் மாலக சில்வா கைது செய்யப்பட்டிருப்பார்.



**சரத்பொன்சேகா**
முன்னாள் இராணுவத் தளபதி

எனது மகன் எந்தவொரு இராணுவ அதிகாரியையும் தாக்கவில்லை. அத்து டன் அவரை என்னால் மறைத்து வைக்கவும் முடியாது. ஏனெனில் அவர் என்னைவிட உருவத்தால் பெரியவர். எனது மகன் யாரைத் தாக்கினார் என்று என்னால் தேடிப் பார்க்கவும் முடியாது. நான் ஒரு அமைச்சரவை அமைச்சர். அதனால் எனக்கு தாராளமான அமைச்சுப் பணிகள் இருக்கின்றன. எனது மகன் தவறு செய்திருந்தால் இந்த நாட்டில் சட்டம் உண்டு. பொலிஸ் உண்டு. அவர்கள் அதனைப் பார்த்துக் கொள்வார்கள்.



**மேர்வின் சில்வா**
பொதுசன உறவுகள் மற்றும்
பொதுசன விவகார அமைச்சர்

கிழக்கில் தேசிய அரசு பற்றி சம்பந்தன் தெரிவித்த கருத்தில் எந்த முரண்பாட்டையும் நான் காணவில்லை. அதனை அரசியல் ரீதியாக புரிந்து கொள்வது அவசியம். அரசுடன் தமிழ்க் கூட்டமைப்பு இணைந்து செயற்படுமென்று அரசியல் எதிரிகள் கூட நம்பமாட்டார்கள்.



**மனோகணேசன்**
ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர்

இலங்கையின் உண்மையான நட்பு நாடு என்பதைப் பாகிஸ்தான் நிரூபித்திருக்கிறது. இலங்கை அரசாங்கமும் மக்களும் பாகிஸ்தான் மீது ஆழமான பற்றுக் கொண்டிருக்கிறார்கள். மூன்று தசாப்த காலப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பாகிஸ்தான் அசைக்க முடியாத அதன் ஆதரவையும் உதவியையும் வழங்கியது. பாகிஸ்தானின் உதவியின்றி பயங்கரவாதத்தை இலங்கையினால் ஒழித்துக் கட்டியிருக்க முடியாது.




**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ**

நாட்டில் அதிகரித்துச் செல்லும் குற்றச் செயல்களை தூக்கு மேடையினால் குறைக்க முடியுமாகவிருந்தால் அதனை செயற்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்திடம் இருக்கின்றது.




**அமைச்சர் சந்திரசிறிகஜதீர**
புனர்வாழ்வு மற்றும் சிறைச்
சாலைகள் மறுசீரமைப்பு

அதிகாரமிக்க முக்கோணம் ஒன்றின் கீழே முழு நாடும் செயற்படுகின்றது. இதில் அமைச்சர்கள் அந்த முக் கோணத்திற்கு துதிபாடுப வர்கள் மாத்திரமே.



**-முன்னாள் நீதியரசர் சரத் என். சில்வா**

வெற்றியைவிடவும் தோல்வியிலேயே எம்மால் கூடுதலான பாடங்களைப் படிக்க முடியும். ஏனென்றால் தோல்விகளில் இருந்து பெறக்கூடியதாக இருக்கும் பாடங்கள் எம்மைக் கூடுதலான அளவுக்கு பக்குவமும் முதிர்ச்சியுமுடையவர்களாக்குகிறது. காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனா எனக்கு இதையே போதித்தார்.



**ரணில் விக்கிரமசிங்க**
எதிர்க்கட்சித் தலைவர்

# ஊடகங்கள் அரசியல் தலைவர்களை ஹீரோக்களாக நடத்தக்கூடாது

ஊடகங்கள் அரசியல் தலைவர்களை ஹீரோக்களாக எண்ணக் கூடாது. ஏனென்றால் இறுதியில் மக்கள் தான் வலிமை பொருந்தியவர்களாகிறார்கள். முன்னாள் எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கையும் லிபியத் தலைவர் கேணல் மும்மர் கடாபியையும் ஊடகங்கள் ஹீரோக்களாகக் கருதிய போதிலும்கூட, அவர்களின் ஆட்சிகளை மக்கள் இறுதியில் தூக்கியெறிந்தார்கள் என்று அல்-ஜசீரா தொலைக்காட்சி சேவையின் முன்னாள் பணிப்பாளர் நாயகமான வடாஹ்கான் பார் கூறினார்.

அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்து முன்னாள் சபாநாயகர் பாக்கீர் மாக்கார் நினைவுப் பேருரையை நிகழ்த்திய கான்பாருக்கு தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாக்கார் நிலையமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் கொழும்பு காலிமுகத்திடல் தாஜசமுத்ரா ஹோட்டலில் ஒரு நாள் காலை விருந்தளித்து கௌரவித்தன.

அந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லாட்சியுடைய நாட்டிலே தகவல் அமைச்சு ஒன்று தேவையில்லை. எந்தவொரு இரகசியமுமே இல்லாத நாட்டிலும் தகவல் அமைச்சு தேவையில்லை. அரசாங்கமொன்று மக்களிடமிருந்து எந்தளவுக்கு உண்மைகளை மறைக்கிறதோ அந்தளவுக்கு அது கெட்ட அரசாங்கமாகப் போய்க்கொண்டிருக்கிறது.



ஊடகங்கள் ஒருபோதுமே அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படக்கூடாது. உண்மையைக் கூறுவதற்கு ஊடகங்கள் அனுமதிக்கப்பட வேண்டும். அத்தகையதொரு சூழ்நிலையிலே தகவல் அமைச்சுக்கான தேவை இல்லாமற் போகிறது என்றும் கான்பார் குறிப்பிட்டார்.

ஈராக்கில் அல்-ஜசீராவின் அலுவலகம் எவ்வாறு அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது என்பதை விளக்கிக் கூறிய அவர், ஒரு நாட்டில் மாற்றத்தை வழமையாக ஆதரிக்காத அதிகார வகுப்பினரினதும் ஊடகங்களினதும் அபிலாஷைகள் ஒரே மாதிரியானவையாக இருக்கக்கூடாது. இருக்கவும் முடியாது என்று சுட்டிக் காட்டினார்.

ஊடகங்கள் மக்களின் அபிலாசைகளையும்நம்பிக்கைகளையும்விளங்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். உண்மைகளையே மக்களுக்கு அறிவிக்க வேண்டும். எவ்வாறெனினும் தகவல்களை மிகவும் சரியாகவும் துல்லியமாகவும் இருக்கின்றனவா என்பதை ஊடகங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒன்றுக்கு இருதடவைகள் தகவல்களின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து உறுதிப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். ஊடகங்கள் இத்தகைய விதிகளையும் நெறிமுறைகளையும் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

அரபு நாடுகளில் மூண்டிருக்கின்ற அரபு வசந்தம் மக்கள் புரட்சிகளை அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்குலக நாடுகளே தூண்டிவிட்டு இயக்குகின்றன என்று எந்தவொரு அரசியல் அவதானியுமே கருதுவாரானால், அவர் அந்த மேற்கு நாடுகளுக்கு உரித்தல்லாத முக்கியத்துவத்தைக் கொடுக்கிறார் என்பதே அர்த்தமாகும் என்று கூறிய அல்-ஜசீராவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அவரிடம் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில், இலங்கை அரசாங்கத்தினால் அல்-ஜசீரா கண்டிக்கப்படுகிறது என்பது தனக்குத் தெரியாது என்றும், ஆனால், அல்-ஜசீரா போற்றிப் பேணுகின்ற பண்பு விழுமியங்களையும் நெறிமுறைகளையும் கருத்தில் கொண்டு பார்க்கும் போது அரசாங்கங்களினால் அது கண்டிக்கப்படுகிறது என்பதில் எந்தவிதமான அசாதாரணமும் இல்லை என்று குறிப்பிட்டார்.

# பாகிஸ்தான் பக்கம் சாயும் புட்டின்



பல தசாப்தங்களாக பாகிஸ்தானை அலட்சியம் செய்து வந்த ரஷ்யா தற்போது ஆயுதங்களை அந்த நாட்டுக்கு விற்பனை செய்வதற்குத் தீர்மானித்திருக்கிறது.

சர்வதேச அரசியலில் புதிய துடிப்பான நிலைப்பாடுகளை எடுக்கும் தனது நோக்கங்களின் வெளிப்பாடாகவும் தெற்காசியாவில் மாஸ்கோவின் கொள்கைகளை மாற்றியமைக்கும் முயற்சியாகவும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமர் புட்டின் அக்டோபர் முற்பகுதியில் இஸ்லாமாபாத்திற்கு விஜயம்

செய்யவிருக்கிறார். ரஷ்ய ஜனாதிபதியொருவர் பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளும் முதன்முதலான விஜயம் என்பதால் புட்டினின் பாகிஸ்தான் விஜயத்துக்கு ஒருபெரும் முக்கியத்துவம் இருக்கிறது.

பாகிஸ்தான், தஜிகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் ஆப்கான் நெருக்கடி தொடர்பில் நான்குதரப்பு உச்சிமாநாட்டையும் ரஷ்ய ஜனாதிபதி தனது இந்த விஜயத்தின் போது நடத்தவிருக்கிறார்.


ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா தலைமையிலான வட அத்திலாந்திக் ஒப்பந்த (நேட்டோ) நாடுகளின் துருப்புகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறத் தயாராகிவரும் நிலையில், பிராந்திய நாடுகளிடையே புதிய கூட்டுகள் வெளிக்கிளம்புகின்றன.

பாகிஸ்தானுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான உறவுகள் புதிய திருப்பத்தை எடுக்கப்போகும் நிலையில், இந்தியாவையும் தெற்காசியப் பிராந்தியத்தையும் பொறுத்தவரையில், பாரிய மாற்றங்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன.

பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகளில் கசப்புநிலை அதிகரித்துவரும் வேளையில் மாஸ்கோவுக்கும் இஸ்லாமாபாத்துக்கும் இடையே நெருக்கமேற்படவிருப்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

பாகிஸ்தான் ஜனாதிபதி அசீவ் அலி சர்தாரி கடந்த மேமாதம் மாஸ்கோவுக்கு விஜயம் செய்திருந்தார். பாகிஸ்தான் இராணுவத்தளபதி ஜெனரல் அஷ்பாக் பர்வெஸ் காயானி ரஷ்யாவுக்கு இம்மாத இறுதிக்குள் விஜயம் செய்வதற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

# மத நம்பிக்கைகொண்ட இந்தியர் எவ்வாறு ஊழல் செய்ய முடியும்?




மத நம்பிக்கையுடைய இந்தியர்கள் ஊழல் மோசடிகள் போன்ற நெறிமுறையற்றசெயற்பாடுகளில் ஈடுபடுவதென்பது பெரும் முரண்பாடான ஒரு விடயம் என்று திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா கூறியிருக்கிறார்.

சில தினங்களுக்கு முன்னர் புதுடில்லியில் உள்ள இராமகிருஷ்ண மிஷனில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட தலாய்லாமா அங்கு உரையாற்றிய போது, "இந்தியர்கள் கடுமையாக மத நம்பிக்கையுடையவர்கள். இந்த நாட்டில் ஊழல் தலைவிரித்தாடுவது மிகவும் கவலைக்குரியதாகும். நான் அண்மையில் காஷ்மீரின் லடாக் பிராந்தியத்துக்குச் சென்றிருந்தேன். அரசாங்கம் தங்களுக்கு உதவித் தொகையாக 100 ரூபாவை வழங்குகின்றதென்றால் 20 ரூபா மாத்திரமே கையில் கிடைக்கிறது என்று அங்குள்ள சிலர் என்னிடம் சொன்னார்கள். 80 சதவீதப்பணம் மறைந்துவிடுகிறது. இது பெரும் வேதனை தருகிறது. இந்தியர்கள் மத நம்பிக்கையுடையவர் கள். கடவுளுக்குப் பயப்படுபவர்கள். நாட்டில் வறுமை பெரிய நெருக்கடியாக இருக்கும் போது ஊழல் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இது குறித்து சகலரும் சிந்திக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

மத நம்பிக்கையுடைய இந்தியர்கள் ஊழலில் ஈடுபடுவது பெரிய முரண்பாடாகும். காலையில் பிரார்த்தனையில் ஈடுபடுகிறார்கள். நாள்பூராவும் ஊழல் செய்கிறார்கள். அப்படிச் செய்யக்கூடாது என்றும் இந்தியாவில் அஞ்ஞாதவாசம் செய்யும் தலாய்லாமா தனதுரையில் கூறினார்.

# மொனிக்கா புத்தகம் எழுதுகிறார்



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனுக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்த பாலியல் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட வெள்ளைமாளிகைப் பணிப்பெண் மொனிக்கா லிவின்ஸ்கி இரகசியத் தகவல்கள் நிறைந்த புத்தகம் ஒன்றை எழுதிக் கொண்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. உலகின் பிரபலமான பிரசுர நிறுவனங்களை மொனிக்கா அணுகியிருப்பதாகவும் தன்னுடனான சந்திப்புக்குறித்து தகவல்களை வெளியிடுவதில்லை என்ற உடன்படிக்கையில் அந்தப் பிரசுர நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு அவர் நிபந்தனை விதிப்பதாகவும் நியூயோர்க் போஸ்ட் செய்தி

# முதலில் ஹரி அடுத்து கேட்



அமெரிக்காவின் லாஸ்வேகாஸில் ஹோட்டல் ஒன்றில் கடந்த மாதம் பிரிட்டிஷ் இளவரசர் ஹரி இளம் பெண் களுடன் நிர்வாணமாக நின்ற படங்கள் வெளியிடப்பட்டதையடுத்து பெரும் அசௌகரியத்திற்குள்ளான பிரிட்டிஷ் அரச குடும்பத்துக்கு ஒரு சில வாரங்கள் கழித்து இன்னொரு சம்பவம் அதிர்ச்சி யைக் கொடுத்திருக்கிறது.

பிரான்ஸில் எலிஸபத் மகாராணியா ரின் மருமகன் வின்லேக்குச் சொந்தமான நாட்டுப்புற மாளிகையொன்றில் தனது கணவர் இளவரசர் வில்லியத்துடன் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த கேட் மிடில்டனின் (கதறீன் கோமாட்டி) மேலாடையில்லாத படங்களை பிரெஞ்சு சஞ்சிகையான "குளோசர்" கடந்த வாரம் பிரசுரித்திருந்தது. இதனால் கடுமையான கோபமடைந்த இளவரசர் தம்பதியர் அந்த சஞ்சிகைக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்ற னர்.

நான்கு படங்களைப் பிரசுரித்த குளோ சர் சஞ்சிகை "பாருங்கள்... எதிர்கால இங்கிலாந்து இராணியை. இந்தக் கோலத்தில் அவரை நீங்கள் ஒருபோதும் பார்த்திருக்க மாட்டீர்கள்... இனிமேலும் ஒருதடவை இந்தக் கோலத்தில் பார்க்க மாட்டீர்கள்" என்று தலைப்பிட்டிருந்தது.

இளவரசர் தம்பதியர் ஆசிய-பசுபிக் நாடுகளுக்கான தங்கள் சுற்றுலாவின் ஒரு கட்டமாக மலேசியத் தலைநகர் கோலாலம்பூருக்குச் சென்றிருந்த வேளையிலேயே மேலாடையின்றிய கேட் மிடில்டனின் படங்களைப் பிரசு ரிக் கும் பிரெஞ்சு சஞ்சிகையின் திட்டம் பற்றி இவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

பிரிட்டிஷ் அரச குடும்பம் இதனால் பெரும் கவலையடைந்திருக்கிறது. இந்தப் படங்கள் பிரசுரிக்கப்பட்டமை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. இது சிவப்புக்கோட்டை மீறு கின்ற செயலாகும். வில்லியத்தின் தாயார் வேல்ஸ் இளவரசி டயானாவின் வாழ்க் கையில் ஊடகங்களும் "பப்பராசி" படப் பிடிப்புக்காரர்களும் தொல்லைகளைக் கொடுத்ததைப் போன்ற வேதனை தரும் நிகழ்வுகள் இப்போது கதறீன் கோமாட்டி



யின் வாழ்வில் நிகழ்கின்றன. இது அரச குடும்பத்தைப் பெரும் வேதனையில் ஆழ்த்தியிருக்கின்றன என்று சென். ஜேம்ஸ் மாளிகை அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருக்கிறது.

இளவரசர் தம்பதியின் அந்தரங்க வாழ் வில் அந்த சஞ்சிகையின் படப்பிடிப்பாளர் ஊடுருவல் செய்துவிட்டார் என்றும் மாளிகை குற்றஞ் சாட்டியிருக்கின்றது.

பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்கும் இதே படங்களை வழங்குவதற்கு பிரெஞ்சு சஞ்சிகையும் படப்பிடிப்பாளரும் முன் வந்த போதிலும் அவை வேண்டாமென்று நிராகரித்து விட்டன.

இதேவேளை, தனது தாயாரின் வாழ் வில் பத்திரிகைகள் ஊடுருவியதனால் அவர் அனுபவிக்க வேண்டியிருந்த தொல் லைகள் தனது மனைவிக்கு வருவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்று இளவரசர் வில்லியம் சூழுரைத் திருக்கிறார்.

சூரியக் குழியலில் ஈடுபட்டிருந்த தனது மனைவியின் மேலாடையில்லாத படங் களை பிரெஞ்சு சஞ்சிகை பிரசுரித்த செய லினால் கடுமையான கோபத்துக்குள் ளாகியிருக்கும் இளவரசர் தனது மனைவியின் அந்தரங்க வாழ்வைப் பாதுகாப்பதற்குத் தன்னாலியன்றதைச் செய்யப்போவதாக உறுதிபூண்டதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

1997 ஆகஸ்டில் பாரிஸில் கார் விபத்தில் தனது தாயார் மரணமடை வதற்கு பப்பராசிகளே காரணமென்று வில்லியம் நம்புகிறார். வெளிநாட்டுப் புகைப்படப்பிடிப்பாளர்களினாலேயே இளவரசர் தன் தாயாரை இழந்தார். அதே கதி தனது மனைவிக்கு ஏற்படுவதைத் தடுப்பதற்கு இளவரசர் தனது அதிகாரத் திற்குட்பட்ட சகலதையும் நிச்சயமாகச் செய்வார் என்று டயானாவின் நெருங்கிய நண்பியான விவியென்பாரி டெயிலிமிரர் பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார்.



வெளியிட்டிருக்கிறது.

மொனிக்காவின் புத்தகத்தைப் பிரசுரம் செய் வதற்கான உரிமையைப் பெறும் போட்டியில் முன்னணியில் நிற்கும் பிரசுர நிறுவனங்களின் பெயர் விபரங்கள் தெரியவரவில்லை.

மொனிக்கா என்ன சொல்லவிருக்கிறார் என்பதைப் பிரசுரிக்க சகல முன்னணி பிரசுர நிறுவனங்களும் ஆவலாய் இருக்கும் என்று மொனிக்காவுக்கு நெருங்கிய வட்டாரமொன்று கூறியதாகவும் நியூயோர்க் போஸ்ட் கூறியிருக்கிறது.

14 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி, கிளின்டனுக்கு எதிராக காங்கிரஸில் அரசியல் குற்றப்பிரேரணை கொண்டுவரப்படுகின்ற அள வுக்கு சர்ச்சைக்குரியதாக இருந்த இந்த பாலி யல் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட மொனிக்கா கடந்த காலத்தில் பேட்டிகளைக் கொடுத்திருக் கிறார். ஆனால், லண்டன் பொருளாதாரக் கல்லூரியில் கல்விகற்பதற்கு இங்கிலாந்துக்குச் செல்லும் வரை அவர் தனது நடமாட்டங்களைக் கணிசமான அளவுக்குக் குறைத்திருந்தார்.

## விருந்தினர் பக்கம்

சரத் என் சில்வா,
முன்னாள் பிரதம நீதியரசர்

# சட்டத்தின் மீதான மக்களின் நம்பிக்கையில் பாரிய வீழ்ச்சி

இன்றைய நிலைமையில் நாட்டில் சட்டத்தின் ஆட்சி பலவீனமடைந்துள்ளது. சட்டத்தின் மீதான மக்களின் நம்பிக் கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் என அனைத்து இன மக்களினதும் மனித உரிமைகள் மட்டுமன்றி ஏனைய அனைத்து உரிமைகளும் பரவலாக மீறப்படுகின்றன. பொலிஸ் அதிகாரம் தான்தோன்றித்தனமாக உபயோகப்படுத்தப்படுகிறது. வரி விதிப்பு மற்றும் எரிபொருள் இறக்குமதி என பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலும் பிரச்சினை நிலவுகிறது.

மறுபுறத்தில் கல்வித்துறையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பரீட்சைகள் கூட முறையாக நடத்தப்படுவதில்லை. பல்கலைக்கழகங்கள் இன்று அடிக்கடி மூடப்பட்டுக் கிடக்கின்றன. பிரதானமாக இனநெருக்கடி தொடர்பாக இன்னும் தீர்வொன்று முன்வைக்கப்படவில்லை. ஆதலால், தமிழ் மக்கள் மத்தியில் விரக்தி ஏற்பட்டுள்ளது. இவை தான் இன்றைய நிலைமையில் முக்கிய பிரச்சினைகளாக இருக்கின்றன.

இந்தப் பிரச்சினைகளுக்கான காரணங்களைத் தேடிப் பார்க்கும்போது அரசியல் காரணம் தான் இவற்றுக்கு ஏதுவாக இருப்பது தெளிவாகப் புலனாகிறது. எமது அரசியல் முறைமையில் பிரச்சினை இருக்கிறது. நிர்வாக, அரசியல், பாராளுமன்ற மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் என அனைத்தும் ஒரு இடத்தில் குவிந்து கிடப்பதே இங்கு பாரதூரமான பிரச்சினையாக இருக்கின்றது. ஜனாதிபதியை சுற்றித் தான் இந்த அனைத்து அதிகாரங்களும் குவிந்து கிடக்கின்றன.

அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் (ஜனாதிபதி), சட்டவாக்க அதிகாரம்(பாராளுமன்றம்), நீதித்துறை அதிகாரம் (நீதிமன்றம்) என அதிகாரங்கள் பகிரப்பட்டிருந்தாலும் கூட நடைமுறையில் அதை காணக்கிடைப்பதற்கில்லை. பதிலாக இந்த அனைத்து அதிகாரங்களும் நிறைவேற்று அதிகாரத்துக்கு அடங்கிப்போகும் நிலைமைகளே உருவாகி வருகின்றன. ஜே.ஆர். ஜெயவர்தன, ஆர்.பிரேமதாச, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரது ஆட்சிக் காலங்களின் போதும் நிறைவேற்று அதிகாரம் இருந்ததுடன், அக்கால கட்டங்களிலும் இவ்வாறான பிரச்சினைகள் நிலவின. எனினும் அப்போது நாட்டில் யுத்தம் நிலவியது. யுத்தம் நிலவும் போது அதிகாரங்கள் ஒரு இடத்தில் குவிந்திருப்பதற்கு ஏதோவொரு விதத்தில் நியாயம்இருக்கமுடியும்.ஏனெனில்யுத்தத்தை நடத்திச் செல்ல அது அவசியம் என்று சில தரப்பினர் நினைக்கின்றனர். இருந்த போதிலும் நான் அதற்கு உடன்படவில்லை.


யுத்த காலத்தின் போது இருந்திராத பிரச்சினைகள் இப்போது நிலவுவது வெளிப்படையாகத் தெரிகிறது. நாம் யுத்தத்திற்கு முகம் கொடுத்திருந்தாலும் இந்த முறைமையில் சமாதானத்தை நோக்கிச் செல்ல முடியாமல் இருக்கிறது. இரண்டாம் உலகப் போர் பிரதானமாக ஐரோப்பாவில் நடந்தது. அதன் பின்னர் வெவ்வேறுஇடங்களில்சிவில் யுத்தங்கள் நிலவின. இரண்டாம் உலகப்போரின் பின்னர்அமெரிக்கா,ஐரோப்பாஎனஅனைத்து உலகமும் சமாதானம் நோக்கிச் செயற்பட பகிரதப்பிரயத்தனங்களை மேற்கொண்டன. இதன் விளைவாக ஐ.நா.அமைப்பு, மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனம், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஐரோப்பிய பொதுச் சந்தை போன்ற நிதி நிறுவனங்கள் ஆகியன உருவாக்கப்பட்டன. அமைதியான சூழலில் உலகைக் கொண்டு செல்ல செயற்பட்டனர். அது வெற்றியும் அளித்தது. அந்த வகையில் வாழ்க்கைத் தரத்தில் இன்று ஐரோப்பாதான் உயர்வாக இருக்கிறது. சமாதானம் தொடர்பாக சரியான வழிமுறையை அவர்கள் கடைப்பிடித்தமையே இதற்குக் காரணம்.

2009ஆம்ஆண்டில்யுத்தம்முடிந்ததும் சமாதானத்தை நாமும் செயற்படுத்தியிருக்க வேண்டும். அதற்கு ஏற்கனவே நான் குறிப்பிட்டதைப் போன்ற முன்னெடுப்புகளை மேற்கொண்டிருந்திருக்க வேண்டும். எனினும், அதற்குப் பதிலாக நாம் என்ன செய்தோம்? யுத்தம் முடிவடைந்ததும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலொன்றுக்கு அழைப்பு விடுத்தார். உண்மையில் 2011ஆண்டு நவம்பர் மாதமே அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருந்தது. எனினும் 2 வருடங்கள் முன்கூட்டியே அது அறிவிக்கப்பட்டுவிட்டது. ஜனாதிபதித் தேர்தலொன்றுக்கான எந்த அவசரமும் மக்களிடம் இருக்கவில்லை. அரசாங்கமும் தகுதியான பலத்துடன் இருந்தது.

இந்தச்சந்தர்ப்பத்தில்தான்ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம் கொடுக்க பொது எதிரணி ஒன்று உருவாகிக் கொண்டிருந்ததுடன், சரத் பொன்சேகாவும் பொது வேட்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இதன் பிரகாரம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து சிறந்த ஜனநாயக ஆட்சி முறையொன்றைக் கொண்டு வரவும் இனநெருக்கடிக்குத் தீர்வொன்றை முன்வைக்கவும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, மனோ கணேசன் உள்ளிட்ட அனைவரும் பொது எதிரணியில் இணைந்திருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதற்கு ஆதரவ

ளித்தது.

இதில் சரத் பொன்சேகாவுக்கும் வாக்குகள் கிடைத்ததுடன், தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் அவர் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றிருந்தார். எனினும் இந்தத் தேர்தலின் முடிவுகளை திரிபுபடுத்தியே வெற்றியை



பெற்றுக்கொண்டனர். இல்லாவிட்டால், யாழ்ப்பாணம், நுவரெலியா என தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சரத் பொன்சேகா வெற்றி பெற்றிருக்கவும் தனது சொந்த ஊரிலேயே அவர் பெரும் எண்ணிக்கையிலான வாக்குகளால் தோற்கவும் எந்தவொரு காரணமும் இல்லை. அப்படி நடக்க முடியாது.

இந்த நிலையில் இந்தத் தேர்தல் முடிவுகளை ஏற்க முடியாது என்று அவர் பெரும் கூட்டமொன்றை கூட்டி அறிவித்தார். தேர்தல் நடைபெற்று பத்து நாட்களுக்குள் அவர் கைது செய்யப்பட்டு இரண்டரை வருடங்கள் சிறையிலும் அடைக்கப்பட்டார். ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளின் பாரிய வீழ்ச்சி இதிலிருந்து புலனாகிறது. இந்த இடத்தில் இருந்து ஜனாதிபதி மென்மேலும் பலம் கொண்டவரானார். இங்கு தான் நாம் ஏதேச்சாதிகாரத்தில் இணைந்து கொண்டோம். சரத் பொன்சேகா சிறையில் இருக்கும் போது தான் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெற்றது. இது ஒரு போதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையல்ல. அவர் எந்தத் தவறும் இழைத்திருக்கவுமில்லை. எந்தவொரு நீதிமன்றத்தினதும் உத்தரவின் பேரில் கைது செய்து தடுத்து வைக்கப்படவில்லை. முழுமையாக ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பிரகாரமே அவருக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இங்கு தான் அதிகாரம் ஒரு மையத்தில் குவிந்து கிடக்கும் பிரச்சினை இருக்கிறது. ஜே.ஆர்.ஜெயவர்தன, ஆர்.பிரேமதாச, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரது நிர்வாகத்தில் கூடஇருந்திராத அளவுக்கு தற்போது அதிகாரம் ஒரு மையத்தில் குவிந்து கிடக்கிறது. இந்த நிலைமையானது சிங்கள மக்களுக்கு மட்டுமல்லாது தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் பிரச்சினையாகும். ஜனாதிபதி மற்றும் அவரது சகோதரர்கள் மத்தியிலேயே இந்த அதிகாரங்கள் தற்போது குவிந்து கிடக்கின்றன. நடைமுறையில் எடுத்துக்கொண்டால்எந்தவொன்றையும் நடைமுறைப்படுத்த ஜனாதிபதி தலையிட்டாக வேண்டும். அப்படியில்லாவிட்டால் எம்.ஈ.டி (MED –Ministry of Economic Development) அல்லது எம்.ஓ.டி (MOD-Ministry of Defense) தலையிட்டாக வேண்டும். இதில் எம்.ஈ.டி என்றால் பசில் ராஜபக்ஷ, எம்.ஓ.டி. என்றால் கோதாபய ராஜபக்ஷ. பொருளாதார விவகாரம் என்றால் அங்கு செல்ல வேண்டும் பாதுகாப்பு விவகாரமென்றால் இங்கு வர வேண்டும். இவர்களுக்கு முதன்மையாக ஜனாதிபதி இருப்பார். இது தான் இங்கு பாரதூரமான நிலைமை.

கிழக்கு மாகாண தேர்தல் முடிவுகளை எடுத்துக் கொண்டால் எதிர்க்கட்சியினரின் பிளவுகள் காரணமாகத் தான் அரசாங்கத்தினால் சிறிய பெரும்பான்மையொன்றை பெற முடிந்தது. அடுத்த வருடத்தில் இன்னுமொரு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதன் மூலம் எதிர்க்கட்சியினர் மீது மீண்டுமொரு தாக்குதல் நடத்தப்படுகிறது. இவர்கள் பிளவுபட்டு நிற்பதே இதற்குக் காரணம்.


இனநெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு முன்னதாக நாம் இந்த முறையை மாற்ற வேண்டும். இந்த முறையை மாற்றி அதன் பின்னர் பாராளுமன்ற முறையொன்றுக்கு பிரவேசித்து அதிகாரங்களை நன்கு பகிரவும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் வேலைத் திட்டமொன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்பதே எனது அபிப்பிராயம். இது அனைத்து இன மக்களுக்கும் பயனுடையதாக இருக்கும். ஏனெனில் யாதுமொரு பிரதேசத்தினதும் செயற்பாட்டு அதிகாரமானது அந்தப் பிரதேசத்தின் பெரும்பான்மையினருக்குக் கிடைக்க வேண்டும் என்பதே எனது கோட்பாடு. அதில் பெரும்பான்மையினர் அங்கிருக்கும் சிறுபான்மையினரிடமும் சுமுகமாக நடந்துகொள்ளத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதைத் தான் 2009 ஆம் ஆண்டிலும் நாம் பிரேரித்தோம். மாகாணம் என்பது விசாலமானது. அதற்கு அதிகாரத்தைப் பகிரும் போது பிரச்சினை ஏற்படும். கிழக்கு மாகாணத்தில் அதுவே நடந்தேறியுள்ளது. மாகாணத்தின் பெரும்பான்மையை அரசாங்கம் பெற்றுள்ளது. எனினும் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. நாம் மாவட்ட முறைமைக்குச் சென்றால் அவ்விரு மாவட்டங்களும்தமிழ்க்கூட்டமைப்புக்குச் சென்றுவிடும். இந்த யோசனையைத் தான் நான் 2009 ஆம் ஆண்டு கொண்டு வந்தேன்.

ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது பெரும்பான்மையைப் பெறும் தமிழ் அமைப்பொன்றோ அங்குள்ள முஸ்லிம், சிங்கள சமூகங்களை ஒற்றுமையாக வைத்துக்கொள்ளச் செயற்பட வேண்டும். வேண்டுமென்றால் இரண்டு மாவட்டங்களைஇணைக்கலாம். எமக்கு அதிகாரங்களைப் பகிர்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அதிகாரத்தை பகிர்ந்தால் அப்பிரதேச மக்கள் சுபீட்சமடைவர். அவ்வாறு மக்கள் முன்னேற்றம் கண்டால் நாடும் அபிவிருத்தி அடையும். அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் இதுவே கடைப்பிடிக்கப்படுகிறது. உதாரணமாகதமிழ்நாடு, கர்நாடகா போன்ற மாநிலங்கள் அபிவிருத்தியடைந்ததும் முழு இந்தியாவும் முன்னேற்றம் காண்கிறது.

எவ்வாறிருப்பினும் இவை அனைத்திற்கும் முதலாவதாக ஜனாதிபதி, எம்.ஈ.டி மற்றும் எம்.ஓ.டி ஆகிய இடங்களில் மட்டும் அதிகாரங்கள் அனைத்தும் குவித்து கிடப்பதை இல்லாமல் செய்து பாராளுமன்ற முறைமை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமே அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். தேவையென்றால் செனட் சபை போன்ற நகர்வுகளையும் இனநெருக்கடித் தீர்வின் பொருட்டு மேற்கொள்ளலாம். அதிகாரம் ஒரு இடத்தில் குவிந்து கிடப்பதால் அது பாரிய ஊழல் மோசடிகளுக்கும் வழி வகுக்கிறது. ஆகவே, அதிகாரப்பகிர்வு, மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி ஆகியவற்றுக்கே நாம் முன்னுரிமை வழங்க வேண்டும்.


# கிழக்குத் தமிழர்களின் பிரதான குரலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



குமார் டேவிட்

## பிள்ளையானைத்தவிர, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலில் போட்டியிட்ட ஒரு தமிழ் வேட்பாளருமே தெரிவு செய்யப்படவில்லை

உள்நாட்டு அரசியல்



இம்மாதமுற்பகுதியில் நடைபெற்ற மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல்களின் முடிவுகளைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டிய அம்சம் கிழக்கில் வாழும் தமிழ்மக்களின் பிரதான குரலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சியின் சின்னத்தின் கீழ் போட்டியிட்டிருந்தாலும்) வெளிக்கிளம்பியிருப்பதேயாகும். இது இவ்வாறென்றால் வடமாகாணத்தின் நிலைமை என்ன? இரண்டாவது விடயம் கிழக்கு மாகாணத்தில் ஒரு முஸ்லிம் அரசியல் தளம் அதன் தலையை நிமிர்த்தியிருக்கிறது. மூன்றாவது சிங்களப்பகுதிகளில் மகிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதன் செல்வாக்கை தக்க வைத்துக்கொண்டிருக்கிறது. மூன்று அல்லது நான்கு வருடங்களில் நடைபெறக்கூடிய அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த முடிவுகளின் தாக்கம் எத்தகையதாக இருக்கும்? நான்காவது விடயம், ஐக்கிய தேசியக் கட்சி அலங்கோலமாகக் காட்சிதருகிறது.

### தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரமே தமிழ் வாக்குகள்

தேர்தல் முடிவுகள் பற்றிப் பேசும்போது இலங்கைத் தமிழரசுக்கட்சி என்றில்லாமல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்று குறிப்பிடுவதற்கே நான் விரும்புகிறேன். தமிழ்க்கட்சிகளின் ஒரு ஐக்கிய முன்னணி என்ற அர்த்தத்தில் குறிப்பிடுவதே நல்லதாகும். கிழக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 51 சதவீதமான வாக்குகளைக் கூட்டமைப்பு பெற்றிருக்கும் அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட பிள்ளையான் 31 சதவீத வாக்குகளையே பெறக்கூடியதாக இருந்தது. தமிழர்களின் விசுவாசம் யாருடன் இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா? அத்துடன் வடமாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்பட்டால் நிலைமை என்ன என்பதையும் இது கட்டியம் கூறி நிற்கிறதல்லவா?

அரசியற் களத்தில் இருந்து பிள்ளையானின் கட்சி

துடைத்தெறியப்பட்டிருக்கின்றமை முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். முன்னாள்புலிகள்இயக்கப்போராளி பிள்ளையான் (சிவனேசதுரை சந்திரகாந்தன்) ராஜபக்ஷ விசுவாசியாக மாறி (வடக்கில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நேர்ந்ததைப்போன்று) 70 சதவீதம் தமிழர்களைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் விழுந்து நொருங்கிப் போயிருக்கிறார். பிள்ளையானைத் தவிர மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலில் போட்டியிட்ட ஒரு தமிழ் வேட்பாளருமே தெரிவு செய்யப்படவில்லை. ஏனையவர்கள் சகலருமே முஸ்லிம்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முஸ்லிம் வாக்காளர்கள் தங்களது விருப்புவாக்குகளில் ஒன்றை பிள்ளையானுக்கு அளித்திருக்காவிட்டால், அவரும் கூட வெற்றி பெற்றிருக்கமாட்டார்.

வடமாகாண சபைத்தேர்தல் எப்போது என்றாலும் நடத்தப்படும்போது என்ன நேரும் என்பதற்கான அறிகுறிகளாக இவை அமைகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியைப் பெறும்.இதில் ஒரு மறைமுகமான முக்கியத்துவம் இருக்கிறது. ஏனென்றால், ராஜபக்ஷாக்களைப் போன்று வேறு யாருமே அரசியல் நிலைவரங்களை நுணுக்கமாக -மிகவும் அவதானமாக நோக்கியிருக்கமாட்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான தமிழர்களின் விசுவாசத்தின் இன்னொரு அர்த்தம் சர்வதேச சமூகம் நெருக்குதல் கொடுக்காதபட்சத்தில் வடமாகாணசபைத் தேர்தலை ஜனாதிபதி நடத்தமாட்டார் என்பதே யாகும்.

வடமாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முழுக்க முழுக்கத் தோற்கடிக்கப்படும் என்பது மாத்திரமல்ல இங்கு முக்கியமானது. அதைவிட முக்கியமான ஒரு அம்சம் என்னவென்றால், ஏதேச்சாதிகாரப் போக்குடைய அரசாங்கங்கள் எந்த வடிவிலான எதிர்ப்புணர்வையும் சகித்துக்கொள்ளப் போவதில்லை. ஜனாதிபதி வழங்க முன்வருவதை அலட்சியம் செய்யக்கூடிய ஒரு மாகாண சபை முற்றுமுழுதான அதிகாரத்துக்கு பழக்கப்பட்டுவிட்ட ஒரு ஏதேச்சாதிகாரியைப் பொறுத்தவரை, ஒரு ஆபத்தாகும். அதை அவர் ஒருபோதும் பொறுத்துக் கொள்ளமாட்டார். இன்னொரு அபத்தம் என்னவென்றால் தமிழர்களுக்கு ஒரு வகையான சுயாட்சியை வழங்குவதற்காகத்தான் அரசியலமைப்புக்கான



கிழக்கின் புதிய முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத்தை ஜனாதிபதி முன்னிலையில் வாழ்த்தும் பிள்ளையான்

> அரசியல் களத்திலிருந்து பிள்ளையானின் கட்சி துடைத்தெறியப் பட்டிருக்கிறது. ராஜபக்ஷ விசுவாசியாக மாறிய முன்னாள் புலிகள் இயக்க போராளி 70% தமிழர்களை கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் விழுந்து நொருங்கிப் போயிருக்கிறார்

13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணசபைகள் முறை கொண்டுவரப்பட்டது. ஆனால், தமிழ் மாகாணத்தைத் தவிர ஏனைய சகல மாகாணங்களும் மாகாண சபையைக் கொண்டிருக்கின்றன.

### கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகள் எல்லாம் மிகவும் கோணலாகிப்போய்விட்டன. ஆழமான சிக்கல்களின் நிலைக்களனாக அந்த மாகாணம் மாறியிருக்கிறது. கிழக்கு மாகாணத்தின் சமூகப் பரம்பலை அண்ணளவாகக் குறிப்பிடுவதானால், முஸ்லிம்கள் 40 சதவீதம், தமிழர்கள் 35 சதவீதம், 25 சதவீதம் சிங்களவர்கள். தேர்தல் முடிவுகள்; ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 32 சதவீதமான வாக்குகளைப் பெற்று போனஸ் ஆசனங்கள் (2) உட்பட 14 ஆசனங்களைத் தனதாக்கிக் கொண்டுள்ளது. 31 சதவீத வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 11 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. அதே வேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 21 சதவீதமான வாக்குகளைப் பெற்று 7ஆசனங்களைத் தன்வசமாக்கியிருக்கிறது. 12 சதவீதமான வாக்குகளைப் பெற்று ஐக்கிய தேசியக்கட்சிக்கு 4 ஆசனங்கள். சிங்கள கடும் போக்குடைய அமைச்சர் விமல் வீரவன்சவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி 1.5 சதவீதமான வாக்குகளைப் பெற்று ஒரேயொரு ஆசனத்துக்குரியதாகியது. இவையெல்லாம் சேர்ந்து கிழக்கு மாகாண சபையின் மொத்தம் 37 ஆசனங்களுக்கான கணக்குகளாகின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை, அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் தேசிய சுதந்திர முன்னணியின் வீரவன்சவைப் போன்று ராஜபக்ஷவின் அமைச்சரவையின் ஒரு உறுப்பினர். மத்திய அரசாங்கத்தின் ஒரு பங்காளி. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகள் விரும்பினால், கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடலாம் என்று இணக்கம் ஏற்படுத்தப்பட்டதுபோல் தெரிகிறது. ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் சார்பில் தெரிவான 12 உறுப்பினர்களில் 7 பேர் முஸ்லிம்கள், ஐ.தே.க.வின் சார்பில் தெரிவான நான்கு உறுப்பினர்களில் ஒருவர் முஸ்லிம். ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸின் 7 உறுப்பினர்களுடன் சேர்த்து கிழக்கு மாகாண சபைக்கு 15 முஸ்லிம்கள் தெரிவாகியிருக்கிறார்கள். மொத்தம் 15 முஸ்லிம் உறுப்பினர்கள் என்ற போதிலும், அவர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளின்சார்பில்சிதறிக்கிடக்கிறார்கள். இது ஒரு பிரச்சினைக்குரிய விவகாரம். ஏனென்றால், தங்களுக்கு நாட்டில் அரசியல் செல்வாக்கு இல்லாமல் இருப்பதாக, அதுவும் குறிப்பாக, முஸ்லிம்கள் மிகவும் தெளிவான பேரெண்ணிக்கையில் வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் கூட அந்த அரசியல் செல்வாக்கைப்

பெறமுடியாதிருப்பதாக நீண்டகாலமாக முஸ்லிம்கள் புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய புலம்பலைக் கைவிட்டு, தங்களது பிரச்சினைகளை வேறுயாரும் தீர்த்துவைக்கப்போவதில்லைஎன்பதைப் புரிந்து கொண்டு முஸ்லிம்கள் தாங்கள் ஒன்றிணைய வேண்டியதருணம் இது. மற்றையவர்களுடைய பிரச்சினைகளை யாருமே தீர்த்துவைப்பதில்லை. முஸ்லிம்கள் ஐக்கியப்பட்டு கிழக்கில் தங்களது மக்களுக்காக அபிவிருத்தித் திட்டமொன்றை வகுக்கவேண்டியது அவசியமாகும்.

ஹக்கீம் அழகானவர்தான், அதில் சந்தேகமில்லை. ஆனால், இளமையில் இருந்ததைவிடவும் இப்போது அதுவும் குறிப்பாக மகிந்த ராஜபக்ஷவினாலும், இராஜவரோதயம் சம்பந்தனாலும் காதல் நாடி ஊடாட்டம் கொள்ளத் தொடங்கிய பிறகு அவர் கூடுதல் அழகானவராகிவிட்டார். வடமாகாணத்தைப் பொறுத்தவரை ராஜபக்ஷவின் அணுகுமுறை எவ்வாறு இருக்கின்றதோ, அதேபோன்றே கிழக்கு மாகாணத்திலும்முஸ்லிம்தமிழ்அதிகாரத் தளமொன்று கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கக் கூடியதாக வெளிக்கிளம்புவதைத் தடுப்பதற்கு அவர் முனைப்பாக இருக்கிறார். சம்பந்தனும் கூட அதேயளவுக்கு கிழக்கு மாகாணத்தில் தனது வெற்றியை இறுதிச் சாதனையுடன் முடிசூடிக்கொள்வதில் ஆர்வமாக உள்ளார். கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸுக்கு முதல் இரண்டரை வருட காலத்துக்கும் விட்டுக் கொடுப்பதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வந்தது சரியானதே. இரண்டாவது இரண்டரை வருடகாலத்துக்கு கூட்டமைப்பு முதலமைச்சர் பதவியைத்தனதாக்கிக் கொள்வதென்பதும் பொருத்தமான ஏற்பாடேயாகும். கிழக்கு மாகாணம் முஸ்லிம்களைப் பெருமளவில் கொண்டதாகும். முஸ்லிம்கள் தங்களது சமூகத்தை மேம்படுத்துவதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நிச்சயமாக வாய்ப்பளிக்கப்படவேண்டும். பழைய தொண்டமான் மலையகத் தமிழ் மக்களுக்குச்செய்திருக்கக்கூடிய சேவையுடன் ஒப்பிடும்போது முஸ்லிம் தலைவர்கள் தங்கள்சமூகத்துக்கு பெரிதாகஎதையுமே செய்துவிடவில்லை.

இந்தக் கட்டுரையை நீங்கள் வாசிக்கும்போது ஹக்கீம் யாருடன் அணி சேருவது என்பதை தீர்மானித்திருக்கக் கூடும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் அணிசேருவதற்குத் தீர்மானித்தாலும் சரி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் அணிசேருவதற்குத் தீர்மானித்திருந்தாலும்சரி, அது ஹக்கீமைப் பொறுத்தவரை வேதனையானதாகவே இருக்கும். அவரது தீர்மானத்தின் விளைவாக மாகாணசபை உறுப்பினர்கள் மத்தியில் பிளவு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கவே செய்யும். ராஜபக்ஷவுக்கு எதிராகப் போவதற்கு ஹக்கீம் எடுக்கக்கூடிய தீர்மானம் அவரது அமைச்சர் பதவிக்கு ஆபத்தைத் தேடிவிடும். அத்துடன் சட்டபூர்வமானவையோ சட்ட விரோதமானவையோ எதுவென்றாலும் பணத்துக்காகவும் வரப்பிரசாதங்களுக்காகவும் பதவிகளை வகிக்க ஆசைப்படும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து ஹக்கீம் தனிமைப்படக் கூடிய ஆபத்தையும் அது கொண்டுவந்துவிடும். ராஜபக்ஷவின் முன்னால் அடிபணிந்து, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அழைப்பை ஹக்கீம் நிராகரிப்பதற்கு எடுக்கக்கூடிய தீர்மானம் முஸ்லிம்களின் தனித்துவ அடையாளத்தை முனைப்புறுத்திச் செயற்படுவதற்கான ஒரு வாய்ப்பைத் தாரைவார்த்த ஒரு தலைவர் என்ற பெயரை சரித்திரத்தில் அவருக்குக் கொடுத்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.



சிங்களப் பகுதிகளில் ஜனாதிபதி ராஜபக்ஷ தமது செல்வாக்கை தொடர்ந்து நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார். ஐ.தே.க.வின் செல்வாக்கு அலங்கோலமானதாகவே இருக்கிறது

### சிங்களப் பகுதிகள்

சிங்களப் பகுதிகளில் மகிந்த ராஜபக்ஷ தனது செல்வாக்கைத் தொடர்ந்து நிலை நிறுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது என்பதை இத்தேர்தல் முடிவுகள் உணர்த்தி நிற்கின்றன. இன்னும் மூன்று அல்லது நான்கு வருடங்களில் நடைபெறக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் இதன் தாக்கங்கள் எவ்வாறு அமையும்? சில புள்ளிவிபரங்களைப் பார்ப்போம். அநுராதபுரம், பொலனறுவை, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 60 சதவீதமான வாக்குகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றிருக்கிறது. தேர்தல்கள் நடத்தப்படாத தென்மாகாணத்துடன் சேர்ந்து இந்த மாவட்டங்கள் சிங்கள பிரதான நிலப்பிராந்தியமாக அமைகின்றன. இந்த நான்கு மாவட்டங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியினால் 35 சதவீத வாக்குகளை மாத்திரமே பெறக்கூடியதாக இருந்திருக்கிறது. இலங்கையில் ஆளும் கட்சியே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் வெற்றிபெறுவது வழமையாகும். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இது எதிர்மாறாகவே அமையும். அங்கெல்லாம் இடைத்தேர்தல்கள் எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான வாய்ப்புகளாக இருக்கின்றன. இலங்கையில் நிலைமை மற்றவிதமாக இருப்பதற்குக் காரணம் அரசாங்கத்தின்பக்கம் நிற்பதன் மூலமாக சலுகைகளைப் பெற முடியுமென்று மக்கள் மத்தியில் வளர்ந்திருக்கும் ஊழல் தனமான சிந்தனைப் போக்கேயாகும்.

வாக்களிப்புப் போக்குகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய தேவையும் இருக்கிறது. 2008 மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற்ற போது போர் தொடர்ந்து கொண்டே இருந்தது. 2010 பாராளுமன்றத் தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போர்வெற்றிக் குதூகல அலையில் மிதந்துகொண்டிருந்தது. 2008இல் வடமத்திய மாகாணத்திலும் சப்ரகமுவவிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 58 சதவீத வாக்குகளும் ஐக்கியதேசியக் கட்சிக்கு 40 சதவீத வாக்குகளும் கிடைத்தன. சுதந்திர முன்னணி

யின் செல்வாக்கு அதிகரித்த அதே வேளையில், 2012இல் ஐ.தே.க.வின் செல்வாக்கு சுமார் 5சதவீதத்தால் வீழ்ச்சி கண்டது. அதே மாவட்டங்களில் 2010 பாராளுமன்றத் தேர்தல்களில் இந்தக் கட்சிகள் பெற்ற வாக்குகளைப் பார்க்கும் பொழுது போக்கு எதிரான திசையில் இருந்தது. இந்த மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 66 சதவீத வாக்குகளைப் பெற்ற அதேவேளையில், ஐ.தே.க.31 சதவீத வாக்குகளை பெறக்கூடியதாக இருந்தது. எனவே ஐ.தே.க.2012இல் 5 சதவீதத்தால் செல்வாக்கை அதிகரித்துக் கொண்ட அதேவேளை, சுதந்திர முன்னணியின் செல்வாக்கில் வீழ்ச்சி கண்டது.

சுருக்கமாகச் சொல்வதானால் சிங்கள மையப் பகுதிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்குகள் 2008இல் 58 சதவீதமாக இருந்தது. 2010இல் இது 66 சதவீதமாக அதிகரித்தது. மீண்டும் 2012இல் 60 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. ஐ.தே.க.வைப் பொறுத்தவரை 2008இல் 40 சதவீதமாக இருந்த அதன் செல்வாக்கு 2010இல் 31 சதவீதமாகக் குறைந்தது. 2012இல் ஓரளவு தேறி ஐ.தே.க.வின் வாக்குகள் 35 சதவீதமாகின. ஒட்டுமொத்தமாக நிலைவரத்தைப் நோக்கும்போது 2008 இற்கும் 2010இற்கும் இடையில் இழந்த வாக்குகளில் அரைவாசியை ஐ.தே.க. மீண்டும் இப்போது பெற்றிருக்கிறது.

இலங்கையின் பொருளாதாரம் கீழ் நோக்கிய திசையிலே சென்றுகொண்டிருக்கிறது. உலகளாவிய பொருளாதார மந்தநிலை காரணமாக வர்த்தகத்தில் பாரதூரமான சரிவு காணப்படுகிறது. இறக்குமதிகளில் 60 சதவீதமானவையே ஏற்றுமதிகளாக இருக்கின்றன. எண்ணெய் விலைகள், நிதிநெருக்கடி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை அதிகரிக்கிறது. வர்த்தகப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. உலகளாவிய உணவு நெருக்கடியும் இலங்கையின் பொருளாதாரத்தையும் கடுமையாக பாதித்திருக்கிறது. எவ்வாறெனினும் இந்தப் பொருளாதார நெருக்கடியின் வேதனை குட்டி முதலாளிகளைப் பாதிக்கவில்லை. அதாவது போரின் முடிவின் விளை பயன்களை கிராமப்புற மக்களும் சிறிய வர்த்தகத்துறையினரும் விவசாயிகளும் பெறக்கூடியதாக இருக்கிறது. இதன் காரணத்தில் தான் ராஜபக்ஷாக்கள் சிங்கள குட்டி முதலாளிகள் மத்தியில் தங்களது ஆதரவை தொடர்ந்தும் உறுதியாகத் தக்கவைத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. கொழும்பு வாழ் மேல்மட்ட சமூகத்தினர் அரசாங்கத்திற்கு எதிரான உணர்வையே கொண்டிருக்கிறார்கள். வர்த்தகத்துறையிலும் தொழிலாளர்களும் மற்றும் சிறுபான்மையின மக்களும் அவ்வாறு அரசுக்கெதிரான உணர்வுடனேயே இருக்கின்றனர்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழைப்பை நிராகரித்து ரவூப் ஹக்கீம் மேற்கொண்ட தீர்மானம் முஸ்லிம்களின் தனித்துவ அடையாளத்தை முனைப் புறுத்திச் செயற்படுவதற்கான ஒரு வாய்ப்பைத் தாரைவார்த்த ஒரு தலைவர் என்ற பெயரை சரித்திரத்தில் அவருக்கு கொடுக்கும்

2005இல் ஜனாதிபதி ராஜபக்ஷ அதிகாரத்திற்கு வந்ததிற்குப் பிறகு வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் இலங்கையில் ஒரு தொழிற்சாலை கூட கட்டப்பட்டதில்லை. இந்நிலைமை முதலீட்டாளர்களின் நம்பிக்கையின்தன்மையை வெளிக்காட்டுவதாக அமைகிறது. பங்குச் சந்தைக்கு வெளியே வெளிநாட்டு முதலீடு ஹோட்டல் துறையில் மாத்திரமே குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. உள்ளக கட்டமைப்புகளில் சீனாவின் பணம் குவிந்துகொண்டிருப்பது வேறுவிடயம். அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சியை பல வருடங்களாக ஒரு மூலைக்குள் தள்ளி வைத்திருப்பதில் வெற்றி கண்டிருக்கக் கூடுமென்றாலும் தீவிரமடைந்து வருகின்ற சமூகஸ்திரமின்மைக்கு தாக்குப் பிடிக்கக்கூடியளவிற்கு பலம்பொருந்தியதாக அதன் தேர்தல் வெற்றிகள் அமையவில்லை என்று தான் கூறவேண்டும்.

## ஐ.தே.க.வின் நிலை என்ன?

இனவெறிப்போரில்கண்டவெற்றியின் காரணமான குதூகலத்தில் மிதந்த ராஜபக்ஷ அணியினர் 2010 ஜனாதிபதித் தேர்தலிலும்பாராளுமன்றத்தேர்தலிலும் கண்ட வெற்றிகளுடன் ஒப்பிடும்போது தற்போதைய வெற்றியின் அர்த்தம் ஏதும் இல்லை. இந்த நிலைவரங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது ஒரு முடிவிற்கு எம்மால் வரக்கூடியதாக இருக்கிறது. வாக்காளர்மத்தியில்ஐ.தே.க. வின் செல்வாக்கு அலங்கோலமானதாகவே இருக்கிறது. தற்போது நடைபெற்று முடிந்த மாகாணசபைத்தேர்தல்களில் 40சதவீத வாக்குகளைத் தாண்டி 45 சதவீதத்திற்கு அண்மித்ததாக ஐ.தே.க. சென்றிருக்குமேயானால் இத்தகைய தொரு கசப்பான தீர்ப்பைச் சொல்வதை நான் தவிர்த்திருக்கக்கூடியதாக இருக்கும். ஆனால் எனது தீர்ப்பு இதுவிடயத்தில் தவிர்க்க முடியாதது. ஏனென்றால் ஐ.தே.க.ரணிலின் தலைமையின் கீழிருந்தால் என்ன, சஜித்தோ அல்லது கருஜயசூரியவோ அதற்கு தலைவராக வந்தாலும்கூட தனியாக தேர்தல்களில் போட்டியிடக்கூடிய சூழ்நிலை இல்லை. குறிப்பாகச் சொல்வதானால் 2016 பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் உட்பட அதுவரையான கால கட்டத்தில் ஐ.தே.க.வுக்கு வெற்றி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஐ.தே.க. ஆதரவாளர்கள் பலர் வாக்களிக்காமல் இருக்கிறார்கள். அதனாலேயே அந்தக் கட்சி தேர்தல்களில் சிறப்பான செயற்பாடுகளைக் காண்பிக்க முடியாமல் இருக்கிறது என்று கூறப்படுவதை நான் நிராகரிக்கிறேன். வெளிப்படாத வாக்கு வங்கியொன்று ஐ.தே.க.வுக்கு இன்னமும் இருப்பதாக நான் நம்பவில்லை. சிலர் அத்தகைய வங்கியொன்று இருப்பதாகவும் அது சரியான நேரத்தில் வெளியில் வரும் என்றும் கூறுவதில் திருப்திகாண்கிறார்கள். ரணிலின் தலைமையின் கீழ் என்றால் என்ன, கருவின் தலைமையில் என்றால் என்ன, சஜித்தின் தலைமையின் கீழ் என்றால் என்ன ஐ.தே.க.இப்போது ஒரு நொண்டிக்குதிரையே.

ஐ.தே.க.அரசியலைப்பற்றி மிகுந்த கரிசனையுடன் சிந்திக்கவேண்டிய தேவை இருக்கிறது. 2 தசாப்தங்களாக அது அரசியல் கலையையும் மறந்துவிட்டது. நிறைவேற்று அதிகாரஜனாதிபதியின் ஆட்சிமுறையை ஒழிக்கவேண்டும் என்ற இலக்கிற்காகஎதிரணியை ஐக்கியப்படுத்த வேண்டிய சவால் ஐ.தே.க.விற்கு இருக்கிறது. அதைச் சாதித்த பிறகு வெஸ்ட்மினிஸ்டர் முறையின் கீழ் பாராளுமன்றத்திற்குச் சென்று அதன் அதிர்ஷ்டத்தை ஐ.தே.க.பரீட்சிக்கலாம்.




# கிழக்கு முஸ்லிம்களின் தனித்துவ வேட் இரு மாகாண அமைச்சர்கள் பதவிக்குள்

## தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு விட்டுக்கொடுக்க முன்வந்த முதலமைச்சர் பதவியை விட ஆளும் கட்சி வழங்கிய இரு மாகாண அமைச்சர் பதவிகள் எவ்வாறு கனதியானவையாக மாறின?

ஆளுங் கட்சிக்கான ஆதரவுத் தீர்மானத்தை எடுப்பதில் பத்து நாட்களாக இருந்து வந்த இழுபறி நிலையானது மாகாண மட்டத்திலான தேசிய அரசு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விடுத்த பிரமாஸ்திரத்துடன் உடனடியாக முடிவுக்கு வந்து விட்டது. சம்பந்தரின் அரசியல் சாணக்கியம் அமைச்சர் ஹக்கீமின் பூரண சரணாகதியை துரிதகதியில் அம்பலப்படுத்தி விட்டது. இனிப் பேரப்பேச்சுக்கு ஆளுங் கட்சியின் கதவு திறந்திருக்காது என்ற நிலையை கூட்டமைப்புத் தலைவரின் அறிவிப்பு நாசூக்காக வெளிப்படுத்திய பின்னர் எலிகள் வளைக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

முதலமைச்சர் பதவி ஒருபோதும் முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்பட மாட்டாது



# கையை முடக்கிய ஹக்கீம்

மாறவர்மன்

என்றும் ஆகக் குறைந்தது மாகாண அமைச்சரவையில் இரண்டு அமைச்சர் பதவிகளைக் கேட்டு இறுதியில் அவர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் சாத்தியமே உள்ளதென்றும் எனது முன்னைய கட்டுரையில் ஊகந் தெரிவித்திருந்தேன். தற்போது கூட்டமைப்பு விடுத்த முதலமைச்சர் அழைப்பின் புண்ணியத்தினால் அவர் இரு அமைச்சர் பதவிகளை மாகாண சபையில் பெற முடிந்தது. இதை விட, முஸ்லிம் காங்கிரஸ் என்னதான் சாதிக்கப்போகின்றது என்பதைஎதிர்வரும் வருடங்கள் பட்டவர்த்தனமாக்கும்.

நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் யார் வென்றார்கள், தோற்றார்கள்என்பது ஒருபுறமிருக்கநடந்தவை யாவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நினைத்தபடிதான் என்பது அவரது தனிப்பட்ட அதிர்ஷ்டத்தின் உச்சத்தைக் காட்டுகின்றது. ஆரம்பத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் சேர்ந்து தேர்தல் களம் இறங்குவது பற்றிய பேச்சு வார்த்தைகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட்டபோது அதற்கு இரண்டு விடயங்கள் அரசாங்கத்தினால் தெளிவாக்கப்பட்டன. முதலமைச்சர் பதவி காங்கிரஸுக்குக் கிடையாது, அத்துடன் மூன்று மாவட்டங்களிலும் மொத்தத்தில் எண்ணிக்கையில் கூடுதலான முஸ்லிம் வேட்பாளர்களை ஆளுங்கட்சியே களமிறக்கும் என்பதே இவ்விரு நிபந்தனைகளாக இருந்தன. ஒருவாறு தனது கட்சியினரைச் சமாளித்து இந்நிபந்தனைகளுக்கு அமைவாக கூட்டமைக்க காங்கிரஸ் தலைவர் விரும்பியிருந்தாலும் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் வேட்பாளர் எண்ணிக்கைத் தெரிவில் உடன்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. இதனைச் சாதகமாகப் பாவித்து ஹக்கீம் கௌரவமாகப் பிரிந்து நின்று தேர்தலைச் சந்தித்தார்.

தனித்துப் போட்டியிட்டாலும் தலைவரின் தணியாத தாகமாக இருந்தது இரண்டு பிரதான விடயங்களாகும். எவ்விதத்திலும் ஆளுங்கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கக் கூடாது, காங்கிரஸில் வெற்றி பெறுவோரின் எண்ணிக்கை எட்டுக்கும் குறையக் கூடாது. இது இரண்டும் நிறைவேறுவதாக இருந்தால் கூட்டமைப்பு மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் தனது பலத்தை நிரூபிக்க வேண்டும். தானில்லாமல் ஆளுங்கட்சி மாகாண சபையில் அரசாங்கத்தை அமைக்கக் கூடாது என்பதில் மட்டுமே அவரது முதல் கவனம் இருந்ததே தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து ஆட்சியமைப்பது என்பது அவரைப் பொறுத்தவரையில் இரண்டாம் பட்சமான விடயமாகவே இருந்தது. கூட்டமைப்பு எப்படியும் முதலமைச்சர் பதவியை விட்டுத் தரும் என்பது அமைச்சர் ஹக்கீமுக்கு முன்கூட்டியே சந்தேகமறத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது மட்டும் அவருக்குத் தேவைப்படும் விடயமாக இருக்கவில்லை என்பது காங்கிரஸின் உள்வீட்டுப் பிள்ளைகளுக்கு நன்கு தெரியும்.

கிழக்கில் முஸ்லிம் முதலமைச்சர் என்பது பிராந்தியத் தலைமையை நாளடைவில் உருவாக்கிவிடும். ஏற்கனவே முணுமுணுப்புகளுக்கு முகங்கொடுத்து வரும் காங்கிரஸ் தலைமைக்கு இது பெரிய தொரு சவாலாகும். எனவே தலைமைக்குப் பலம் சேர்ப்பதானால் மத்தியில் தலைமையின் சொல்லுக்கு மதிப்பேற்படுத்த வேண்டும். இதை வைத்துத் தான் கிழக்கு ஆதரவாளர்களைக் கட்டுப்படுத்த

லாம் என்பது ஹக்கீமின் கணக்கு. தலைமைக்கு உதவாத முதலமைச்சர் பதவி என்பதால்த் தான் அவர் ஆரம்பத்திலிருந்தே அது பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் பக்க விளைவாக அவருக்கு ஏற்பட்ட பிரச்சினை தனது எதிரணி முஸ்லிம் கட்சிகளிலிருந்து யாரும் முதலமைச்சரானால் கட்சியைக் காப்பாற்ற முடியாது என்பது. அதையும் ஒருவாறு சமாளிக்க உதவினார் ஜனாதிபதி. எனவே தான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராகி விட்டார். ஜனாதிபதிக்கு நிறையவே நன்றிக்கடன் பட்டுள்ளது காங்கிரஸ் தலைமை.

ஆனால் இவை யாவற்றுக்கும் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் கொடுத்த விலை என்ன? முதலமைச்சர் பதவியும் இரண்டு அமைச்சர்கள் பதவியுந் தரத் தயாராக இருந்த கூட்டமைப்புடன் சேர்ந்து ஆட்சியமைத்தால் கிழக்கு முஸ்லிம்கள் பெற்றிருக்கக்கூடிய வாய்ப்புகளை விட காங்கிரஸ் எதை அதிகமாகப் பெற்றுள்ளது? அதுவும் எதைக் கொடுத்து எதைப் பெற்றுள்ளது என்பதை ஆழமாகச் சிந்தித்து கிழக்கு முஸ்லிம்கள் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வரவேண்டும்.

### காங்கிரஸ் தலைமையின் காட்டில் மழை

அமைச்சர் ஹக்கீம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்ததைப் போலவே ஆளுங்கட்சிக்கு ஆசனங்களின் எண்ணிக்கை குறைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசன எண்ணிக்கை அதிகரித்து விட்டது. தனது பேரம்பேசும் சக்தியை அதிகரிப்பதற்கு இதைவிட வாய்ப்பானதொரு தருணத்தை அவர் எதிர்பார்த்திருந்திருக்க மாட்டார். "போனால்போ" என்று சொன்ன ஆளுங்கட்சி இப்போது "வா ராசா வா" என்று "வெற்றிலை" வைத்து அழைக்கின்றது. முதலமைச்சர் பதவி பற்றி அலட்டிக் கொள்ளாத காங்கிரஸ் தலைவரை அதுபற்றிப் பேசும்படி நிர்ப்பந்தித்தது காங்கிரஸ் வாக்குகளல்ல. கூட்டமைப்பு கூடிய ஆசனங்களைப் பெற்றதாலும் ஆளுங்கட்சி அம்பாறையில் கோட்டை விட்டதாலுமே விரும்பாத பதவியைக் கேட்டு நின்றார் அமைச்சர் ஹக்கீம். தான் கணக்கிட்ட எட்டு ஆசனங்களைப் பெறாத தோல்வியை மற்ற இரு பிரதான கட்சிகளின் செயற்பாட்டால் சமாளிக்கும் நிலைக்கு வந்துவிட்டார் அவர். இதுதான் காட்டில் மழை என்பதோ தெரியவில்லை.

# மாகாண சபைத் தேர்தல்கள் கற்றுத்தரும் பாடங்கள்



என்.சத்திய மூர்த்தி

இலங்கையில் நடந்து முடிந்த மூன்று மாகாணசபைத் தேர்தல்களின் முடிவுகள் எதிர்பார்த்தபடியே தான் அமைந்துள்ளன. எப்படி வடகிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய இரு மாகாணங்களிலும் மத்தியில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர (ஐ.ம.சு) கூட்டணி வெற்றி பெறும் என்று முன்னரே தெரிந்திருந்ததோ, அவ்வாறே, கிழக்கு மாகாணத்திலும்தமிழரசுக்கட்சிதலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 37 உறுப்பினர்கள் கொண்ட சபையில் அறுதிப் பெரும்பான்மை பெறுவது கடினம் என்பதும் புரிந்தே இருந்தது. மற்றப்படி, தேசிய அளவில் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க) வெற்றி பெறாவிட்டாலும், வடகிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அந்தக் கட்சியின் வாக்கு சதவீதம் உயர்ந்ததும் எதிர்பார்க்காத விடயம் அல்ல.

கிழக்கு மாகாணத்தில் 16 இடங்கள் வரை பெறமுடியும் என்று சில கூட்டமைப்புத் தலைவர்கள் கணக்குப் போட்டு வந்தாலும் அவர்களுக்கும் கடைசியில் கட்சிக்கு 11 அல்லது 12 இடங்களே கிடைக்கும் என்பது தெரிந்தே இருந்தது. என்ன, அவர்கள் எதிர்பார்த்தபடி, தமிழர் பகுதிகளில் (மட்டும்) 80-85 சதவீத வாக்குப்பதிவு நிகழ்ந்திருந்தால், கூட்டமைப்பு, கிழக்கு மாகாணம் முழுவதற்குமாக அதிகபட்ச வாக்குகளைப் பெற்று, அதன் காரணமாக இரண்டு "போனஸ்" இடங்களையும் பெற்று, தனது எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்துகொண்டு இருந்திருக்கலாம்.

தற்போது அந்த அதிகப்படியான இடங்கள் ஆளும் கூட்டணிக்குச் சென்று விட்டது. அதனால், அந்த அணி மொத்தம் 14 இடங்களை கிழக்கு மாகாணத்தில் பெற்றுள்ளது. எப்படியும் அந்த அணி ஆட்சியில் அமர்ந்து, மாகாணசபையில் சபாநாயகர் பதவியையும் தக்கவைத்துக் கொள்ள மொத்தம் 20 இடங்களாவது வேண்டும். மத்தியில் ஆளும் கூட்டணியில் பங்கு பெறும் அமைச்சர் விமல் வீரவன்சாவின் தேசிய சுதந்திர முன்னணி வெற்றி பெற்ற ஒரு இடத்தையும் சேர்த்து கணக்குப் போட்டால், ஆளும் கூட்டணிக்குகுறைந்தது 5 இடங்களாவது இன்னமும் தேவைப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகபட்ச இடங்களைப் பெற்று முன்னிலையில் இருந்திருந்தாலும் நிலைமை கிட்டத்தட்ட இது போன்றே அமைந்திருக்கும்.

இந்தப் பின்னணியில் தான், கிழக்கு மாகாணத்தில் மட்டுமாவது முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற ஏழு இடங்கள் முக்கியமாகிறது. அந்தக் கட்சி ஆதரவுடன் மட்டுமே மாகாணத்தில் ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலைமை உருவாகியுள்ளது. கிட்டத்தட்ட இத்தகைய சூழ்நிலை உருவாகும் என்பதை எதிர்பார்த்தே அந்தக் கட்சியும் தனித்துப் போட்டியிட முடிவு செய்தது. மத்தியில் ஆட்சியில் பங்கு வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ், ஆளும் கூட்டணியுடன் அணி சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டு இருந்தால், அந்த அணி பிரச்சினை எதுவும் இன்றி இன்று பதவியில் அமர்ந்திருக்கும். அத்தகையநிலைமைஉருவாவதைகருத்தில் கொண்டு தான் ஆளும் கூட்டணி, இடப் பங்கீட்டு பேச்சுவார்த்தைகளில், முஸ்லிம்காங்கிரஸ்கட்சியைகடைசிநேரத்தில் "கழற்றி விட்டதோ" என்னவோ?

அதன் காரணமாக மட்டுமே, ஆட்சிக்கு ஆதரவுதராவிட்டால், மத்தியில்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் இருந்து வெளியேற வேண்டும் என்ற நிலைமைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தள்ளப்பட்டுள்ளது. அது போன்றே, கிழக்கு மாகாணத்தில் ஆளும் கூட்டணியுடன் கை கோர்க்காவிட்டால், தனது கட்சியை உடைக்கும் முயற்சி ஏற்படும் என்ற அச்சம் ஏற்படவும் இந்த தேர்தல் முடிவுகள் காரணமாகி உள்ளன. அதாவது, வெளி உலகிற்கு இது முஸ்லிம் காங்கிரஸுக்கு அரசு அமைப்பதில் உள்ள

முக்கியத்துவத்தை பறைசாற்றுகிறது. அதேசமயம், அது குறித்த பாதகங்களையும் தன்னுள்ளேயே இந்தத் தேர்தல் முடிவுகள் கிழக்கு மாகாணத்தில் மட்டுமாவது தன்னுள்ளே மறைத்து வைத்துள்ளது.

### வாக்காளர்களின் எச்சரிக்கை மணி


வடகிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய இரண்டு மாகாணங்களிலும் எப்படி தேர்தல் முடிவுகள் அமைந்ததோ, அது போன்றே தேர்தல் பிரசாரமும் மும்முரமாக இருக்கவில்லை. தற்போது ரொக்கெட் வேகத்தில் பயணித்து வரும் விலைவாசி உயர்வு, இனப்போர் வெற்றியால் இந்த அரசிற்கும் ஜனாதிபதி மகிந்த தலைமைக்கும் சிங்கள மக்களிடையே

**தேர்தல் அரசியல் என்று வந்த பிறகு அதற்கான தர்க்கங்களோடும் கூட்டணி அரசியல் தர்மத்தோடும் செயற்பட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முனைப்பு காட்டியமை வரவேற்கத்தக்க விடயம். பிரச்சினைகளில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்ப்பதற்கு இது உதவும்**

கிடைத்திருந்த செல்வாக்கில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மை. அது போன்றே, சட்டம்-ஒழுங்கு முறை குறித்தும் மக்கள் மனதில் தோன்றி வரும் கவலைகள் பெருகி வருவதாகவே கருத இடம் இருக்கிறது.

ஆனால், இதுபோன்ற அன்றாட பிரச்சினைகள் கூட அரசிடம் இருந்து தேர்தல் வெற்றியை தட்டிப் பறிக்கும் அளவிற்கு இன்னமும் சென்றுவிடவில்லை என்று தேர்தல் முடிவுகள் தெளிவாக்கியுள்ளன. தற்போதைய தேர்தலில் இந்த இரு மாகாண தேர்தல்களிலும் கடந்த முறையை விட அரசு அணிக்கு கிடைத்துள்ள குறைவான வாக்குச் சதவீதம், அரசுக்கு மக்கள் விடும் எச்சரிக்கை. ஆனால், தற்போதைய நிலைமையை அரசு மாற்றி அமைக்க வேண்டும் என்ற அளவிற்கே அந்த எச்சரிக்கை அமைந்துள்ளது.

அது போன்றே, முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் மக்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு இன்னமும் தங்களை தயார்படுத்திக் கொள்ளவில்லை என்பதையும் இந்தத் தேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்தியுள்ளன. அதாவது, அரசின் தலைமை என்ற இடத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இடத்தில் ஐக்கிய தேசியக் கட்சியையோ அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையோ வைத்துப் பார்க்கும்



அளவிற்கு மக்களின் அரசு-எதிர்ப்பு உணர்வுகள் மாறிவிடவில்லை.

இதுவும் அரசிற்கு அளிக்கப்பட்டு வரும் ஆதரவின் அளவுகோல் மட்டுமல்ல, மகிந்த தலைமைக்கு சிங்கள வாக்காளர்களின் சிறிய சத்தத்துடனான எச்சரிக்கை மணி. அது போன்றே, தற்போதைய தலைமுறை மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் செயல்பட ஐக்கிய மக்கள் கட்சி அதிக தூரம் பயணிக்க வேண்டும் என்ற செய்தியும் இந்த தேர்தல் முடிவுகள் உணர்த்தி உள்ளன. அதாவது, கடந்த தலைமுறை வாக்காளர்களைப் போல் அல்லாது, தற்போது அவர்கள் “அரசு எதிர்ப்பு உணர்வு” என்ற அடிப்படையில் மட்டும் தேர்தல் மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த தயாரில்லை. அதற்கு அவ்வப்

முஸ்லிம் தேசியம் பற்றி உரத்துக் குரல் கொடுக்கும் முக்கிய புள்ளிகள் எவரையும் மாகாணத்திலோ அல்லது மத்தியிலோ ஏதாவதொரு “பசையான” பதவி என்ற உமலுக்குள் போட்டுச்சுருட்டிக்கொண்டால் ஐந்து வருடங்களுக்குச் சுருண்டு கிடப்பார்கள் என்பது அரசாங்கத்தின் கணக்கு மட்டுமல்ல, அமைச்சர் ஹக்கீமின் கணக்குந்தான்.

சிறுபான்மை இனமொன்று தனது அடையாளத்தை வரித்து நிற்பதற்கு அவசியமானதும் நிர்ப்பந்திப்பதுமான விடயங்கள் குறித்து துணிவானதொரு நிலைப்பாட்டை எடுப்பதற்கு முதற்தேவை ஆள்புல ஆதரவுத் தளமே என்று எனது முன்னையதொரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். அங்ஙனம் பார்ப்பின் காங்கிரஸைப் பொறுத்தளவில் பாராளுமன்றத் தேர்தலைவிட மாகாண சபைத் தேர்தல் முக்கியத்துவம் கூடியதாகும். இந்த முக்கியத்துவத்தை இல்லாமற் செய்யவே காங்கிரஸ் தலைமை முதலில் ஆளுங் கட்சியுடன் சேர்ந்து களமிறங்கத் திட்டமிட்டது. ஆனால் களமுனை எதிர்ப்பால் அத்திட்டம் மறுபரிசீலனைக்கு உட்பட்டது நாமறிந்ததே. பிராந்தியத் தலைமை ஏன் தேவை என்பதற்கு இப்போது பதில் கிடைத்து விட்டது. அந்தப் பதில் காங்கிரஸின் தெற்கத்தைய தலைமைக்கு உவப்பானதல்ல என்பதால்தான் முதலமைச்சர் பதவியைத் தரும்படி தலைவர் ஆளுங் கட்சிக்கு நெருக்கடி கொடுக்கும் நிலை உருவானது. ஆனால் அந்த நெருக்கடிக்கு பகடைக்காயாக அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பாவித்ததுதான் வேடிக்கையானதும் வருத்தத்துக்கு உரியதுமாகும்.

கிழக்கைப் பொறுத்தவரையில் மக்கள் ஆணை எது என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. தனித் தமிழ் வாக்குகளை மட்டும் பெற்ற கூட்டமைப்பு மூவின மக்களதும் வாக்குகளைப் பெற்ற ஆளுங்கட்சியைவிட 6,127 வாக்குகளே குறைவாகப் பெற்றுள்ளமை தமிழ் மக்களது ஆணை எது என்பதைத் தெளிவாக்குகின்றது. ஆளுங்கட்சி பெற்ற அந்த 6,217 வாக்குகளும் வடக்கு-கிழக்கு இணைப்பை விரும்பாதவர்களின் வாக்குகள் என்று கூடக் கற்பனை பண்ண முடியாது. ஆளுங் கட்சிக்கு உண்மையில் எத்தனை தமிழர்கள் வாக்களித்தார்களோ தெரியாது. ஆனால் அங்ஙனம் வாக்களித்தவர்கள் யாவரும் முக்கிய இலக்காக இணைப்பு-எதிர்ப்பு இருந்திருக்கும் என்றும் கூறுவதற்கில்லை.

போதைய எதிர்க்கட்சிகளும் தங்களை தயார்படுத்திக் கொண்டு அது குறித்து வாக்காளர்களை நம்ப வைக்க வேண்டும் என்ற நிலைமையும் ஏற்பட்டுள்ளது.


இதில் ஐக்கிய தேசியக் கட்சி இன்னமும் சிங்கள மக்களிடம் இழந்து விட்ட நம்பகத் தன்மையை மீட்டு பெறவில்லை என்றே கூற வேண்டும். இதற்கு உட்கட்சிபூசலும் ஒரு காரணம். ஆனால் அது மட்டுமே காரணமல்ல. இனப்போரில் அரசிற்கு கிடைத்த வெற்றி இன்னமும் ஒரு காரணம் தான். ஆனால், அது மட்டும் கூட ராஜபக்ச தலைமை அடுத்தடுத்து பெற்று வரும் தேர்தல் வெற்றிகளுக்கு காரணம் அல்ல.

> கிழக்கு மாகாணத்தில் ஆளும் கட்சிக்கு ஆதரவு கொடுக்காவிட்டால் மத்திய அமைச்சரவையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற நிலை ரவூப் ஹக்கீமுக்கு ஏற்பட்டது. முஸ்லிம் காங்கிரஸை உடைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்ற அச்சம் ஏற்படவும் தேர்தல் முடிவுகள் காரணமாகின

மாறாக, போர் வெற்றிகள் போன்ற அரசியல் காரணங்களுக்கும் அப்பால் சென்று, நாட்டின் உட்பகுதிகளில் ராஜபக்ஷ அரசு 2005-ஆம் ஆண்டு பதவிக்கு வந்தது முதல் நடைமுறைப் படுத்தி வரும் மக்கள் ஆதரவுத் திட்டங்களும் வளர்ச்சிப் பணிகளும் கூட ஒரு முக்கிய காரணமாகும். இதனால் தானோ என்னவோ, விலைவாசி கிடுகிடு என்று உயர்ந்து கொண்டே இருந்தாலும் தங்களுக்காக இந்த அரசும் அரசு தலைமையும் ஏதாவது நல்ல திட்டங்களை கொண்டு வர முயற்சியாவது செய்கிறார்கள் என்ற எண்ணம் மக்கள் மனதில் பதிந்து இருக்கிறது.

என்றாலும் இரண்டு சிங்கள மாகாணங்களிலும் நடைபெற்ற இந்தத் தேர்தல் முடிவுகள், எதிர்க்கட்சிகளுக்கும் அடிக்கப்பட்ட எச்சரிக்கை மணியும் கூட. அதிலும் குறிப்பாக, மத்தியில் முன்பு ஆட்சியில் இருந்தும் அனுபவித்தும் வந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, மீண்டும் ஆட்சியை அடுத்த தேர்தலிலாவது பிடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறது. ஆனால், மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து, சீரான கருத்தோ, தீர்க்கமான முடிவோ அந்தக் கட்சி வசம் இல்லை. அதனையும் மக்கள் புரிந்தே வைத்துள்ளார்கள்.

உதாரணத்திற்கு ஒரேயொரு விடயத்தைக் கூறலாம். இலங்கையைப் பொறுத்தவரையில், எழுத்தறிவின் முக்கியத்தை அனைத்துச் சமூகத்தையும் சேர்ந்த அனைத்துத் தரப்பினரும் உணர்ந்தே



இருக்கிறார்கள். அது போன்றே, அனைத்து தரப்பினரிடமும் கல்வி அறிவு மற்றும் உயர்கல்வி குறித்தும் அதிக எதிர்பார்ப்புகள் உள்ளன. அந்த விதத்தில், தேர்தல் நடைபெற்ற இந்த காலகட்டத்தில், ஐந்தாம் வகுப்பு "ஸ்கொலர்ஷிப்" தேர்வு, ஏ-லெவல் முடிந்து இஸ்ட்-குறியீட்டு குறித்த பிரச்சினைகள், மற்றும் மூன்று மாதங்களாக முடிவுக்கு கொண்டு வரப் படாத பல்கலைக்கழக ஆசிரியர்களின் நாடு தழுவிய போராட்டம் ஆகியவை, கல்வியின் அனைத்து நிலைகளையும் பாதித்துள்ளது. அதன் காரணமாக, மக்களின் அனைத்துத் தரப்பினரும் கூட பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளனர். என்றாலும், அவற்றின் எதிரொலி இந்தத் தேர்தல் முடிவுகளில் ஒலிக்காதது, எதிர்க்கட்சிகளின் எண்ணத்தெளிவு இன்மையையே பறைசாற்றுகிறது.

என்றாலும், எந்த ஒரு காரணத்திற்காகவும் அரசை ஆதரிக்கும் இத்தகைய எண்ணப்போக்கும் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் தான் செல்லுபடியாகும். அதிகப்பட்டுவரும் வெளி உலகுடனான தொடர்புகளாலும் மற்றும் பெருகி வரும்

அவ்விதமே முஸ்லிம் வாக்காளர்களில் பெரும்பாலானோர் அடையாள விருப்பில் உந்தப்பட்டவர்களே தவிர, அபிவிருத்தியில் அல்லது அமைச்சர் பதவியில் பந்தயங்கட்டி வாக்களித்திருக்கவில்லை. எனவேதான் கிழக்கின் முஸ்லிம் குரல் கூட்டமைப்புடன் அணிசேருமாறு அமைச்சரை வலியுறுத்தியது. என்னதான் நொண்டிச் சாட்டுகளைச் சொல்லி ஆளுங்கட்சியுடன் கூட்டமைக்க காங்கிரஸ் தலைமை விரும்பியபோதிலும் இம்முறை ஒரு விடயம் கள்ளங் கபடமற்ற முறையில் வெளிப்படுத்தப்படுகின்றது. பேரினவாத சக்திகளுக்கு எதிராக சிறுபான்மைத் தேசிய இனங்கள் ஒன்றுபட வேண்டியதன் அவசியமும் அதற்குத் தேவையான விட்டுக் கொடுப்பும் தமிழ்த் தரப்பிலிருந்தும் கிழக்கு முஸ்லிம் தரப்பிலிருந்தும் நேர்மையான முறையில் வெளிப்படுகின்றது. இது பல வகைகளிலும் மிக ஆரோக்கியமானதொரு அரசியல் செல்நெறியாகக் கொள்ளப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல நீரூற்றி வளர்க்கப்பட வேண்டிய ஒற்றுமைப் பயிருமாகும்.

## கிழக்கில் தெரியும் ஒளிக் கீற்று!

காங்கிரஸ் தலைமையிலிருந்து வேறுபட்டு பிராந்திய நலனை முன்னெடுக்க கிழக்கிலங்கை முஸ்லிம்கள் தயார் என்பது பல்வேறு மட்டங்களிலிருந்தும் தற்போது உணர்ச்சிபூர்வமாகத் தெரிவிக்கப்படுகின்றமை அமைச்சர் பதவிகளால் அமுக்கப்படக் கூடிய விடயமாகத் தெரியவில்லை. மிகக் குறுகிய காலத்தில் கிழக்கிலங்கையில் பிராந்திய அரசியலின் முக்கியத்துவம் தமிழர்களால் அன்றி முஸ்லிம்களால் முன்னெடுக்கப்படவுள்ளமை இலங்கைத் தேசிய அரசியலில் புதிய பரிமாணத்தைத் தோற்றுவிப்பதற்கான வாய்ப்பினை அதிகரிக்கின்றது.

உண்மையில், இந்த நோக்கில்தான் காங்கிரஸின் ஸ்தாபகர் மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் கட்சியை ஆரம்பித்தார். முழுமையான ஒரு சுற்று வட்டத்தின் பின்னர் பழைய நிலைக்குக் கட்சி திரும்பவேண்டிய அவசியத்தைக் கட்சித் தலைமையே ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மூன்றிலிரண்டு பங்கு வாக்குகளைப் பெற்ற கட்சிகள் எதிரணியில் இருக்க மூன்றிலொரு பங்கு வாக்குகளைப் பெற்ற ஆளுங் கட்சிக் கூட்டணி ஆட்சியமைப்பது என்பது வேடிக்கை விநோதமே என்றாலும் இதற்குத் துணைபோகும் காங்கிரஸ் எதற்காக வாக்குகளைப் பெற்றது என்பதை

அமைச்சர் காங்கிரஸ் போராளிகளுக்கு முதலில் தெளிவுபடுத்த வேண்டும். எந்த வகையில் தான் அத்தாவுல்லாவிலிருந்து வேறுபட்டவர், எவ்விதத்தில் தான் ஹிஸ்புல்லாவின் அரசியலை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அமைச்சர் திரும்பவும் கிழக்கு வாக்காளர்களுக்குத் தெளிவுபடுத்திவிட்டு ஆளுங்கட்சியுடன் சங்கமித்திருந்தால் அவரது அரசியல் நேர்மை ஓரளவு ஜீரணிக்கப்படலாம்.

அதைவிடுத்து, விடுத்து வெறுமனே சம்பந்தனுடன் பேச்சு என்று பூச்சாண்டி காட்டிக்கொண்டு பேரம்பேசும் முயற்சியில் ஈடுபட்ட காங்கிரஸின் தலைமையினை முஸ்லிம் வாக்காளர்கள் மட்டுமன்றி, ஆளுங்கட்சியினரும் ஏளனமாக நோக்கும் நிலைமையானது வாக்களித்தவர்களுக்கு அவமானத்தை ஏற்படுத்துவதாக அமைந்து விட்டது.

இனத்தின் தனித்துவத்தைப் பேணுவதற்காகப் பெறப்பட்ட வாக்குகள் வேறு காரணங்களுக்காக அடைவு வைக்கப்படும்போது அது வாக்களித்தவர்களை இளிச்சவாயர்களாக்கி பேரினவாதிகள் முன்னிலையில் கேலிக்குரியவர்களாக்கி விடுகின்றது. இதைவிட வேறென்ன அவமானத்தை வாக்காளர்கள் கட்சியின் பெயரால் சுமந்திட முடியும்?

ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் இதுவேதான் நிலைமை என்றால் கட்சியின் பெயரையும் சின்னத்தையும் பிடித்துக்கொண்டு தொங்குவதால் இனி எவ்வித பலனும் கிட்டாது என்ற முடிவுக்கு கிழக்கு முஸ்லிம் வாக்காளர்கள் வந்துவிட்டார்கள் என்பதுதான் களநிலைமை. இது பற்றியெல்லாம் தலைமை இப்போதைக்கு அலட்டிக் கொள்ளாது என்பதும் அடுத்த தேர்தல் வரும்போது மட்டுமே இனத்துவ உணர்வு தலைமைக்குப் பீறிட்டு எழும் என்பதையும் எல்லாத் தரப்பும் நன்கறியும்.

கிழக்கு முஸ்லிம்களின் வாக்குகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவோர் மத்திய அமைச்சர்பதவிக்கனவுகளில்தொடர்ந்து மிதக்கும் வரை முஸ்லிம் தேசியம் என்பதும்கனவாகவேஇருக்கும்.ஆனால், தலைமைகள் தேர்தல் மேடைகளில் மட்டும் தேசியம் பேசிவிட்டு மீண்டும் கனவில் மிதக்கத் தொடங்கினால் அடிமட்டத் தொண்டர்கள் மாற்று வழி பற்றிச் சிந்திக்கத் தொடங்குவது தவிர்க்க முடியாத தாகிவிடும். இந்த மாற்று வழிகளில் ஒன்றுதான் மேலே குறிப்பிட்ட பிராந்தியக் கட்சிகளின் கூட்டணி. இது கட்டாயமாக, அடையாளங்களைச் சமர

தனிமனித எதிர்பார்ப்புகளாலும் நாளுக்கு நாள் மக்கள் தங்களது அரசாங்கமும் அரசியல்வாதிகளும் என்ன செய்ய வேண்டும், என்னவெல்லாம் செய்யக்கூடாது, என்பது குறித்தும் தெளிவான சிந்தனையுடன் இருக்கிறார்கள். உலகின் மிகப்பெரிய ஜனநாயகமான, அண்டை நாடான இந்தியாவில், கடந்த பத்தாண்டு காலமாகவே மக்கள் அரசியல்வாதிகளின் ஊழல்களை எதிர்த்து நாடெங்கிலும் வாக்களித்து வந்துள்ளனர்.

அதாவது, விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகள், உலகமயமாக்கல் கொள்கையால் எந்த ஒரு நாட்டையும் அதிக காலம் விட்டு வைக்காது என்பதை அவர்கள் புரிந்தே வைத்துள்ளார்கள். ஆனால், தங்களால் உடனடியாக “விஷ முறிவு” அளிக்க முடியாது என்று அரசியல்வாதிகள் அறிந்து கொண்டுள்ள பிரச்சினைகளுக்கிடையில் அமைதியாகவே அல்லலுறும் மக்களை இலஞ்ச-ஊழல் போன்ற பிரச்சினைகள் மூலம் பகல் கொள்ளை அடிப்பதை தற்போதைய

**ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு இன்னமும் தங்களைத் தயார் படுத்திக் கொள்ளவில்லை என்பதையும் தேர்தல் முடிவுகள் தெளிவாக்கியுள்ளன. ஜனாதிபதி மகிந்தவின் இடத்தில் ரணிலை வைத்துப் பார்க்கும் அளவிற்கு அரசுக்கு எதிரான உணர்வு மாறிவிடவில்லை**

தலைமுறை வாக்காளர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. இதுவும், இந்தத் தேர்தல் முடிவுகள் இலங்கையில் அரசியல் தலைமைகளுக்கு அடிக்கும் இன்னொரு எச்சரிக்கை மணி.

இது போன்ற பின்னணியில் தான்,

இனப்போர் காலகட்டத்திற்கும் அப்பால் சென்று தனி மனித உரிமைகள் போன்ற அரசு நடைமுறை குறித்த பிரச்சினைகள் தேர்தல் ரீதியாகவும் முக்கியத்துவம் பெறுகிறது. மக்களை அன்றாடம் பாதிக்கும் விலைவாசி உயர்வு போன்ற பிரச்சினைகளுக்கு தர்க்க ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் அவர்களே அரசிற்கு ஆதரவான நியாயங்களை தங்களுக்குத் தாங்களே கற்பித்துக் கொண்ட பிறகு, தேர்தல் காலத்தில் அரசின் செயல்பாட்டை அளந்து முடிவு செய்ய அவர்களுக்கு வேறு உரைகல்கள் தேவைப்படுகின்றன. அவற்றைசர்வதேசசமூகம்அவர்களுக்கு வழங்கியும் வருகிறது. இதே காரணத்திற்காகத் தான் மேலை நாடுகளில் கூட மனித உரிமை சார்ந்த பிரச்சினைகளும் அதன் ஒரு அங்கமாக மக்கள் நலத் திட்டங்களும் தேர்தல் அரசியலில் முக்கிய பங்கு வகிக்கிறது.

### கூட்டணித் தர்மமும், கூட்டமைப்பின் நிலைப்பாடும்

ஆனால்,இந்தக்காரணங்கள்எதுவுமே கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்குப்



பொருந்தாது. இன்னும் சொல்லப்போனால், கடந்த 2008-ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த முறை தேர்தல் களத்தில் குதித்ததன் மூலம், தன்னையும் தனது அரசியல் எதிர்காலத்தையுமே “தேர்தல் பிரச்சினையாக” மாற்றிக் கொண்டது. அதற்கும்மேலாக, தமிழர்கள் அனைவரும் சராசரியாகச் சென்று வாக்களித்தால், கூட்டமைப்பே கிழக்கு மாகாணத்தில் ஆட்சியைப் பிடித்துவிடும் என்ற விதத்திலும் பிரசாரம் மேற்கொண்டது.

சஞ் செய்து ஏற்படுத்தப்படும் கூட்டணி அல்ல.

பின்னாளில் பிராந்திய சுயாட்சிக்கு வழிகோலக்கூடிய வகையில் ஓர் அரசியல் கூட்டணி உருவாகுதல் காலத்தின் கட்டாயம் போலும். தங்களது காணி, மொழி, மதம், கலாசாரத்தைப் பேணுவதற்கு தென்னிலங்கையில் தனிப்பட்ட நலன்களைக் கொண்டுள்ள தலைமைகள் விசுவாசத்துடன் செயற்பட மாட்டா என்பதைப் பட்டுணர்ந்ததன் பின்னர் தமிழ்-முஸ்லிம் கூட்டு அரசியல் ஒன்றே விடிவைக் கொண்டு வரும் என்பது கிழக்கைப் பொறுத்தவரையில் நிதர்சனமாகிவிட்டது. இரு தரப்பிலும் உள்ள புத்திஜீவிகளும் சிவில் சமூக அமைப்புகளும் பொது மக்கள் மத்தியில் இத்தகைய ஒழுங்கமைப்பொன்றை ஏற்படுத்துவதில் அயராது பாடுபட வேண்டியது இன்றைய தேவையாகின்றது.

காங்கிரஸுக்கு கிழக்கிலங்கை முஸ்லிம்கள் தேவை. ஆனால், மறுவாறு அவர்களது இருப்புக்கு காங்கிரஸ் தேவையில்லை. இதுவரை அவர்கள் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தி வந்த இனத்துவ உணர்வே அதற்குப் போதுமானதாகும். அதைத்தான் இந்தத் தேர்தலிலும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அதைப் பாவித்துவிட்டு தலைமையும் வழக்கமான அடைவு வைத்தலையே இம்முறையும் செய்துள்ளது.

அமைச்சர் ஹக்கீமைப் பொறுத்தவரையில் இந்தத் தேர்தல் பற்றிய அவரது பிரதான குறைபாடாக இருந்தது அமைச்சரவையில் தானிருந்தும் தனது சம்மதம் பெறாமல் மாகாணசபை கலைக்கப்பட்டது என்பதே. நோன்பு காலத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதையிட்டு எந்த முஸ்லிம் தலைமையும் பெரிதாகக் கவலைப்படாமல் உடனடியாகவே மேடைபோட்டுப் பிரசாரத்துக்குத் தயாராகிவிட்டார்கள்.

தென்னிலங்கையில் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்ட சிறிது காலத்தின் பின்னரான தேர்தல் என்ற போதிலும் "அப்படியொன்றும் நடக்கவேயில்லை" என்ற பாணியில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனாலும் கிழக்கில் மட்டும் இது பற்றிய கவலைகள் வெளியிடப்பட்டபோது பேரினவாத அரசென்று முழங்கியவர்களுக்கு கல்முனைக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி உரிய பதிலளித்திருந்தார்.

"பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல் பற்றிப் பெரிதாக இங்கு வந்து பேசுபவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் ஏன் எலிபோல அடங்கிக் கிடக்கின்றார்கள்"? என்று ஜனாதிபதி கேள்வி எழுப்பினார். இதற்கு நேரடியான பதில் அமைச்சர் ஹக்கீமிடமிருந்து வெளிவரும் எனப் பலரும் எதிர்பார்த்த போதிலும் அமைச்சர் சுற்றிவளைத்து மழுப்பலான பதில் சொன்னாரே தவிர அமைச்சர் பதவியைப் பணயம் வைத்து நியாயங் கேட்டதாக அவர் ஒப்புக்கொள்ளவே இல்லை. இத்தனைக்குப் பிறகும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள அத்தனை தொகுதிகளிலும் காங்கிரஸுக்கே நம்பிக்கையுடன் வாக்களித்தார்கள் கிழக்கு முஸ்லிம்கள். ஆனால் இறுதியில் நடந்ததென்ன?

## போராளிகள் எலிகளாக மாட்டார்கள்!

அமைச்சுப் பதவிகளிலுள்ள எலிகள் என்று வர்ணிக்கப்பட்ட பின்பும் புதிதாக எதையோ தம்மால் பாதுகாக்க முடியும் என்று தாங்களே நம்பாததை தமது வாக்காளர்கள் நம்புவார்கள் என்ற நப்பாசையில் கூட்டுச் சேர்ந்திருக்கும் காங்கிரஸ் தலைமை என்னதான் கரடியாகக் கத்தினாலும் அல்லது அப்படிக் கத்துவதாகக் காட்டிக் கொண்டாலும் அதற்கு முதலமைச்சர் பதவி கிடைக்காது என்பது எப்பவோ முடிந்த காரியமாயிற்று.

புத்திசாலியான அமைச்சர் ஹக்கீம், கேட்குமாற்போல் கேட்டு பின்னர் அது கிடைக்கவில்லையே எனக் காட்டிக் கொண்டு சுருதியை மாற்றி காங்கிரஸ் முதலமைச்சர் என்பதைவிடுத்து முஸ்லிம் முதலமைச்சர் என்று பேசத் தொடங்கினார். காங்கிரஸுடன் முதலமைச்சர் பதவியினைப் பங்கிடத் தயார் என்று தேர்தல் மேடைகளிலேயே வைத்து உத்தரவாதமளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் புறந்தள்ளிவிட்டு ஒப்புக்கு ஒரு பேரப்பேச்சு நடாத்தி முதலமைச்சர் பதவி கேட்டுப் பின்னர் முஸ்லிம் முதலமைச்சர் நியமிக்கப்பட உதவியதாக மார்தட்டப் போகின்றது காங்கிரஸ் தலைமை. ஆனால் உண்மையில் அமைச்சர் ஹக்கீம் தனது கட்சியினருக்கே முதலமைச்சர் பதவி வேண்டும் என்று மனதார விரும்பி நின்றாரா?

சகுனப்பிழை ஏற்படுத்துவதற்காக அத்தாவுல்லாவின் ஆதரவாளரோ அன்றி ஹிஸ்புல்லா, றிசாட் பதூர்தீன் போன்றோரது ஆதரவாளரோ முதலமைச்சர் ஆகாத படி பார்த்துக் கொண்டதால் கிழக்கில் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு எதிர்காலத்தில் பெரிதாக அச்சுறுத்தல் எதுவும் இருக்காது என்ற உத்தரவாதமே காங் அந்த உத்தி பலிக்கவில்லை.

இதனை அடுத்து, கிழக்கு மாகாண தேர்தல் முடிவுகள் என்னவோ ஒட்டு மொத்தமாக கூட்டமைப்பிற்கே கிடைத்துள்ளது என்பது போன்ற எண்ணம் உருவாக்க முயற்சி நடந்து வருகிறது. அதனையொட்டி, கிழக்கில் தமிழர்கள் பங்குபெறும் ஆட்சியை இல்லாமல் செய்ய சதி நடக்கிறது என்பது போன்ற பிரசாரமும் துவங்கி உள்ளது. இது உண்மையல்ல. மாறாக கிழக்கு மாகாண சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம் மக்களிடையே அநாவசியமான இன உணர்வைத் தூண்டிவிடும் சக்தி படைத்தது.

கிழக்கு மாகாண தேர்தல் முடிவுகளைப் பார்த்தால், கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன சேர்ந்து தேர்தலை சந்தித்திருந்தால் அமோக வெற்றி பெற்றிருந்திருக்கலாம் என்ற எண்ணம் உருவாகிறது. ஆனால், இது போன்ற பிற கூட்டணி குறித்த சாத்தியக்கூறுகளும் உள்ளன. உதாரணத்திற்கு மத்தியில் கூட்டணி அரசாகச் செயல்படும் அரசு அணியும் முஸ்லிம் காங்கிரஸும் சேர்ந்தே தேர்தலில் போட்டியிட்டு இருக்கலாம். கடந்த தேர்தலைப் போலவே, இந்த முறையும் ஐக்கிய தேசியக் கட்சியும் முஸ்லிம் காங்கிரஸும் தேர்தலை ஒரே அணியாக சந்தித்து இருக்கலாம்.

இவற்றில் எது நடந்திருந்தாலும், அதற்கான தர்க்கரீதியான நியாயங்களையும் வெற்றிவாய்ப்புகளையும் வரிசைப்படுத்தி இருக்கலாம். இது போன்ற வாதங்கள் எதிர்கால தேர்தல் அணிகள் அமைப்பதற்கான அளவுகோல்களாக வேண்டுமானால் பயன்படலாம். ஆனால், நிகழ்கால அரசியலில் அது குழப்பத்தையும் குரோதத்தன்மையையும் மட்டுமே வளர்க்கவல்லது. எனவே, அத்தகைய சர்ச்சைகள் தவிர்க்கப்பட வேண்டியவை. இதற்கு அரசியல் காரணங்களும் இல்லாமல் இல்லை.

தேர்தல் முடிவுகள் வந்த கையுடன், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸுடன் அணி சேர்ந்து ஆட்சி அமைக்க கூட்டமைப்பு விழைகிறது என்று அதன் தலைவரான சம்பந்தன் உடனடியாக கருத்து தெரிவித்திருந்தார். ஆனால், இது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் உடனடி முடிவு எடுக்காத நிலைமையில், மத்தியில் ஆளும் ராஜபக்சதலைமை தமிழர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் கிழக்கு மாகாணத்தில் செயல்

பட்டால், அவர்களுடன் சேர்ந்து அரசு அமைப்பது குறித்து கூட்டமைப்பு ஆலோசிக்கும் என்றும் அவர் கருத்துக் கூறினார்.

இது கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை மூலையில் தள்ளி தனக்கு ஆதரவான முடிவை எடுக்க வைக்கும் முயற்சி. தானாக கனியாத காயை, கல்லால் அடித்து பழுக்க வைக்கும் முயற்சி. அதை ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தள்ளப்படும் சூழ்நிலை உருவானாலும், கூட்டமைப்பால் தனக்கு ஏற்பட்ட சிக்கலை அந்தக் கட்சியோ அதன் தலைமையோ அண்மைக் காலங்களில் மறந்து விடாது. அதன் தாக்கம் எப்போதாவது, கூட்டமைப்பு எதிர்பாராத தருணத்தில், அது எதிர்பாராத விதத்தில் அவர்களையே தாக்கும் வல்லமை உள்ளது. இதனை உணர்ந்து, கூட்டமைப்பு தலைமை செயல்பட வேண்டும்.

**மூன்று மாகாணங்களிலும் ஆளும் கூட்டணி வெற்றிபெற்றாலும் சிறியளவாகவேனும் குறைந்துவரும் தேர்தல் செல்வாக்கு அவர்களை சிந்திக்க வைக்கும். இனப்போர் காலகட்ட மனநிலை மக்கள் மத்தியில் தொடர்ந்து இல்லை என்பதை இது குறிக்கிறது. அரசு தரப்பினரை இது சிந்திக்க வைக்கும்**

அதாவது, இனப்பிரச்சினையின் ஒரு அலகாக முஸ்லிம் சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளை கருதி செயல்படும் விடயத்தில், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து கூட்டமைப்பு மாறி இருக்கிறது என்ற எண்ணம் முஸ்லிம் அரசியல் தலைமைக்கும் கூட உருவாக வேண்டும். இல்லையென்றால், இதுவே கூட இனப்பிரச்சினைக்கு தமிழ் அரசியல் தலைமை எதிர்பார்க்கும் முடிவுகளை எட்டுவதில் பிரச்சினையாகவே அமைந்து விடும். பின்னர் அது குறித்து தமிழர் சமுதாயம் வருத்தப்பட்டு பயனில்லை என்ற நிலைமை தோன்றிவிடும்.

எது எப்படி என்றாலும், தேர்தல்-அரசியல் என்று வந்த பிறகு, அதற்கான தர்க்கங்களோடும் அதற்கே உரித்தான கூட்டணி அரசியல் தர்மத்தோடும் (?) செயல்பட கூட்டமைப்பு முயல்வது வரவேற்கத்தக்க விடயம். அதாவது, பிரச்சினைகளில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்ப்பதற்கு இது உதவும். அதுவும் குறிப்பாக, வடக்கு மாகாண தேர்தல் எப்போது நடைபெற்றாலும் அப்போது ஆட்சியைக் கண்டிப்பாக பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் அந்தக் கட்சி, அரசியலில் அனைத்து தரப்பினரையும் அனுசரித்துப் போகவேண்டும் என்ற பாலபாடத்தை எவ்வளவு சீக்கிரம் உணர்ந்து, படித்து, புரிந்து செயல்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு, தமிழ்ச்சமூகத்தின் எதிர்கால எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புகள் உள்ளன.

அதேசமயம், கடந்த பல தசாப்தங்



களாக எந்த ஒரு அரசாங்கத்துடனும் இணைந்து செயல்படாத காரணத்தால், கூட்டமைப்பின் தலைவர்களுக்கு அரசு செயல்பாடு சார்ந்த அனுபவமின்மை ஏற்பட்டுள்ளது. இதனை துடைப்பதற்கு கட்சித் தலைமை ஆவன முயற்சி செய்ய வேண்டும். அதே சமயம், அரசு சார்ந்து செயல்படாத காரணத்தாலேயே, கூட்டமைப்பின் தலைவர்கள், பெரும்பாலும் “கறைபடாத கரங்களுக்கு” சொந்தக்காரர்களாகி விடுகிறார்கள்.

இதனையே, கூட்டமைப்பு தனது அனுபவமின்மை என்னும் பலவீனத்தை, ஊழல் செய்யாதவர்கள் என்று அரசியல்

கிரஸ் போராளிகளுக்கு எஞ்சியுள்ளது. அம்பாறை மாவட்டத்திலிருந்தோ அன்றி மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தோ முஸ்லிம் முதலமைச்சர் எவரும் இம்முறை நியமிக்கப்படவில்லை என்பதைக் காங்கிரஸ் தனது வெற்றியாகப் பறைசாற்றப் போகின்றது.

முஸ்லிம் தேசியம் இப்படிக் கூனிக் குறுகிப் போவதற்காகவா காங்கிரஸ் என்ற தனிக்கட்சி, தேசியக் கட்சி முஸ்லிம்களின் எதிர்ப்புக்கு மத்தியில் உருவாக்கப்பட்டது? மத்திய எலிகளால் சாதிக்க முடியாததை மாகாண எலிகள் சாதிக்கும் என்று நம்பும் அளவுக்கு முட்டாளல்ல அமைச்சர் ஹக்கீம். (பதவிப்) பசை பூசிய தட்டில் தானாக வந்து ஒட்டிக்கொண்ட எலிகள் இனி எடுத்து வீசப்படும் வரை நகர முடியாது.

எலிகளை உருவாக்குவதற்கு வாக்குச் சீட்டுகளைப் பாவிக்கும் பரிதாப நிலையிலிருந்து சிறுபான்மைத் தேசிய இனங்கள் மீள வேண்டும். கிழக்கைப் பொறுத்தவரையில் பெரும்பான்மையாக உள்ள முஸ்லிம்கள் தமிழ் மக்களுடன் சேர்ந்து கூட்டு அரசியல் அமைப்பொன்றை உருவாக்கிட வேண்டும். தேசிய அரசியலுக்குள் சங்கமிக்காத அல்லது விலைபோகாத விதத்தில் தனித்துவத்தைப் பாதுகாப்பதில் பரஸ்பர புரிந்துணர்வுடன் ஒரே குரலில் பேசுவதற்கு அவர்கள் தயாராக வேண்டும். ஆள்புலத்தையும் இன, மத, கலாசார அடையாளங்களைப் பேணுவதில் தங்களுக்குள்ள பொதுவான அக்கறைகளே அவர்களை வழிகாட்ட வேண்டும். இந்த ஒற்றுமையும் புரிந்துணர்வும் வடக்கில் சிறுபான்மையினராக உள்ள முஸ்லிம்களின் அரசியல் இருப்புக்கு நிறுவன ரீதியான உத்தரவாதத்தை வழங்குவதாகவும் வடிவம் பெற முடியும்.

இதற்கான முன்னெடுப்பு கிழக்கிலுள்ள சிறுபான்மை இனங்களின் மத்தியில் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது தொடர்பில் முஸ்லிம் பிரமுகர்களுடனும் முஸ்லிம் கட்சிகளிலுள்ள சில முக்கியஸ்தர்களுடனும் உடனடிப் பேச்சுவார்த்தையினை ஆரம்பிப்பது காலத்தின் கட்டளை ஆகின்றது.

மற்றும் தேர்தல் ரீதியான பலமாக மாற்றிக்காட்ட வேண்டும். இது அவர்களுக்கு கிடைத்துள்ள முதல் மட்டுமல்ல, இலங்கை ஒட்டுமொத்தத்திற்குமான தமிழ்ச் சமுதாயத்திற்கு கிடைத்துள்ள அரசியல் முதலீடும் கூட. அதற்கு ஏற்ற வாறு, கூட்டமைப்பின் தற்போதைய தலைமை, தனது அடுத்தடுத்த தலை முறையினரை தயார்படுத்த வேண்டும். இனப்போர் என்ற பெயரில் எல்லா வித மான தியாகங்களையும் செய்து பழக்கப் பட்டுப்போனதமிழ் இளையதலைமுறை, அந்த தனி நபர் இழப்புகளையே, கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டு, ஊழல் இல்லாத, அப்பழுக்கற்ற நல் லாட்சியை நாடு முழுவதுக்குமே கூட தங்களால் கொடுக்க முடியும் என்று உதாரணமாகச் செயல்பட வேண்டும்.

தற்போது, உணர்வு ரீதியாக அரசியல் செய்யும் கூட்டமைப்பு, அரசியல் ரீதியாக நாடெங்கும் உள்ள மக்களின் அரசு சார்ந்த முக்கிய குறைபாடுகளை உணர்ந்து, அதனடிப்படையில் செயல்பட வேண்டும். இனப்பிரச்சினை தங்களின் அரசியலில் முக்கியமான ஒரு அலகாக இருந்தாலும், அது மட்டுமே தமிழ் அரசியல் அல்ல என்பதை தாங்களும் உணர்ந்து, நாட்டில் உள்ள மற்ற இனம்-மொழி சார்ந்த மக்களையும் தங்கள் பக்கம் திரும்பிப் பார்க்க வைக்க வேண்டும். அது சாத்தியமற்ற விடயம் அல்ல.


அவ்வாறு தமிழ் அரசியல் தலைமை முன்னுதாரண அரசியல் செய்யும் என்றால், அதுவே, எதிர்கால தேசிய அரசியலில், குறைந்து வரும் தமிழ் மக்களின் பங்களிப்பு, இனம், மொழி ஆகியவற்றிற்கும் அப்பாற்பட்டு, ஏற்றுக் கொள்ளப் படும். ஏன், தமிழ் அரசியல் தலைமைகளின் ஒட்டு மொத்த செயல்பாடு, அவர்களையும் அவர்களது நயமான, நாணயமான அரசியலையும் சிங்கள அரசியல் தலைமைகளுக்கும் அப்பால் சென்று, சிங்கள மக்களும், வாக்காளர்களும் ஏற்றுக் கொண்டால், அதுவே, அவர்களை இனப்பிரச்சினையைக் கூட புதிய பரிணாமத்தில் பார்க்க வைக்கும்.

## அடுத்தடுத்த தேர்தல்கள்?

இடைப்பட்ட காலத்தில் என்னவோ, தற்போதைய மூன்று மாகாண தேர்தல்கள், வடக்கு மாகாணம் உட்பட்ட பிற ஒன்பது மாகாண தேர்தல்களையும், அரசு அடுத்தடுத்து நடத்தி முடிப்பதற்கு வழி வகுக்கலாம். இந்த மூன்று மாகாணங்களிலும் ஆளும் கூட்டணி வெற்றி பெற்றாலும், சிறியளவாகவேனும் குறைந்து வரும் தேர்தல் செல்வாக்கு அவர்களைச் சிந்திக்க வைக்கும். அதை விட குறிப்பாக, குறைந்து வரும் வாக்கு விகிதம், மக்களுக்கு இனப்போர் கால கட்டத்திய மனநிலை தொடர்ந்து இல்லை என்பதையே குறிக்கிறது. இதுவும் அரசு தரப்பினரைச் சிந்திக்க வைக்கும். ஆனால், அரசை எதிர்த்து எப்பாடு பட்டாவது வாக்களிக்க வேண்டும் என்ற எண்ணத்தை, குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியால் சிங்கள மக்களின் மனதில் விதைக்க இயலாமையையும் இந்தத் தேர்தல் மீண்டும் உணர்த்தியுள்ளது.

இந்த உண்மை, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கும் பொருந்தும். பொருந்த வேண்டும். கிழக்கு மாகாணத்தில், தமிழர் பகுதிகளில் அதிகபட்ச வாக்குப்பதிவு நடைபெற்றாலும், அதுவே கூட்டமைப்புதலைமைவெளிப்படையாக வேண்டுகோள் விடுத்து, எதிர்பார்த்த எண்ணிக்கைக்கு அருகில் வரவே இல்லை. அது போன்றே, உச்சகட்ட தேர்தல் பிரசாரங்களுக்குப் பின்னரும் முஸ்லிம் வாக்காளர்களும் முனைப்பாக வாக்களிக்க முன்னே வரவில்லை.

இவை எல்லாம், அந்த மக்கள் தத்தம் அரசியல் தலைமைகளுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை. அதுவே, இன ரீதியான எச்சரிக்கை என்று மட்டும் கருதிவிடக் கூடாது. மாறாக, இன ரீதியான எதிர்பார்ப்புகளுக்கும் அப்பால் சென்று, மக்கள் நல்லாட்சியை விரும்புகிறார்கள் என்பதனையும் அரசியல் தலைமைகள் உணர்ந்து செயல்பட வேண்டும். அரசியல் பிரச்சினைகளுக்கு அப்பால் சென்று, அன்றாட வாழ்வாதார பிரச்சினைகள் குறித்தே, போருக்கு பிந்திய காலகட்டத்தில், சிங்கள வாக்காளர்களைப் போலவே, தமிழ் மற்றும் முஸ்லிம் இன மக்களும் கவலை அடைந்து வருகிறார்கள் என்பதனையே இது குறிக்கிறது. இதனையும் உணர்ந்து அந்த அரசியல் தலைமைகள் செயல்பட வேண்டும் என்பதுமே இந்தத் தேர்தல் களினால், அனைத்து அரசியல் தலைமைகளுக்கும், நாடு தழுவிய அளவில் மக்கள் விடுக்கும் செய்தி - அல்லது, எச்சரிக்கை!



மறவன்புலவு
க. சச்சிதானந்தன்

தமிழரசுக் கட்சித் தலைவர்களுள் ஒருவர் வன்னியசிங்கம். தமிழ் நாட்டு ஆதரவு ஈழத் தமிழருக்கு அவசியம் எனக்கருதினார். மட்டக்களப்பைச் சேர்ந்த பத்மநாதனைச் சென்னைக்கு அனுப்பினார்.

1950களின் பிற்பகுதியில் பத்மநாதன் சென்னையில் தங்கியிருந்தார். கட்சித் தலைவர்களைச் சந்தித்தார். காமராசர் முதலமைச்சர். எதிர்க்கட்சியாகத் தி.மு.க. அக்காலத்தில் சிதம்பரத்தில் தி.மு.க மாநாட்டுத் தீர்மானம் ஈழத்தமிழருக்கு ஆதரவாக வந்தது.

இந்திய வெளியுறவுக் கொள்கையை டில்லியில் தீர்மானிக்கிறார்கள். அது மாநில அதிகாரத்துள் இல்லை. டில்லிக்குச் செல்லுங்கள் என்றார் காமராசர். அறிஞர் அண்ணா, தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, பொதுவுடைமைக் கட்சி சீவானந்தம், மபொசி ஆகிய தலைவர்களை அடிக்கடி சந்தித்த பொழுது அவர்கள் ஆதரவுடன் பேசினார்கள். அறிக்கைகள் வெளியிட்டார்கள்.

ஐ.நா. தலையிட்டுத் தீர்மானிக்க வேண்டும் என ராஜாஜி அப்பொழுது எழுதினார்.

இங்கிருந்து போனவர்கள் அங்கே போய் உரிமைகளைக் கேட்பதா? விட்டுக்கொடுத்துப் போங்கள் எனச் சொன்ன மபொசி போன்றவர்களும் உண்டு. பொதுமக்கள் பலரின் கருத்தும் அவ்வாறிருந்தது.

கூட்டாட்சி அமைப்புக்குள் சிங்களவரோடு இணைந்து வாழ்தல், மலையகத் தமிழருக்குக் குடியுரிமை

# சுடலை ஞானம்

என்பன அக்கால இலங்கைத் தமிழரின் கோரிக்கைகள்.

1952, 1956, 1958, 1961 எனத் தொடர்ச்சியாக அலை, அலையாகச் சிங்களத் தாக்குதல்கள் தமிழர் மீது நிகழ்ந்தபொழுது, அறவழியில் அத்தாக்குதல்களை ஈழத் தமிழர் எதிர்கொண்ட காலங்களில் தமிழகம் டில்லிக்கும் ஐ.நா.வுக்கும் கைகாட்டியதே அன்றி, தாமாக ஈழத் தமிழர் சிக்கலையோ, மலையகத் தமிழர் சிக்கலையோ தீர்க்கும் கருத்தோட்டத்தைத் தமிழகத்தின் கருத்தோட்டமாகக் கொள்ளவில்லை.

1961 அறப்போர் ஈழத்தமிழர் தாயகத்தில் நடந்த காலங்களில் தமிழகத்தில் தி.மு.க.வின் தூத்துக்குடித் தீர்மானம் வந்தது. அறிஞர் அண்ணா தலைமையில் மரீனாக் கடற்கரையில் ஈழத்தமிழர் ஆதரவுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டச் செலவை ஏற்றவர்கள் அக்காலத்தில் சென்னையில் படித்த ஈழத் தமிழ் மாணவர்.

1964இல் காமராசர் தெரிவில் வந்த பிரதமர் சாத்திரியார் நான்கரை இலட்சம் மலையகத் தமிழரை அவர்கள் ஒப்புதல் கேட்காமலே இந்தியாவுக்கு நாடுகடத்த ஒப்பியபொழுது, தமிழகம் வாளா விருந்தது. அந்த உடன்பாட்டில் கையொப்பமிடச் சென்னை வழியாக டில்லி சென்ற பிரதமர் ஸ்ரீமாவோவுக்குச் சென்னை விமானநிலையத்தில் கறுப்புக் கொடி காட்டியோரில் பெரும்பான்மையினர் சென்னையில் படித்துக் கொண்டிருந்த ஈழத் தமிழ் மாணவர்.

1974 தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் தமிழகத்தில் எவ்வித உணர்வலைகளையும் உசுப்பவில்லை.

அடிமைகளான நாங்கள் உங்களுக்காக அழத்தான் முடியும் எனத் தந்தை பெரியார் தன்னைச் சந்தித்த 1970களின் தொடக்கங்களில் சென்னையில் தந்தை செல்வநாயகத்திடம் கூறினார்.

1977 ஆவணியில் இலங்கைத் தீவெங்கும் தமிழர் மீது தாக்குதலால் உயிர்கள் பலியாகின, வீடுகள் எரிந்தன. வணிக நிறுவனங்கள் சிதைந்தன. தி.மு.க தலைமையில் தமிழகம் முழுவதும் சிங்களஎதிர்ப்பலைகள், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், முழக்கங்கள், சட்டசபை, மக்களவை உரைவீச்சுகள் டில்லியை உசுப்ப அதற்குமேல் எதையும் செய்யவில்லை.

1981இல் யாழ்ப்பாண நூலக எரிப்பு, தமிழர் மீதான தாக்குதல்கள், தமிழகத்தில் ஒருசில உணர்வாளர்களின் கவனத்தைஈர்த்தது. தமிழகப்பதிப்பாளர்களின் 30% விற்பனைக் களமாக இலங்கை இருந்த காலத்தில், தமிழகம் மனம் கொண்டிருப்பின்ஒரேஆண்டில் அந்நூலகத்தைப் புதுப்பித்திருக்கலாம். எரிந்தது தமிழ் அல்லவா?

1983இல் இலங்கை முழுவதும் தமிழர் பலியாகி, சொத்திழந்து, ஏதிலிகளாகிய நிலையில் தமிழகம் விழித்தது. ஜெயவர்த்தனா கொடும்பாவியானார். அக்காலத்தில் தமிழகம் கொண்ட கோலம், தமிழீழத்தை இந்தியா ஏற்குமளவு மனோநிலை கொண்டது.

பிரதமரான இந்திரா காந்தியிடம் தமிழீழத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தும் நிலையில் தமிழகம் இருந்தது. அனுதாப அலைகள், ஆதரவு நிலைகள், அன்புப் பகிரல்கள், சிங்கள எதிர்ப் புணர்வுகள் மட்டுமே எஞ்சின.

இலங்கையில் மலையகத்தமிழருக்கு வாக்குரிமை, ஈழத் தமிழர் தாயகத்தில் சுயாட்சி அல்லது தனி ஆட்சி எனத் தமிழகம் வலியுறுத்தி இருந்தால், டில்லியில் இந்திரா காந்தியும் நரசிம்மராவும் கொழும்பைக் கடுமையாக வலியுறுத்தி இருப்பர். இந்திரா காந்தியால் அரசியல் தீர்வுக்கு உந்தியிருக்க முடியும். அந்த ஒரே ஒரு வாய்ப்பும் தவறியது.

1984, 1985 1986 கொடுமைகள் ஈழத்தமிழரை உலகெங்கும் விரட்டின. தமிழகம் விழிப்பாயிருந்தும், டில்லி தீவிரமாக முயன்றும் ஈழத் தமிழரின் கண்ணோட்டங்களால் அரசியல் சறுக்கல்களே மிஞ்சின.

1991 தொடக்கம் தமிழகச் சட்டசபைத் தீர்மானங்கள், தமிழக உளப்பாங்கைக் காட்டின. 1994 தொடக்கம் 2009 தமிழகக் கண்ணோட்டம், தேர்தலில் வாக்கைக்கும் போக்கு யாவும் ஈழத் தமிழரின் நலனைக் கண்கொண்டவையல்ல. ஈழத் தமிழர் இழப்புகள் கவனத்தில் வரவில்லை.

2009 மே மாத மக்களவைத் தேர்தல் முடிவுகள், ஈழத் தமிழர் சுடலையை நோக்கிய காலத்தவை. தேர்தல் முடிந்த பின் 2009 மே 19க்குப்பின், தமிழகம் கொண்டிருக்கும் கண்ணோட்டம் சுடலை ஞானமே.

எஞ்சியிருக்கும் ஈழத்தமிழரின் பாதுகாப்பும் எதிர்காலமும் தமிழகத்தின் கண்ணோட்டமாகவேண்டும். பாதுகாப்பான சூழ்நிலையில் இருப்பவர்கள், பாதுகாப்பற்ற மக்களை மேலும் பாதுகாப் பற்றவராக்கலாமா?

1948,1952, 1956, 1958, 1961, 1964, 1972, 1974, 1977, 1981, 1983, 1986, 1995, 1999 எனத் தொடர்ச்சியான இழப்புகள். இலங்கைத் தமிழருக்குக் கடும் இழப்புகள். இந்த இழப்புகளையெல்லாம் தாங்கி, உரிமைகளை மீட்டெடுக்க விடாது முயற்சி செய்த மலையகத் தமிழர், ஈழத் தமிழர் 2009க்குப் பின் சோர்ந்துள்ர். மேலும் இழப்பைத் தவிர்க்கும் முயற்சியில் உளர்.

மலையகத்திலும் ஈழத்திலும் உள்ள பொது மக்கள் அமைப்பாகில் என், அரசியல் கட்சிகளாயில் என், ஒருமித்த கருத்துணர்வுடன் விடிவை நோக்கிக் காத்திருக்கின்றனர் மேலும் சுடலைகளைக் காண விழையாதவர்.

இந்தியத் துடுப்பெடுத்தாடும் அணி இலங்கையை வென்ற நாளில் மலையகத் தமிழர் தாக்குதலுக்காயினர். காப்பதற்குத் தமிழகம் திரளவில்லை, குரல் கேட்கவில்லை, இந்திய அரசு வாளா விருந்தது. தம் துடுப்பணியின் தோல்வியேதமிழரைத்தாக்கக்காரணமாயின், தமிழகத்தின் சிங்கள எதிர்ப்பலை மலையகத் தமிழரைப் பகடைக் காயாக்கும். ஈழத்தமிழர் மாயமாய் மறைந்துவிடுவர், காத்திருக்கிறார்கள், மறக்காதீர்கள்.

தமிழகத்தின் சிங்கள எதிர்ப்பலைகள் மலையக மற்றும் ஈழத்தமிழரின் பாதுகாப்புக்குக் குந்தகமானவை. மோதல் போக்கு அரசியலால் பாதுகாப்புக்குக் குந்தகம் என ஈழத்து, மலையகத்து அரசியல் கட்சித் தலைமைகள் தத்தம் வாக்கு வங்கியை, ஆதரவாளரை மையமாக வைத்துக் கருத்துரைக்கின்றன. சுடலை ஞானத்தார் கவனத்தில் கொள்வார்களாக. ●

# சீன பாதுகாப்பு அமைச்சரின் இந்திய விஜயத்தின் முக்கியத்துவம்






எம்.பி.வித்தியாதரன்

**இந்திய-சீன கூட்டு இராணுவ ஒத்திகை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு ஜெனரல் லியாங் குவாங்லின் விஜயம் வழி வகுத்திருக்கிறது**

சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்லி தலைமையிலான உயர்மட்ட பாதுகாப்புத்துறை தூதுக்குழு இம்மாதம் முற்பகுதியில் இரு முக்கிய ஆசிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது. லாவோஸையும் உள்ளடக்கிய மூன்று நாடுகளுக்கான அவரது விஜயத்தில் இலங்கையும் இந்தியாவுமே முக்கியமானவையாக அமைந்தன. இலங்கைக்கு அவர் விஜயம் செய்திருந்தது இதுவே முதல்த் தடவையாகும். வெற்றிகரமான இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டே குவாங்லி இந்தியாவுக்கு வந்தார். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே அதிகரித்து வரும் வர்த்தக உறவுகளுக்கு இணையான வேகத்தில் அவற்றுக்கிடையேயான அரசியல் மற்றும் இராணுவ உறவுகள் நகர முடியாமல் இருக்கும் சூழ்நிலையில் பாதுகாப்பு அமைச்சரின் இந்திய விஜயத்திற்கு ஒருபிரத்தியேகமுக்கியத்துவம்இருந்தது.

சீனபாதுகாப்புஅமைச்சரின்இலங்கை விஜயம் இந்தியாவில் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு பல்வேறு விதமான விமர்சனங்களுக்கும் ஆய்வுகளுக்கும் உள்ளாகியிருந்தன. ஜெனீவாவில்ஐக்கிய



நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததைத் தொடர்ந்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்பட்டிருக்கும் விக்கல்களின் பின்புறத்தில் இந்த விஜயத்தை நோக்க வேண்டியது அவசியமானதாகும். இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அதிருப்தி ஆரம்பத்தில் இராஜதந்திர மட்டத்தில் வெளிக்காட்டப்பட்ட போதிலும் பிறகு இப்போதும் இந்தியாவின் முன்னணி ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிற்கு அவர் வழங்கிய பேட்டியினூடாக பகிரங்கப்படுத்தப்பட்டிருப்பதை காணக்கூடியதாகவிருக்கிறது. தனது போட்டி நாடுகளான பாகிஸ்தானுடனும் சீனாவுடனும் அயல் நாடுகள் கொண்டிருக்கும் உறவுகளை புதுடில்லி எச்சரிக்கை உணர்வுடனேயே எப்போதும் நோக்கிக்கொண்டு வந்திருக்கிறது. அண்மைக்காலமாக கொழும்பு இவ்விரு நாடுகளுடனுமான அதன் உறவுகளை மேலும் பலப்படுத்த முயன்றுகொண்டிருப்பதாக புதுடில்லி உணர்கிறது. இதனால் அது கவலை அடைந்திருக்கிறது.

இந்தப் பின்னணியிலேயே சீன அமைச்சரின் கொழும்பு விஜயத்தை புதுடில்லி பார்க்கிறது. இலங்கை இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டு சுமார் இரு மாதங்கள் கடந்த நிலையில் இலங்கைக்கான சீன பாதுகாப்பு அமைச்சரின் ஐந்து நாள் விஜயம் இடம்பெற்றிருக்கிறது. சபுகஸ்கந்தையிலுள்ள பாதுகாப்புத்துறை கல்லூரியில் சீன அமைச்சர் நிகழ்த்திய சொற்பொழிவொன்றில் இலங்கையும் சீனாவும் சர்வதேச ரீதியில் ஏற்பட்ட நிலைமாற்றங்களுக்கு எவ்வாறு ஈடுகொடுத்தன என்பதைப் பற்றி குறிப்பிட்டிருந்தார். இது உண்மையில் இரு நாடுகளினதும் மனித உரிமைகள் நிலைவரங்கள் குறித்து சர்வதேச ரீதியில் காண்பிக்கப்பட்ட அக்கறையையே குறிப்பிடுவதாக அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை என்று இலங்கை நிலைவரங்களை உன்னிப்பாக அவதானிக்கும் அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நெருக்கமான இராணுவ உறவுகள் எந்தவொரு மூன்றாவது நாட்டையும் குறி வைப்பவையாக இல்லை என்று தனது உரையில் சீன பாதுகாப்பு அமைச்சர் கூறத் தவறவில்லை. ஆனால் உண்மை நிலை பிரகாசமாகத் தெரிகிறது. அறைக்குள் நிற்கும் யானையை எவ்வாறு மறைக்க முடியும்?

அடுத்ததாக சுமார் ஒரு தசாப்த கால இடைவெளிக்குப் பிறகு சீன பாதுகாப்பு அமைச்சர் மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியாவிற்கு வந்தார். இரு தரப்பு உறவுகளில் இருக்கின்ற பிரதான தகராறுகளில் சிலவற்றை தீர்த்து வைக்கும் நோக்குடனானதாக இந்த விஜயம் அமைந்திருக்கவில்லை என்ற போதிலும் இத்தகைய உயர்மட்ட ஊடாட்டங்கள் சீன, இந்திய உறவுகளில் காணப்படக்கூடியதாக இருக்கும் நம்பிக்கைப் பற்றாக்குறையையும் பதற்ற நிலையையும் தணிப்பதற்கு உதவமுடியும். தற்போதைய சூழ்நிலையில் இத்தகைய விஜயங்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. இராணுவத் தலைமைத்துவத்தின் உயர் மட்டத்திலுள்ள அதிகாரிகளுடன் லியாங் குவாங்லி இந்தியாவுக்கு வந்ததால் அதற்கு பிரத்தியேக முக்கியத்துவம் இருந்தது. அவருடன் வந்தவர்களில் மக்கள் விடுதலை இராணுவத்தின் தென் சீன கடற்படைப் பிரிவின் அரசியல் கொமிசாரும் குவாங்சு, தீபெத், லான்சோ பிராந்தியங்களின் தளபதிகளும் அடங்குவர்.


சீன தூதுக்குழுவை மும்பையிலிருந்து டில்லிக்கு ஏற்றி வந்த விமானங்களின் விமானிகளான இரு இந்திய விங் கொமாண்டர்களுக்கு சீன பாதுகாப்பு அமைச்சர் தலா 50,000 ரூபா அன்பளிப்பு வழங்கியதால் பெரும் சர்ச்சை தோன்றியது

சீன தூதுக்குழுவின் உறுப்பினர்களின் உயர் தகுதிகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது இந்த விஜயத்திற்கு இருதரப்பு விவகாரங்களிலும் பலதரப்பு விவகாரங்களிலும் பரந்தளவிலான நிகழ்ச்சித்திட்டமொன்று இருந்திருக்கிறது என்பதை உணரக்கூடியதாக இருந்தது. எல்லையோரத் தகராறு குறித்துப் பேசப்பட்டிருக்கிறது. எல்லைப் பகுதிகளில் அமைதியையும் சகஜ நிலையையும் மேம்படுத்துவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்று இரு தரப்பினர்களுமே கூறியிருக்கிறார்கள். வியட்நாமில் இந்தியா மேற்கொள்ளும் எண்ணெய் அகழ்வாராய்ச்சி மற்றும் தென் சீனக் கடல் சச்சரவுகள் போன்ற ஏனைய விவகாரங்களும் பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மூன்றாவது விவகாரம் முட்டுக்கட்டை நிலையை அடைந்திருக்கும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான கூட்டு இராணுவ ஒத்திகைகளை மீண்டும் ஆரம்பிப்பதுடன், சம்பந்தப்பட்டதாகும்.

இந்தக் கூட்டு இராணுவ ஒத்திகை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை சீன அமைச்சர் விஜயத்தின் விளைவாக ஒரு பிரதான முன்னேற்றமாகும். ஜம்மு -காஷ்மீரில் நிலைகொண்டிருந்த சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவருக்கு சீன அரசாங்கம் விசா வழங்க மறுப்பதை அடுத்து இந்தியா பழிக்குப் பழியாக 2010 ஆகஸ்டில் கூட்டு இராணுவ ஒத்திகையை இடைநிறுத்தியது. இந்த ஒத்திகை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனியும் சீன பாதுகாப்பு அமைச்சரும் தங்களுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு கூட்டாக அறிவித்தார்கள். சீனாவும் இந்தியாவும் இதுவரை, -2007ஆம் ஆண்டில் குன்மிங்கிலும் 2008இல் கர்நாடக மாநிலத்தில் உள்ள பெல்குவாமிலும்-இரு சுற்று இராணுவ ஒத்திகைகளை நடத்தியிருக்கின்றன. மீண்டும் இராணுவ ஒத்திகைகளை ஆரம்பிப்பது தொடர்பில் 2011 தொடக்கம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் இரு தரப்பினரும் அவமானப்படுவதில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கு சாட்டுகளைத் தேடிக்கொண்டிருந்தார்கள். எனவே 2011 ஜூனில் இந்தியா உயர்மட்ட இராணுவ தூதுக்குழுவொன்றை சீனாவிற்கு அனுப்பியது. இதில் சீனாவினால் விசா மறுக்கப்பட்ட இராணுவ அதிகாரியும் அடங்கியிருந்தார். பதிலுக்கு சீனாவும் 2011 நவம்பரில் தனது இராணுவத் தூதுக்குழுவொன்றை புதுடில்லிக்கு அனுப்பியது. அதேவேளை, சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வருடாந்த பாதுகாப்பு பேச்சுவார்த்தையும் முன்னேற்றம் கண்டது. இத்தகைய நான்கா

வது பேச்சுவார்த்தை பெய்ஜிங்கில் 2011 டிசம்பரில் நடைபெற்றது.

எவ்வாறெனினும் சீன பாதுகாப்பு அமைச்சர் இந்த விஜயம் அதன் விளைவான பலாபலன்களுக்கு அப்பால் ஒரு பெரிய சர்ச்சையையும் தோற்றுவித்திருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த சர்ச்சையை எளிதாக தவிர்த்திருக்க முடியும். சீன தூதுக்குழுவை மும்பையிலிருந்துடில்லிக்குஏற்றிவந்த விமானங்களின் விமானிகளான இரு விங்கொமாண்டர்களுக்கு குவாங்லி தலாஐம்பதாயிரம்ரூபாநன்கொடையாக வழங்கினார். தங்களது வழக்கப்படி இது வெறுமனே ஒரு அன்பளிப்பே என்று சீன இராஜதந்திரிகள் கூறுகிற அதேவேளை, இந்தியக் கடற்படை அதிகாரிகளுக்கு நன்றிகூறி மலர்ச்செண்டுகளையோ




ராகுல் காந்தியை குஜராத்திற்கு வந்து காங்கிரஸுக்காக பிரசாரம் செய்யுமாறு நரேந்திர மோடி சவால் விடுக்கிறார். ஆனால் ராகுலோ, காங்கிரஸ் காரர்களோ இச்சவாலை கவனிக்காதவர்கள் போன்று நடந்து கொள்கிறார்கள்

அல்லது சொக்லேட்டுகளையோ கொடுப்பதை விடுத்து சீனர்கள் ஒரு இலட்சம் ரூபா நன்கொடை வழங்கியிருக்கிறார்கள் என்று ஊடகங்கள் விடயத்தை பெரிதுபடுத்திவிட்டன. இந்தச் சர்ச்சை சீன அமைச்சரின் விஜயத்தின் பலாபலன்களின் முக்கியத்துவத்தை மழுங்கச் செய்துவிட்டது. இது அரசாங்கத்திலும் பாதுகாப்புத்துறையிலும் உள்ளவர்களின் முகத்தை நாணஞ்செய்துவிட்டது. அத்துடன் சந்தேகங்களையும் கிளப்பியுள்ளது.


### டில்லியில் அதிகாரத்திற்கான போட்டி ஆரம்பம்

இந்தியாவில் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு இன்னமும் சுமார் 2 வருடங்கள் இருக்கின்றன. ஆனால், கலாநிதி மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்குள் கருத்துவேறுபாடுகளும்பதற்றநிலையும் தோன்றியிருப்பதையடுத்து உரிய காலத்திற்கு முன்கூட்டியே தேர்தல் நடைபெறக்கூடும் என்று பல அரசியல் தலைவர்கள் நம்புகிறார்கள். உள்நாட்டு பொருளாதாரக் கொள்கைகளிலும் வெளியுறவுக்கொள்கையிலும் ஏற்பட்டிருக்கும் வேற்றுமைகள் காரணமாக பிரதமர் சிங் ஒரு பலவீனமான நிலையில் இருக்கிறார். தனது அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக இருக்கும் தமிழ்நாட்டின் திராவிட முன்னேற்றக் கழகத்திடம் இருந்தும் இன்னொரு திராவிடக்கட்சியான ஆளும் அண்ணா தி.மு.க.வின் தலைவி முதலமைச்சர் ஜெயலலிதாவிடமிருந்து வருகின்ற நெருக்குதல் காரணமாக இந்தியாவின் இலங்கைக் கொள்கையில் மாறாட்டத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனால், இப்பொழுது அரசாங்கம் விளைவுகள் எதுவாக இருந்தாலும் துணிந்து நடவடிக்கையில் இறங்க ஆரம்பித்திருப்பதன்காரணமாகநிலைவரத்தில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. கொள்கை விவகாரங்களில் ஒரு முடக்க நிலையில் இருந்த அரசாங்கம் திடீர் என்று இரு நாட்களில் பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் அவசரத்தைக் காட்டியது. இந்தச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு நீண்ட நாட்களாக பொருளியல் நிபுணர்களும் கைத்தொழில்த்துறையினரும் அரசாங்கத்தை வலியுறுத்திக் கொண்டிருந்தனர். தி.மு.க.மற்றும் மேற்குவங்காள முதலமைச்சர் மமதா பானர்ஜி தலைமையிலான திரிநாமுல்









காங்கிரஸ் போன்ற நேச அணிகளிட மிருந்து வரும் எதிர்ப்புகளை அலட்சியம் செய்து காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கம் டீசலின் விலையை ஒரு லீற்றருக்கு ஐந்து ரூபாவினால் அதிக ரித்தது. அரசியல் நெருக்குதலின் காரண மாக 15 மாதங்களுக்கும் கூடுதலான காலமாக இந்த விலை அதிகரிப்பை அரசாங்கம் செய்யாமல் இருந்துவந்தது. எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே தி.மு.க. வும் திரிநாமுல் காங்கிரஸும் டீசல் விலை அதிகரிப்பை வாபஸ் பெறுமாறு கோரிக்கை விடுத்தன. அதுவும் மமதா பானர்ஜி 72 மணித்தியாலங்களுக்குள் வாபஸ் பெறுமாறு காலக்கெடு கூட விதித்தார்.ஆனால் அரசாங்கம் மறுநாள் மேலும் கூடுதல் முக்கியத்துவமுடைய பொருளாதார சீர் திருத்த தீர்மானங்களை எடுத்தது. சில்லறை வியாபாரத்தில் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை 51 சதவீதமும் விமானத்துறையில் அந்த முதலீடுகளை 49 சதவீதமும் அனுமதித்தது.

முன்னென்றுமில்லாத வகையில் பெருவாரியான ஊழல் விவகாரங்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் தருணத்தில் மன் மோகன்சிங் அரசாங்கம் இந்தக் கடுமை யான தீர்மானங்களை மேற்கொண்டி ருப்பது குறிப்பிடத்தக்கது. பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளின் போது இடம்பெற்றதாகக் கூறப்பட்ட ஊழலுக்குப் பிறகு 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டு விவகார ஊழல். இப்போது நிலக்கரி அகழ்வுக்கு நிலத்துண்டுகளை ஒதுக்கீடு செய்ததில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் விவகாரம். இது கோல்கேற் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஊழல் விவகாரத்தில் அமைச்சர்கள் மட்டத்தி லுள்ள, பாராளுமன்ற உறுப்பினர் மட்டத் தில் உள்ள பல காங்கிரஸ் தலைவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்திய மத்திய புலனாய்வுப் பணிய கம் (சி.பி.ஐ) ஏற்கனவே 6 வழக்குகளைப் பதிவுசெய்திருக்கிறது. கோல்கேற் விவ காரம் காரணமாக மழைக்காலக் கூட்டத் தொடர் முழுவதும் பாராளுமன்றத்தை நடத்த முடியாமல் போய்விட்டது. பிரதமர் இராஜினாமா செய்ய வேண்டுமெனக் கோரி பாரதிய ஜனதாக்கட்சி உறுப்பி னர்கள் செய்த அமளிதுமளியினால் பாராளுமன்றத்தின் இரு சபைகளினதும் கூட்டங்களை ஒருநாள் கூட ஒழுங்காக நடத்த முடியாமற் போய்விட்டது. மழைக் காலக்கூட்டத்தொடரின் போது முக்கிய மான பல சட்டமூலங்கள் நிறைவேற்றப் படுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பாரதிய ஜனதா தலைமையிலான எதிர ணிக்கும் காங்கிரஸுக்கும் இடையே யான முட்டுச்சந்து நிலை ஒருவிதமான இணக்கப்பாடும் சாத்தியமாவதற்கு அனு மதிக்கவில்லை. பிரதமரின் இராஜி நாமாவை வலியுறுத்திய பாரதிய ஜனதா நிலக்கரி அகழ்வுக்கு செய்யப்பட்ட நில ஒதுக்கீடுகள் ரத்துச்செய்யப்பட்டால் மாத்திரமே பாராளுமன்றக் கூட்டங்களை நடத்த அனுமதிக்க முடியுமென்று அடம் பிடித்தது. ஆனால், அரசாங்கமே விவாதம் ஒன்றை நடத்த வேண்டுமென்று வலி யுறுத்தியது.

இந்த நிலைமை இவ்வாறிருக்கையில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங் கத்துக்கு வெளியில் இருந்து ஆதரவு அளித்து வரும் முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாதி கட்சி அதன் மகாநாட்டை அண்மையில் நடத்தியது. முலாயம் சிங் தான் இந்த அரசாங்கத்தை பலதடவைகள் நெருக்கடிகளின் போது "பிணை" எடுத்துக் காப்பாற்றி வந்தார். ஆனால், இப்போது கழுத்து ஆழத்துக்கு ஊழல் நெருக்கடிகளில் சிக்கியிருக்கும் அரசாங் கத்துக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கு வதில் முலாயம் சிங்கிற்கு அவ்வளவாக அக்கறையில்லை. அரசாங்கத்துக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்கினால், தனது கட்சிக்கும் பாதிப்பு வந்துவிடும் என்று அவர் அஞ்சுகிறார். கொல்கத்தா வில் நடத்திய மகாநாட்டில் உரையாற்றிய முலாயம் சிங் தாங்கள் நினைத்ததை விடவும் முன்கூட்டியே பொதுத்தேர்தல் வந்துவிடுமென்று உணர்வதாகக் குறிப்பிட்டார். அவ்வாறு பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால், அதற்குப் பிறகு மூன்றாவது முன்னணியொன்றின் ஊடாக இந்தியாவின் பிரதமராக வருவதில் அவருக்கு அக்கறை இருக்கிறது. அதை அவர் வெளிப்படையாகவே காட்டியிருக்கி றார். இதனால், அரசாங்கம் வேறு மாற் றுத் தெரிவின்றிய நிலையில் பொருளா தாரச் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் அவசரத்தைக் காட்டியிருக்கின்றது போலத் தெரிகிறது.

அதேவேளை, விரக்தியடைந்திருக்கும் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்திற்குள்ளும் கட்சிக்குள்ளும் மாற்றங்களைச் செய்வ தற்கும் உத்தேசித்திருக்கிறது. காங்கிர ஸின் பொதுச்செயலாளராக இருக்கும் ராகுல் காந்தி முதற்தடவையாக கூடுதல் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளப் போவ தாக அறிவித்திருக்கிறார். உத்தரப்பிரதேச மாநிலத்தில் காங்கிரஸ் அமைப்பில் பல முக்கிய மாற்றங்களையும் செய்திருப் பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஏனைய மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சியில் பல மாறுதல்கள் ஏற்படுவதற் கான சாத்தியங்கள் இருக்கின்றன.

தற்போது தோன்ற ஆரம்பித்திருக்கும் அரசியல் கோலங்களில் மிகவும் முக்கி யமான ஒரு அம்சம், தற்போதைய கூட்ட ரசாங்கம் தோற்கடிக்கப்பட்டால் அரசாங் கத்துக்குத் தலைமை தாங்குவது யார் என்பதைப் பற்றிய மன நிலையே அது வாகும். அரசியற் கட்சிகள் ஒரு திரிசங்கு நிலையில் இருக்கின்றன. ஆனால், சில தலைவர்கள் பிரதமர் வேட்பாளராக வரக்கூடியவர்களைப் பற்றிய விவாத த்தை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டார்கள். அத்தகைய பெயர்களில் ஒன்று நரேந் திரமோடி, குஜராத் மாநிலத்தின் முதல மைச்சர். மாநிலத்தில் அவர் நிகழ்த்திய சாதனைகளுக்காக அவரை காங்கிரஸ், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் கட்சியான தேசிய காங்கிரஸ் உட்பட சகல கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இவ்வருட இறுதி யில் மோடி தனது மாநிலத்தில் சட்டசபைத் தேர்தலை எதிர்நோக்குகிறார். ராகுல் காந்தியைத் தனது போட்டியாளராகக் கருதும் மோடி, அவரை வந்து குஜராத்தில் காங்கிரஸுக்காகப் பிரசாரம் செய்யவரு மாறு சவால் விடுத்திருக்கிறார். ஆனால்,

**ஊழல் நெருக்கடிகளில் சிக்கியிருக்கும் மன்மோகன் சிங் அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்குவதில் முலாயம் சிங்கிற்கு இப்போது அக்கறை குறைந்து வருகிறது**

ராகுல்காந்தியும் காங்கிரஸ்காரர்களும் இந்தச் சவாலை தற்போதைக்குத் தவிர்த்தே வருகிறார்கள. மோடி ஒரு சாதனையாளர், ஆனால் 2002 குஜராத் இனக்கலவரங்களுக்கு உடந்தையாக இருந்ததால் அவருக்கு ஒரு பெரிய கறை. எது எவ்வாறிருந்தாலும், அவருக்கு முக்கிய பிரச்சினை சொந்தக் கட்சியான பாரதிய ஜனதாவிற்குள்ளும் அதன் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குள்ளும் இருந்துமே வருகின்றது. பாரதிய ஜனதாவின் பெரும்பாலான உயர்மட்டத் தலைவர்கள் (கட்சித்தலைவரான நிதின் கட்காரி, லோக்சபா எதிர்க் கட்சித் தலைவர் சுஸ்மா சுவராஜ், ராஜ்ய சபா எதிர்க்கட்சித் தலைவர் அருண் ஜேட்லி, மூத்ததலைவர்எல்.கே.அத்வானி போன்றோர்) வாய்ப்புக் கிடைக்குமானால், பிரதமராக வருவதற்கு விரும்புவார்கள். தேசியஜனநாயகக்கூட்டணியில் முக்கியமான ஒரு தலைவரான பீஹார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமாரும் சிவசேனைத் தலைவர் பால் தக்காரேயும் மோடியை (முற்றிலும் வேறுபட்ட காரணங்களுக்காக) வெறுக்கிறார்கள். மோடியின் இந்துத்வா இமேஜ் தனது மாநிலத்தில் தனக்கு முஸ்லிம் வாக்குகளை இல்லாமற் செய்துவிடுமென்று நிதிஷ்குமார் கவலைப்படுகிறார். மோடியின் ''சத்பாவ்னா'' உண்ணாவிரத இயக்கத்தினால் தக்காரே குழம்பிப்போயிருக்கிறார்.

முன்னைய காலகட்டங்களில் ஜவஹர்லால் நேருவும் அவரது மகள் இந்திரா காந்தியும் பிறகு அவரது மகன் ராஜீவ் காந்தியும் பிரதமர் பதவியைப் பொறுத்தவரை எப்போதுமே முன்னிலைப்படுத்தப்பட்ட போதிலும், தற்போது காங்கிரஸ் கட்சி பொதுத்தேர்தல் நடைபெற்று முடிந்த பின்னர் மாத்திரமே பிரதமர் பதவிக்குரியவரைத் தெரிவுசெய்வது என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது. என்றாலும் காங்கிரஸ் மீண்டும் பொதுத் தேர்தலில் ஆட்சியமைக்கக்கூடிய பலத்துடன் தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில் யார் பிரதமர் பதவிக்கு வருவார் என்பதில் சந்தேகமில்லை. இப்போது காங்கிரஸ் (அது சோனியா காந்தியேதான்) ராகுல் காந்தியை பிரதமர் பதவிக்கு முன்தள்ளுமா என்ற கேள்வியொன்று கிளம்புகிறது. வெளிநாட்டவர் என்ற முறையில் பிரஜாவுரிமை தொடர்பில் சோனியா காந்திக்கு இருந்த சச்சரவில் அவருக்குச் சார்பாக உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பை அளித்திருப்பதால், இந்தக் கேள்வி முக்கியத்துவம் பெறுகிறது. காங்கிரஸ் கட்சி அடுத்த பொதுத்தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் சோனியா காந்தியே பிரதமர் பதவிக்கு உரிமை கோரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஒன்று மாத்திரம் தெளிவானது. தற்போது 80 வயதைத் தாண்டிவிட்ட மன்மோகன்சிங்கைப் பொறுத்தவரை, அவர் பிரதமராக இருப்பது இதுவே கடைசித் தடவையாகும். ராகுல் காந்தியின் சகோதரி பிரியங்கா இப்போது தனது நிலைப்பாட்டைத் தெளிவாக அறிவித்துவிட்டார். அரசியலில் பிரவேசிக்கப்போவதில்லை என்றும் தாயார்சோனியாகாந்தியின்தொகுதியை கவனித்துக் கொண்டிருப்பதே தனக்கு நிம்மதியைத் தருவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

## மன்மோகன்சிங் எப்போது பாகிஸ்தான் செல்வார்?


பாகிஸ்தானுடன்உறவுகளைமேம்படுத்துவதற்கான பிரதமரின் ஆர்வத்துக்கு இணங்க வெளியுறவு அமைச்சர்எஸ்.எம். கிருஷ்ணாஅண்மையில்பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஹினா ரபானி கார் அவர்களுடன் முக்கியத்துவம் வாய்ந்த விசா உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருக்கிறார். தல யாத்திரை நோக்கங்களுக்காக மக்களை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான கட்டுப்பாட்டு எல்லையூடாக அனுமதிப்பதற்கும் கலாசாரப் பரிவர்த்தனைக்குமான வேறு இரு உடன்படிக்கைகளும் கூட கிருஷ்ணாவின் இஸ்லாமாபாத் விஜயத்தின்போது கைச்சாத்திடப்படிருக்கின்றன. கடந்த தடவை இஸ்லாமாபாத்தில் கிருஷ்ணா இருந்தபோது நிலவிய சூழ்நிலையைப் போலன்றி, இத்தடவை மிகவும் சுமுகமான சூழ்நிலையிலேயே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அந்தச் சந்தர்ப்பத்தில் பேச்சுவார்த்தைகளின் போது கிருஷ்ணா டில்லியில் இருந்து ரிமோட் கொன்ரோலினால் கட்டுப்படுத்தப்பட்டதாக அப்போதைய பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சரினாலேயே குற்றஞ்சாட்டப்பட்டது. கிருஷ்ணா இதை மறுத்தபோதிலும் கூட பேச்சுவார்த்தைகளின் பின்னராக விடுக்கப்பட்ட அறிக்கைகள் உண்மையை வெளிக்கொணர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முற்றிலும் மாறானவராக பாகிஸ்தானின் புதிய வெளியுறவு அமைச்சர் இருக்கிறார். மும்பைத் தாக்குதலின் குற்றவாளிகள் தொடர்பில் இந்தியா அதன் நிலைப்பாட்டைத் தளர்த்திய அதே வேளை, இந்தியாவுடன் புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப் போவதாக உறுதிமொழிவழங்கினார். பயங்கரவாதக் குற்றச்செயல்களில்சம்பந்தப்பட்டிருக்கக் கூடியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் விடுவது பாகிஸ்தானின் நலன்களுக்கு உகந்ததல்ல என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் வலியுறுத்தினார் என்பது கவனிக்கத்தக்கது. எவ்வாறெனினும், பாகிஸ்தானுக்கான மன்மோகன் சிங்கின் உத்தேச விஜயம் தொடர்பில் இந்தியா உறுதிமொழியெதையும் வழங்குவதைத் தவிர்த்திருக்கிறது. பாகிஸ்தானுக்கான தனது விஜயம் சரியான நேரத்தில், சரியான விளைபயன்களுடன் வரவேண்டும் என்ற நிலைப்பாட்டை மன்மோகன் சிங் எடுத்திருக்கின்ற அதேவேளை, பாகிஸ்தான் அவரது விஜயத்தில் ஆர்வம் மிகுந்ததாகவே இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

## தற்காப்பு நிலையில் அரசாங்கம்

இது எளிதாகவே தவிர்த்திருக்கக் கூடிய ஒரு விவகாரமாகும். ஆனால் காங்கிரஸ் அரசாங்கங்கள் அவ்வாறு நடந்து கொள்வது வழக்கமில்லை. எதிர்பாராத விதமாக மகாராஷ்டிரா மாநில அரசாங்கம் கார்ட்டூனிஸ்டான அசீம் திரிவேதியை கைது செய்தது. அரவிந் கெஜ்ரிவால் தலைமையிலான ஊழல்களுக்கெதிரான இந்தியா என்ற இயக்கத்தின் ஒரு செயற்பாட்டாளரான திரிவேதி தேசத் துரோகக் குற்றச்சாட்டுகளின் கீழே கைதுசெய்யப்பட்டார். இந்தியாவின் தண்டனைக் கோவை சட்டத்தின் 124 ஆவது பிரிவின் கீழ் இவ்வாறு குற்றஞ்சாட்டப்படுகிற எவருக்கும் பிணை வழங்கப்படுவதில்லை. அத்துடன் ஆயுட்காலச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட முடியும். கடந்த டிசம்பரில் அண்ணாஹசாரே முன்னெடுத்த ஊழலுக்கெதிரான இயக்கத்தின் போது சில கேலிச்சித்திரங்களை வரைந்ததே திரிவேதி செய்த குற்றமாகும். ஊழலுக்கெதிரான கார்ட்டூன்கள் என்ற பெயரிலான இவரது இணையத்தளத்தையும் காங்கிரஸ் தலைமையிலான மாநில அரசாங்கம் தடைசெய்தது.

மும்பையில் பந்ராவிலுள்ள நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட திரிவேதியை 16 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. அவர் பிணையில் தன்னை விடுவிக்குமாறு கேட்கவுமில்லை, வழக்கறிஞர் ஒருவரின்






உதவியை நாடவும் இல்லை. அரசாங்கத்திற்கு எதிரான வெறுப்புணர்வு நாளுக்குநாள் அதிகரிக்கத் தொடங்கியது. மாநில முதலமைச்சர் பிரிதிவிராஜ் சவானும் தேசியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும் தங்களை இந்தப் பிரச்சினையுடன் சம்பந்தப்படாதவர்களாக காட்டிக்கொண்டனர். இதையடுத்து பொலிஸார் திரிவேதிக்கெதிரான தேசத்துரோக குற்றச்சாட்டை வாபஸ் பெற்றுக் கொண்டனர். சில தினங்கள் சிறையில் இருந்த பிறகு திரிவேதி சுதந்திரமாக வெளியே வந்தார். தேசத்துரோக குற்றச்சாட்டுகள் வாபஸ்பெறப்படுமென்று கெஜ்ரிவாலுக்கு முதலமைச்சர் சவான் உறுதியளித்ததையடுத்தே திரிவேதி தனக்கு பிணை வழங்குவதை ஏற்றுக் கொண்டார்.

பொலிஸார் குற்றம் சாட்டியதன் பிரகாரம் வழக்கைத் தொடர்ந்து நடத்தியிருந்தாலும் கூட அது தோல்வி கண்டிருக்கும். ஏனென்றால் ஒருவர் மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்படுவதாக இருந்தால் அவர் அரசுக்கெதிராக போரைத்தொடுத்து இருக்க வேண்டும். ஆனால் திரிவேதி ஊழலுக்கு எதிராக ஆதரவளிப்பதாக அவர் நம்புகிற தேசிய நிறுவனங்களை கார்ட்டூன்கள் மூலமாக

**ஊழலுக்கு எதிரான கார்ட்டூன்கள் என்ற பெயரிலான தனது இணையத்தளத்தில் தேசிய நிறுவனங்களை கேலி செய்யும் கார்ட்டூன்களை வரைந்தமைக்காக அசீம் திரிவேதி கைது செய்யப்பட்ட விவகாரம் ஊடக சுதந்திரம் தொடர்பில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது**

கேலி மாத்திரமே செய்திருந்தார்.

இந்தச் சம்பவம் ஊடகச் சுதந்திரம் தொடர்பான ஒரு பெரிய விவாதத்தையும் மூளவைத்திருக்கிறது. அவசரகால நிலையின் போது இடம்பெற்ற சம்பவங்களை தற்போதைய நிலைவரங்கள் தனக்கு நினைவுபடுத்துவதாக மூத்த பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி குறிப்பிட்டார். பல அரசாங்கங்கள் கண்டனங்களை பொறுத்துக் கொள்ள முடியாமல் அவற்றைத் தடுப்பதற்கு எதையும் செய்யத் தயாராயிருக்கின்றன.

பொதுமக்களின் நெருக்குதலைத் தொடர்ந்து திரிவேதி விடுதலை செய்யப்பட்ட அதேவேளை, இந்தூரில் இருந்து வெளியாகும் மாலை பத்திரிகையான பிரபாத் கிரானின் கார்ட்டூனிஸ்டான ஹரிஸ்யாதவ் குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடியை கேலிச்சித்திரமொன்றில் வரைந்தமைக்காக இன்னமும் கூட வழக்கை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. யாதவ் கடந்த வருடம் கைது செய்யப்பட்டு பிறகு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். முஸ்லிம் ஆதரவாளர் ஒருவரினால் வழங்கப்பட்ட தலைப்பாகையை ஏற்பதற்கு மோடி மறுப்பதாக அந்த கேலிச்சித்திரத்தை யாதவ் வரைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிராந்திய அரசியல்


# மாலைதீவு; ஒரு புரட்சியின் 'கதை'

மாலைதீவில் ஏதேச்சாதிகாரம் போய் ஜனநாயகம் வந்தாலும் புதிய அரசின் தலைமைக்கு கூட நாட்டின் கடந்த 1000 ஆண்டு சரித்திரத்தில் ஊறிப்போய்விட்ட அதிகார மனப்பான்மையை விட்டு விட முடியவில்லை

என். எஸ்.எம்.

கடந்த பெப்ரவரி மாதம் ஏழாம் தேதி மாலைதீவு நாட்டின் அன்றைய ஜனாதிபதி முஹமட் நஷீதின் ராஜிநாமா செய்ததன் பின்னணியில் இராணுவப் புரட்சியோ, மற்ற எந்த விதத்திலுமான நிர்ப்பந்தங்களோ இல்லை என்று இது குறித்து விசாரணை நடத்திய சர்வதேச கமிஷன் கூறியுள்ளது. கமிஷனின் முடிவை, நஷீதின் மாலைதீவு ஜனநாயகக் கட்சி, முணுமுணுப்புடன் ஏற்றுக் கொண்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, அந்த நாட்டில் தொலைந்து போன அரசியல் ஸ்திரத்தன்மை சிறிது, சிறிதாகத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. என்றாலும் அதுவே நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், கடந்த 2008-ஆம் ஆண்டிலேயே ஜனநாயகத்தைத் தழுவிய மாலை தீவில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி விடுமா, என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

மாலைதீவின் சமகால பிரச்சினை ஒன்றும் இலங்கையில் இனப்பிரச்சினை போன்று தசாப்தங்களாக உருவாகி வந்துவிடவில்லை. மாறாக, கடந்த 1978-ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மம்மூன் அப்துல் கயும் பதவி ஏற்றதைத் தொடர்ந்து, மூன்று தசாப்தங்களாக நடந்தேறி வந்த ஏதேச்சாதிகாரம் ஜனநாயக முறைப்படி முடிவிற்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து முளைவிட்ட அரசியல் பிரச்சினையே அது. சுருங்கச் சொல்ல வேண்டுமானால், நஷீத் தலைமையில் தோன்றிய ஜனநாயகப் போராட்டம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, 2007ஆம் ஆண்டு புதிய அரசியல் சட்டம், அதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2009-ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றின் பிரதிபலிப்பே ஆகும். அந்த மாற்றங்களைப் புதிய ஆட்சியாளர்களான ஜனாதிபதி நஷீதும் அவரது கட்சியினரும் புரிந்து செயல்படாத காரணத்தாலேயே பிரச்சினைக்கு மேல்



முன்னாள் ஜனாதிபதி முகஹமட் நஷீத்

பிரச்சினையாக, முடிவில் அவர் பதவி விலகும் வரை சென்றுவிட்டது என்பதே உண்மை.

## ஏதேச்சாதிகாரமான ஜனநாயகம்

"இந்திரன் மாறினாலும், இந்திராணி மாறவில்லை" என்று சொல்வார்கள். மாலைதீவில் ஏதேச்சாதிகாரம் போய் ஜனநாயகம் வந்தாலும், புதிய அரசின் தலைமைக்குக்கூட நாட்டின் கடந்த ஆயிரம் ஆண்டு சரித்திரத்தில் ஊறிப் போய்விட்ட அதிகார மனப்பான்மையை விட்டுவிட முடியவில்லை. அத்துடன், அண்டை நாடுகளான இலங்கை, இந்தியா மற்றும் அயலில் உள்ள வளைகுடா மற்றும் ஆபிரிக்க நாடுகளைப் போல் மேலைநாடுகளின் ஆட்சிமைக்குள் எப்போதுமே வந்ததில்லை என்ற நியாயமான தேசியச் செருக்கின் அநியாயமான தனிமனித வெளிப்பாடு வேறு. இரண்டும் சேர்ந்து செயலாற்றியதில், தத்தித்தத்தி மாலைதீவில் கால்பதிக்க முயன்ற ஜனநாயக குழந்தை தவறி விழுந்து விட்டது அவ்வளவு தான்.

ஆனால், இவ்வாறான ஜனநாயக மயக்கம் ஏற்படும் முன்னரே, நாட்டின் அடிப்படை மனநிலைக்கு ஏற்ப மாலைதீவு, புதிய அரசியல் சட்டத்தின் மூலம் அமெரிக்காவைப் போன்ற ஜனாதிபதி ஆட்சி முறையை விரும்பி ஏற்றுக்கொண்டது. ஆனால், இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவில் வேர்விட்டுள்ள பதவிப் பகிர்ந்தளிப்பு முறையை ஒரே நாளில் மாலைதீவால் செயல்பட வைக்க முடியாது. இதன் காரணமாக, பதவி பகிர்ந்தளிப்பு முறை அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கருத்தாக இருந்தாலும், செயல்பாட்டில், மாலைதீவின் ஜனாதிபதி ஆட்சிமுறை கிட்டத்தட்ட இலங்கையின் "அதிகார மைய" ஜனாதிபதி ஆட்சிமுறையை (Executive Presidency) ஒட்டியே செயல்படத் துவங்கியது என்பதே உண்மை.

இது குறித்த தாக்கீதுகளும் தர்க்கங்களும் துவங்கிய போது, ஜனாதிபதி நஷீத் எதேச்சாதிகார முறையில் நடக்க முற்பட்டார் என்பது குற்றச்சாட்டு. ஆனால், அவருக்கு முன்னர்


ஜனாதிபதி முகமட் வாஹிட்

பதவியில் இருந்த ஜனாதிபதி கயும் (1978-2008) மற்றும் ஜனாதிபதி இப்ராஹிம் நசீர் (1968-78) ஆகியோர் காலத்தில் இருந்திராத ஜனநாயக முறைகள் அவரது மூன்றாண்டு ஆட்சியிலேயே விதையாக விதைத்து, விருட்சமாக விரிந்ததும் அவரது அரசியல் பின்னடைவிற்கு மற்றுமோர் காரணம்.

இதைவிட தர்க்கரீதியான ஒரு காரணமும் உண்டு. புதிய அரசியல்சட்டம் குறித்து மாலைதீவில் அரசியல் பேச்சு வார்த்தைகள் நடந்த போதெல்லாம், நஷீத் மற்றுமுள்ள பிற எதிர்க்கட்சிகள் மீண்டும் எப்போது புதிய முறைப்படி தேர்தல் நடைபெற்றாலும் அப்போதைய ஜனாதிபதி கயுமே மீண்டும் பதவிக்கு வருவார்என்றேநம்பிச்செயல்பட்டார்கள். அவர் மீண்டும் ஏதேச்சாரியாகவே செயல்படுவார் என்றும் அவர்கள் உறுதியாக நம்பினார்கள். அதன் காரணமாக நாட்டின் மூன்றாவது குடியரசு அரசியல் சாசனத்தை வரையறுக்கும் போது, ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களைக் குறைக்க முடியவில்லை என்றாலும் அதற்கு "செக்" வைக்கும் விதமாக நாட்டின் பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரங்களை வழங்கினார்கள். ஆனால், 2008-ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கயும் தோற்று, நஷீத் பதவிக்கு வந்தாலும், அவராலும் அரசியல்சட்ட மாற்றங்களை உணர்ந்து செயல்பட முடியவில்லை என்பதே உண்மை.

மாலைதீவின் தற்போதைய நிலைமைக்கு இவை மட்டுமல்ல காரணங்கள். இலங்கை, இந்தியா போன்ற அண்டை நாடுகளில் சுதந்திரம் அடைந்த கால கட்டத்தில் மக்களின் பெருத்த ஆதரவைப் பெற்ற ஒரு கட்சியே நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை உருவானது. உண்மையில், இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியும், இந்தியாவில் தேசிய காங்கிரஸ் கட்சியும் சுதந்திர வேட்கையின் காரணமாக பல்வேறு அரசியல் மற்றும் சமூக-பொருளாதார கோட்பாடுகளை உள்ளடக்கிய சமுதாய குழுக்களின் ஒன்றுபட்ட முகமே. அந்தந்த நாடுகளுக்கு சுதந்திரம் கிடைத்து, மக்களாட்சி மலர்ந்து, வேர்விட்டகாலம் தொட்டு அந்த "ஒருமுக" கட்சிகளின் பல்வேறு பரிமாணங்கள் தனித்தனி அரசியல் கட்சிகளாக உருவெடுத்தன. ஆனால் மாலைதீவில் நடந்ததே வேறு. அதனையும் நாட்டின் ஜனநாயகத் தலைமைகள் உணர்ந்து செயல்படவில்லை.

மாலைதீவு "காலனி ஆதிக்கத்தில்" இருந்து விடுபடப் போரிட வேண்டிய அவசியம் இல்லை என்பதால் தானோ என்னவோ, அங்கு "ஒரு குடை" அரசியல் கட்சிகள் எப்போதுமே இருந்தது இல்லை. கடந்த 1968-ஆம் ஆண்டு துவங்கி, அடுத்தடுத்த எதேச்சாதிகார ஆட்சிகளில் ஜனாதிபதிப் பதவிக்கு தேர்தல் என்று ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை அரங்கேறினாலும், அது பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட "ஒற்றை வேட்பாளரை" வாக்காளர்கள் ஏற்றுக்கொள்ளும் முறையிலேயே அமைந்திருந்தது. முப்பது ஆண்டு காலத்திற்கு ஜனாதிபதி

கயுமிற்கு ஆதரவாக வாக்களித்து வந்த மக்கள், ஜனநாயகம் வேரூன்றத் துவங்கிய புதிய நூற்றாண்டில், "ஒரு குடை" தலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, "ஒற்றை வேட்பாளர்" முறையையும் முடிவுக்கு கொண்டு வந்தனர். இதன் காரணமாகவோ என்னவோ, மாலைதீவில் ஜனநாயகம் வேரூன்றத் துவங்கிய முதல் நாள் தொட்டே "பன்முக" தலைமைகளும் பல்வேறு அரசியல் கட்சிகளும் விழுது விடத் துவங்கின.

இதன் காரணமாகவே, "காலனி ஆதிக்கத்தில்" முன்பு இருந்த மற்ற "மூன்றாவது உலக" நாடுகளைப் போல் இல்லாமல், மாலைதீவில் 2008-ஆம் ஆண்டுஜனாதிபதிப்பதவிக்குநடைபெற்ற முதல் ஜனநாயக தேர்தல் தொட்டே, பல்வேறு அரசியல் கட்சிகளும் முளைத்து எழுந்தன. அதில் பலவும் பலம் வாய்ந்ததாகவும் அமைந்தன. ஜனாதிபதி ஆவதற்கு ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிலையில், "இருசுற்று" தேர்தலின் இரண்டாவது சுற்றில் ஜனாதிபதி கயுமுடன் நேரடிமோதலில் வெற்றிபெற, மாலைதீவு ஜனநாயகக் கட்சியின் நஷீத் பிற கட்சிகளின் ஆதரவைப் பெற வேண்டியிருந்தது. இதில் "குடியரசுக் கட்சியின் தலைவர் காசிம் இப்ராஹீம் மற்றும் தற்போது "மாலைதீவு மக்கள் கட்சி" என்று உருமாறி உள்ள "தேசிய இயக்கத்தின்" ஹசன் சையீதும் முக்கியமானவர்கள்.

கடந்த 2008-ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் முதல் சுற்றில் பதினாறு மற்றும் பதினேழு சதவீத வாக்குகள் அளவில் பெற்றிருந்த காசீம் இப்ராஹீம் மற்றும் ஹசன் சையீது ஆகியோரின் ஆதரவில் மட்டுமே நஷீத் இரண்டாவது சுற்றில் வெற்றி பெற முடிந்தது. காரணம், முதல் சுற்றில் நஷீத் எதிர்க்கட்சி வேட்பாளர்களில் முன்னணியில் வந்தாலும் அவரால் இருபத்தைந்து சதவீத வாக்குகளையே பெற முடிந்தது. அப்போதைய ஜனாதிபதி கயுமோ, எதிர்ப்புகளையும் மீறி நாற்பத்தைந்து சதவீத வாக்குகளைப் பெற்று முன்னணியில் இருந்தார். ஆனால், இரண்டாவது சுற்றுத் தேர்தலில் மற்ற இரண்டு வேட்பாளர்களின் உதவியோடு வெற்றி பெற்று அமைச்சரவை அமைத்த ஜனாதிபதி நஷீத், அவர்கள் இருவரையும் கழற்றி விடுவதிலேயே குறியாக இருந்தார். அதில் இரண்டு மூன்று மாதங்களிலேயே வெற்றியும் பெற்றார்.

ஆனால், இதன் காரணமாக மட்டுமே ஆறு மாதங்கள் சென்று நடைபெற்ற முதல் ஜனநாயக ரீதியிலான பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி நஷீதின் மாலைதீவு ஜனநாயகக் கட்சியால் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. அந்த நிலையில், ஜனாதிபதி கயுமே ஜனநாயக தேர்தல் முறையிலும் எப்படியாவது பதவியை தக்க வைத்துக் கொள்வார் என்று எதிர்க்கட்சிகளால் வரையப்பட்ட புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் அரசு தலைமைக்கும் பாராளுமன்றத்திற்கும் குடுமிப்பிடிச் சண்டை நடைபெறுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. போதாதற்கு, தனது ஆட்சிக்கு பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெற, ஜனாதிபதி நஷீத் பிற கட்சிகளை உடைத்தாளத் துவங்கினார்.

இந்தப் பின்னணியில், நஷீதால் உடைபட்டுப் போன அரசியல் கட்சிகள் அவரை எவ்வாறாவது பதவியில் இருந்து விலக்க கங்கணம் கட்டிக் கொண்டு, ஒருங்கிணைந்து செயல்படுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. அவ்வாறு நஷீத் தலைமையால் உடைக்கப்பட்ட ஒரு கட்சியின் தலைவர் தான் அவரது துணை ஜனாதிபதி, வாஹீத் ஹசன் மானிக். இந்த வருடம் பெப்ரவரி மாதம் ஏழாம் தேதி ஜனாதிபதி நஷீத் பதவி விலகியதைத் தொடர்ந்து, அமெரிக்க முறையைப் பின்பற்றும் அரசியல் சட்ட முறைமையின் கீழ் வாஹீத் அந்தப் பதவியில் அமர்ந்து தற்போது ஓர்கூட்டணி அரசிற்குதலைமை வகிப்பதும் தனிக் கதை.

வாஹீது தலைமையிலான ஆட்சியில் முன்னாள் ஜனாதிபதி கயுமின் தலைமையிலான "மாலைதீவு முற்போக்கு கட்சியும், அவரால் முன்னர் தோற்றுவிக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்ட "மாலைதீவு மக்கள் கட்சியும்" முக்கியமானவை. அது போன்றே, முன்னர் ஜனாதிபதி நஷீதால் "ஏமாற்றப்பட்டதாக" குற்றம்சாட்டும் காசிம் இப்ராஹீம் மற்றும் ஹசன் சையீது ஆகியோரின் கட்சிகளும் புதிய ஜனாதிபதி வாஹீது தலைமையிலான அரசில் பங்கு பெற்று, பாராளுமன்றத்திலும் ஆட்சிக்குத் தனிப் பெரும்பான்மை கிடைக்கும் வகையில் கூட்டணியாகச் செயல்பட்டு வருகின்றன.

இடைப்பட்ட காலத்தில் ஆட்சி செய்த ஜனாதிபதி நஷீத், தனது ஆட்சிக்கு பெரும்பான்மை இல்லாத பாராளுமன்றத்துடன் அனுசரணையாகச் செல்லாமல், பெரும்பாலும் எதிர்மறையாக முட்டி மோதி வந்தார். இந்த வகையில் ஒவ்வொரு முறையும் பாராளுமன்றத்துடன் அநாவசியமாகப் போட்டியிட்டு தோல்வியுற்ற நஷீத் தலைமை, எதிர்க்கட்சிகளை "பிற்போக்கு கட்சிகளாக" காட்டுவதிலேயே அதிக கவனத்தை செலுத்தி வந்தனர். ஆனால், அவர்களால் அதில் வெற்றி பெற முடியவில்லை. மேலும், எதிர்க்கட்சித் தலைவர்களான காசிம் இப்ராஹீம் மற்றும் முன்னாள் ஜனாதிபதி கயுமின் சகோதரர் அப்துல்லா யாமீன் ஆகியோரை நாட்டின் இராணுவத்தின் மூலம் கைது செய்து குட்டித் தீவுகளில் தனிமைச் சிறை போன்ற சூழலில் சிறிது காலம் தங்க வைத்ததன் மூலம், தனக்கு முந்தைய ஜனாதிபதி கயுமின் எதேச்சாதிகார போக்கிற்கு தான் சற்றும் சளைத்தவர் அல்ல என்ற எண்ணத்தையும் எதிர்க்கட்சிகளிடையே அழுத்தமாகவே பதித்தார்.

அதேசமயம், பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளை அநாவசியமாக எதிர்கொள்ளும் காலங்களில் மக்களின் ஆதரவு தனது தலைமைக்கு முழுவதுமாக கிடைக்க வேண்டும் என்ற வகையில் ஜனாதிபதிநஷீத் ஆட்சிசெய்தார்என்றால், அதுவும் இல்லை. ஒரு பக்கத்தில் மக்களுக்குத் தேவையான வளர்ச்சிப் பணிகளை மாலைதீவின் ஒவ்வொரு குட்டித் தீவுகளிலும் முன்னெடுத்துச் சென்றாலும், சர்வதேச நிதி இணையம் போன்ற அமைப்புகளின் அறிவுறுத்தலின்படி, அரசு ஊழியர்களின் எண்ணிக்கையையும் அவர்களது மாதாந்தர சம்பளத்தையும் ஒரே கட்டத்தில் இருபது சதவீதமாக குறைத்தார். பின்னர், நிதி இணையம் கூறியபடி மாலைதீவின் "ருபியா" எனப்படும் ரூபாவை அதிரடியாக மதிப்புக் குறைத்தார். உணவுப் பொருள், மருந்து மற்றும் அனைத்து தினப்படி தேவைகளுக்கும் இறக்குமதியையே நம்பி இருக்கும் தீவு நாடான மாலைதீவில் இதன் காரணமாக விலைவாசியும் அதே விதத்தில் அதிரடியாக உயர்ந்தது. இது போதாது என்று, மின் கட்டண சீரமைப்பு என்ற பெயரில் அதீதமாக கட்டண உயர்வு செய்ததன் மூலமும் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்தார்.

இந்தப் பின்னணியில் தான், கடந்த ஆண்டு, "டிசம்பர் 23 இயக்கம்" என்ற பெயரில் ஜனாதிபதி நஷீத் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து இஸ்லாமிய மதம் சார்ந்த "தொண்டு நிறுவனங்கள்" போராட்டத்தில் குதித்தன. தலைநகர் மாலேயில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில்

மதுபான விற்பனையை அனுமதிக்க முடிவு செய்தது, இஸ்ரேல் நாட்டுடன் அதீதமாக நட்புறவு பாராட்டுகிறது என்ற குற்றச்சாட்டு மற்றும் உலக மற்றும் பிராந்திய அரசியலிலும், உள்நாட்டுக் கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்களில் அமெரிக்க ஆதரவு நிலைப்பாடுகளை எடுத்தது என்பன போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்தே இந்த போராட்டம் நடத்தப்பட்டது. போதாத தற்கு, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்த கதையாக, அரசு ஆதரவு நிலை எடுத்து அரசில் பங்கு பெற்றிருந்த மதவாத கட்சியான "நீதி கட்சியை" நஷீத் தலைமை உடைத்ததும் ஒரு காரணம். ஆனால், அந்தப் போராட்டத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளும் பங்கேற்று, அதனை தேசிய அளவிலும், பிராந்திய அளவிலும் ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாக மாற்றியதும் சமகால வரலாறு.

**நீதிபதியின் கைது**

ஜனாதிபதியாக நஷீத் தலைமை, எப்போதெல்லாம் ஏதாவதொரு அரசியல் பிரச்சினையில் சிக்கிக்கொள்கிறதோ, அதில் இருந்து மக்களை திசைதிருப்ப, வேறு ஏதாவது ஒரு பிரச்சினையை தானாகவே உருவாக்கி வந்திருக்கிறது. அவ்வாறு தான், "டிசம்பர் 23 இயக்கத் தின்" போராட்டம் மூன்று வாரங்களுக்குப் பின்னரும் வீரியம் குறையாத நிலையில், கடந்த ஜனவரி மாதம் 16-ஆம் தேதி, குற்றவியல் தலைமை நீதிபதி "ஹாஜி" முகமது அப்துல்லாவை பல்வேறு கார ணங்களைக் காட்டி, இராணுவத்தால் கைது செய்து, தீவுச் சிறையில் அடை த்தது. இது அரசுக்கு எதிராக சாதாரண மக்களையும் வழக்கறிஞர் சமுதாயத் தையும் திருப்பவே செய்தது. அது போன்றே, இராணுவத்திலும், காவல்த் துறையிலும் கூட, முந்தைய கயுமின் ஆட்சிக் காலத்தைப் போலவே, நஷீதின் ஜனநாயக அரசும் தங்களை முறை தவறி பயன்படுத்துவதாகக் கூறி முணு முணுப்புகள் கேட்கத் துவங்கின.

இந்தப் பின்னணியில், கடந்த பெப்ரவரி மாதம் ஆறாம் தேதி இரவு, "டிசம்பர் 23 இயக்கத்தின்" தொடர் போராட்டத்தைக் குலைக்க, ஆளும் மாலைதீவு ஜனநாய கக் கட்சியின் தொண்டர்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கும் வகையில் அங்கு பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்ட காவல்த் துறையினரையும், பின்னர் அவர்களுக்கு மாற்றாக அனுப்பப்பட்ட இராணுவத்தி னரையும் ஜனாதிபதி நஷீத் பின்வாங்க உத்தரவிட்டதற்கு எதிராக இரு துறை யினரையும் சேர்ந்த வீரர்கள் தனிப்பட்ட முறையில் போராட்டத்தில் குதித்தனர். இனி தங்களது இரு துறையினரையும் அரசு அநியாயமான முறையில் சட்டத் திற்குப் புறம்பான வகையில் பயன் படுத்தாது என்று ஜனாதிபதி உறுதிமொழி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே அவர்கள் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதரவாக எதிரணி போராட்டக்காரர்களும் களத்தில் இறங்கியது, பிரச்சினையை வலுவாக்கியது.

இந்த நிலையில், போராட்டத்தில் இறங்கிய இராணுவம் மற்றும் காவல்த் துறையினரின் உள்ளுணர்வுகளைப் புரிந்து கொள்ளாமலே, ஜனாதிபதி நஷீத் அவர்களை நேருக்குநேர் நடுவீதியில் சந்தித்தது, அப்போதைய பேச்சுவார்த்தை களை சுமுகமான நிலையில் நடத்தாதது ஆகியவையே அவரது ராஜிநாமாவிற்கு காரணமானது. ஆனால், தொலைக்காட்சி களின் முன்னர் தனது அமைச்சர்கள் முன்னிலையில் பதவியை ராஜிநாமா செய்த இருபத்தி நான்கு மணி நேரத் திற்குப் பின்னர், "இராணுவ புரட்சி" என்று அதற்கு பெயரிட்டு, உலக நாடு களின் ஆதரவை ஜனாதிபதி நஷீத் சம்பாதிக்க நினைத்ததை, தற்போது அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் ஏற்றுக் கொள்ளவில்லை. அதேசமயம், நடைபெறாத இராணுவப் புரட்சியின் பெயரில் நஷீத் ஆதரவாளர்கள் கடந்த பெப்ரவரி எட்டாம் திகதி நாடு தழுவி நடத்திய வன்முறைப் போராட்டத்தை காவல்த் துறை மற்றும் இராணுவத்தினர் அடக்குமுறை மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரச் செய்த முயற்சியையும் சர்வதேச சமூகத்தினால் அங்கீகரிக்கப் பட்ட விசாரணை கமிஷன் பாராட்டிவிட வில்லை.

விசாரணைக் கமிஷனின் முடிவு அறி விக்கப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் நஷீதின் பிரதிநிதியாக சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளுக்கு ஏற்ப நியமிக்கப்பட்ட "காஹூ" சையீது அதிலி ருந்து விலகிவிட்டார். முழுமனதுடன் இல்லை என்றாலும், சர்வதேச சமூகம் தன்னை முழுவதுமாக கைவிட்டுவிடுமோ என்ற அச்சத்தில் நஷீத் கமிஷன் அறிக் கையை வேண்டாவெறுப்பாக ஏற்றுக் கொண்டுள்ளார். என்றாலும், அவர் கோரியபடி ஜனாதிபதி பதவிக்கு உடன் தானே தேர்தல் நடைபெற வேண்டும் என்ற அவர் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இல்லை என்றாகி விட்டது. இதன் பொருள், அடுத்த ஆண்டு ஜுலை-அக்டோபர் மாதங்களு க்கு இடைப்பட்ட காலத்தில் நடைபெற விருக்கும் ஜனாதிபதித் தேர்தலில்



மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி மொகமட் வாஹிட்டினால் நியமிக்கப்பட்ட தேசிய விசாரணை ஆணைக்குழுவின் இணைத்தலைவரான சிங்கப்பூர் முன்னாள் நீதியரசர் ஜி.பன்னீர்செல்வம் இறுதி அறிக்கையை அவரிடம் கையளிக்கும் காட்சி

போட்டியிட்டு மீண்டும் ஆட்சியில் அமர அவர் முயற்சிப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

இன்றைய சூழலில், தனியொரு வேட்பாளராக அதிகபட்ச வாக்குகளை நஷீதே பெறுவார் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது என்றாலும், அவரால் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை தனியொரு தலைவராகவோ, கட்சியாகவோ பெற்று தேர்தலில் வெற்றி பெறும் சூழ்நிலை தற்போதைக்கு இல்லை. அதே சமயம், அவரை எதிர்த்து அரசியல் செய்யும் ஆளும் கூட்டணியில் உள்ள பல்வேறு கட்சிகளும், ஜனாதிபதி வாஹீத் மற்றும் கயும், காசீம் இப்ராஹீம் போன்ற தலைவர்களும் முதல் சுற்றில் தனித்துப் போட்டியிட்டுவிட்டு, இரண்டாவது சுற்றில் தங்களில் அதிக வாக்குப் பெறுபவரை நஷீதுக்கு எதிராக ஆதரிப்பது என்ற முடிவை நோக்கி நகர்ந்து வருகின்றனர்.

என்றாலும், கயும் போன்று பழம் தின்று, கொட்டை போட்ட அரசியல் தலைவர்கள் தங்களது துருப்புச் சீட்டு என்ன என்பதை வெளிக்காட்டாமலே இதுவரையிலான நஷீத் எதிர்ப்பு அரசியலை செய்து வருகின்றனர். அதே சமயம், குற்றவியல் தலைமை நீதிபதி அப்துல்லாவை சட்டத்திற்குப் புறம்பாக கைது செய்ததாகக் கூறி தற்போதைய அரசு நஷீத் தலைமைக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளது. அதில் அவர் தண்டனை அடையும் பட்சத்தில் நஷீதால் தண்டனைக் காலம் முடிந்து மூன்று ஆண்டுகள் வரை தேர்தலில் போட்டியிட முடியாது. அத்தகைய சூழ்நிலை உருவானால், அரசு நஷீதுக்கு கருணை வழங்கும் என்று தெரிவித்துள்ளது. என்றாலும் அவரால் தேர்தலில் போட்டியிட முடியுமா என்பதும் கேள்விக்குறியாக உள்ளது.

கடந்த பெப்ரவரி மாத நிகழ்வுகளையும் அதற்கு முன்பான நிலைமைகளையும் சரியாக கணித்துச் செயல்பட்டமைக்கு, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய அண்டை நாடுகளும் அமெரிக்கா, சீனா போன்ற வல்லரசு நாடுகளும் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்ளலாம். விசாரணைக் கமிஷன் அறிக்கை இதனைத் தான் குறிக்கிறது. அதிலும் குறிப்பாக, தலைமை மாற்றத்தை உடனடியாகவே சரியாகக் கணித்துச் செயல்பட்ட இந்தியா, அதனை அடுத்து தொடர்ந்த இலங்கை போன்ற நாடுகள் தங்களது முடிவுகள் சரியாக அமைந்து விட்டதற்கு பெருமிதம் கொள்ளலாம். அது போன்றே, கடந்த மாத அரசியல் சிக்கல்களுக்கும் மாலை தீவை எதிர்நோக்கும் பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகளையும் எதிர்கொள்ள இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மத்தாய் முன் வைத்த கருத்துகளை அந்நாட்டின் அரசியல் கட்சி தலைமைகள் முன்னெடுத்துச் செல்லலாம். அந்த விதத்தில், விசாரணை கமிஷன் அறிக்கையும், அது விசாரித்த பிரச்சினைகளும் மாலை தீவின் எதிர்கால ஸ்திரத் தன்மையை உறுதி செய்ய வழிவகுக்கும் என்று நம்பலாம். ●

சமகாலம் சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்களும் இடம்பெற அழையுங்கள்




7767702
7767703
7322736

7767704
2327827




# இலங்கை சுற்றுலாப் பயணிகள் மீதான தாக்குதல்

தமிழக விவகாரம்

சென்னையிலிருந்து
முத்தையா காசிநாதன்



தமிழகத்தில் கால்பந்து விளையாடுவதற்கு வந்த இலங்கை விளையாட்டு வீரர்களைத் தமிழகஅரசேதிருப்பி அனுப்பியது. சென்னையில் உள்ளநேருஸ்ரேடியத்தில்அவர்களைவிளையாட அனுமதித்ததற்காக அரசு அதிகாரியையும் தற்காலிகப் பணி நீக்கம் செய்தது. அரசின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து வேளாங்கண்ணி, பூண்டி மாதா கோயில்களுக்கு வந்த சிங்கள சுற்றுலாப் பயணிகள் மீது ஆங்காங்கே தாக்குதல் நடைபெற்றது. இந்த சுற்றுலாப் பயணிகளில் இலங்கைத் தமிழர்களும் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அரசே நடவடிக்கை எடுத்ததால் வந்த விளைவு தமிழகத்தில் உள்ள நாம் தமிழர் அமைப்பு, பெரியார் திராவிடக் கழகம் போன்ற அமைப்புகள் எல்லாம் சுற்றுலாப் பயணிகள் மீதான தாக்குதலைத் தொடுத்தது. இதை முதலில் கண்டித்தது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன்.

ராமகிருஷ்ணனைத் தொடர்ந்து தி.மு.க. தலைவர் கருணாநிதியும் கண்டனம் செய்தார். குறிப்பாக அவரது அறிக்கையில், "இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழகத்தில் உள்ள தமிழர்களுக்கும் உள்ள உறவு என்பது தொப்புள்க் கொடி உறவு போன்றது. நீண்ட காலமாக இருந்து வரும் உறவு. இதில் திடீரென்று விளையாட்டு வீரர்களைத் திருப்பி அனுப்புவதும், தமிழ்நாட்டிற்கு வரும் இலங்கையைச்சேர்ந்த சுற்றுலாப் பயணிகளைத் தாக்குவதும் இரண்டு நாடுகளுக்கும் (இலங்கை, இந்தியா) உள்ள உறவுகளைக் கெடுக்கக்கூடிய ஒன்றாகும். ஏனென்றால் இலங்கையில் இன்னும் லட்சக்கணக்கான தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது அங்குள்ள சூழ்நிலையில் வாழ்வதற்கே சிரமப்படுகின்றனர். அவர்களை மேலும் கொடிய துன்பங்களுக்கு ஆட்படுத்துகின்ற நிலையை இங்கே உள்ள நாம் ஏற்படுத்தி விடக்கூடாது" என்றார். அதை விட முக்கியமாக, "தமிழர்கள் எந்தத் தேசிய இனத்திற்கும் எதிரானவர்கள் அல்ல" என்பதை தனது அறிக்கையில் வலியுறுத்திக் கூறி, "தமிழக மக்கள் எந்தவகையிலான எதிர்மறை உணர்ச்சிகளுக்கும், தூண்டுதல்களுக்கும் இடம் கொடுத்து விடாமல், அமைதி காக்குமாறும், அர

வணைப்போடு நடந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்'' என்று வேண்டு கோள் விடுத்தார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் போட்டி போட்டுக் கொண்டு ஆதரவுக் கருத்து களைச் சொல்லி வருகின்றன. மீனவர் மீதான தாக்குதல் நடக்கும் பிரச்சினை என்றாலும், இலங்கையில் தமிழர்களின் வாழ்வுரிமைப் பிரச்சினை என்றாலும் இந்திய அரசு எந்த உதவியும் செய்வ தில்லை என்பது போல் இரு கட்சித் தலைவர்களுமே காரசாரமாகப் பேசி வருகிறார்கள். இதனால் ஏற்கனவே இலங்கைத் தமிழர் பிரச்சினையை மையமாக வைத்து அரசியல் செய்து வந்த நெடுமாறன், வைகோ, திருமாவள வன், சீமான் போன்றோர் எல்லாம் திக்குத் தெரியாமல் திணறி நிற்கிறார்கள். குறிப் பாக தி.மு.க. நடத்திய டெசோ மாநாட் டிற்குப் பிறகு இலங்கைத் தமிழர் நலனை முன்னிறுத்திப் போராடுவதில் முக்கிய மான கட்சி தி.மு.க.வா? அல்லது அ.தி.மு.க.வா? என்ற போட்டியே கிளம்பி யிருக்கிறது. இதன் ஒரு அங்கமாகத்தான் இலங்கைவந்தவிளையாட்டுவீரர்களைத் கடுமையாக இலங்கைத் தமிழர்களுக் காகப் போராடுகிறோம்'' என்பதை நிலை நாட்டும் முயற்சிதான் இலங்கை வீரர் களைத் திருப்பி அனுப்பியதில் எதிரொ லித்தது. அதைச் சாதகமாக்கிக் கொண்ட சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி போன்ற அமைப்புகள் சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதலைத் தொடு த்தது. தமிழக காவல்த்துறை சரியான நேரத்தில் நடவடிக்கை எடுத்ததால் மோச மானபாதிப்புகள்தவிர்க்கப்பட்டனஎன்றே சொல்ல வேண்டும். அது மட்டுமன்றி காவல்த்துறைத் தலைவர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு இலங்கை சுற்றுலாப் பயணிகளுக்கு எந்தவிதமான ஆபத்தும் வரக்கூடாது என்பதில் தமிழக அரசும், முதல்வர் ஜெயலலிதாவும் கறா ராக இருந்தார்கள் என்பதையும் மறுப்ப தற்கில்லை. சுற்றுலாப் பயணிகளுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபட்ட இயக்கங்க ளின் தலைவர்கள் காவல்த்துறையால் மறைமுகமாக எச்சரிக்கப்பட்டார்கள். ''இனியொருமுறைஇப்படிச்சம்பவங்கள் நடந்தால் சிறைதான்'' என்றே அந்த எச் சரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு உரிய தாக்கம் இருந்தது. சென்னை உள்ளிட்ட மற்ற இடங்களில் உள்ள இலங்கை சுற் நிதி விடுத்த அறிக்கைக்கு தமிழகத்தில் பெரும் வரவேற்புக் கிடைத்தது. குறிப்பாக நடுநிலையாளர்கள் அதைப் பாராட்டத் தவறவில்லை. அது மட்டுமன்றி அடுத்த நாட்டு விளையாட்டு வீரர்களைத் திருப்பி அனுப்பும் முடிவை ஒரு மாநில அரசே முன்னின்று எடுக்கக்கூடாது என்ற எண்ணம் ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள் மற்றும் அரசியல் பார்வையாளர்கள் மன தில் ஏற்பட்டது. ''பப்ளிக் ஒபீனியன்'' அர சின் முடிவிற்கும், இலங்கை சுற்றுலாப் பயணிகள் மீதான தாக்குதலுக்கும் எதி ராக இருந்த நிலையில், கடந்த 13ஆம் தேதியன்று திருச்சி அருகில் உள்ள திரு வரங்கம் சென்ற முதல்வர் ஜெயலலிதா அங்குள்ள ரங்கநாதர் ஆலயத்தில் அன்னதான திட்டத்தைத் துவக்கி வைத்தார். அதன் பிறகு நடைபெற்ற அரசு விழாவில் பேசிய தமிழக முதல்வர், ''இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் இன்னும் கிடைக்கவில்லை என்பதால், அதற்கு நம் தமிழகத்தின் எதிர்ப்பை, உணர்வுகளை தெரிவிக்கும் வகையில் இலங்கையைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு தமிழகத்தில் பயிற்சி அளிப் பதைத் தடை செய்தேன். இவை கார ணமாக தமிழக மக்கள் மட்டுமல்லாமல்,

# தமிழக அரசியல்வாதிகள் என்ன சொல்கிறார்கள்?

திருப்பி அனுப்பும் முடிவை ஆளும் அ.தி.மு.க. தலைமையிலான தமிழக அரசு எடுத்தது. தி.மு.க.விற்கு டெசோ மாநாடு மூலம் கிடைத்த விளம்பரத்தை முறியடித்து, ''நாங்கள் உங்களை விடக் றுலாப் பயணிகள் யாரும் தாக்குதலுக்கு உள்ளாகாமல் காப்பாற்றப்பட்டனர்.

ஆனாலும் ''இலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளைத் தாக்கக் கூடாது'' என்று தி.மு.க. தலைவர் கருணா



உலக வாழ் தமிழர்களும் எனது அரசின் நடவடிக்கைகளைப் பாராட்டி வருகின் றனர்'' என்றவர், ''எனினும் இலங்கை யிலிருந்து சுற்றுலா, ஆன்மீகப் பயணம் போன்றவற்றிற்காக தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சிங்களவர்களுக்கு எந்த விதமான இடையூறும் ஏற்படக்கூடாது என்பதில் எனது அரசு உறுதியாக இருக் கிறது'' என்று தெளிவுபடுத்தியிருக்கிறார். தி.மு.க. தலைவர் கருணாநிதி, மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் ஆகியோர் ஏற்கனவே கண்டன அறிக்கை வெளியிட்டதும் அர சின் மனமாற்றத்திற்குக் காரணம் என்றால் மிகையாகாது.

இந்நிலையில் இலங்கை சுற்றுலாப் பயணிகள் மீது நடைபெற்ற தாக்குதல் குறித்து, தமிழகத்தின் பல்வேறு கட்சித் தலைவர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துகளைக் கேட் டோம். இதோ அவர்களது கருத்துக்கள்.

**ராம்சுப்பு**
திருநெல்வேலி பாராளுமன்ற உறுப்பினர்
இந்திய தேசிய காங்கிரஸ்.



இலங்கைத் தமிழர் நல்வாழ்விற்காக இந்தியத் தேசிய காங்கிரஸ் எப்போதும் போராடி வருகிறது. ஆக்கபூர்வமான பணிகளைச் செய்து வருகிறது. இலங்கைத் தமிழர் நல்வாழ்வை முன்னிறுத்தி காங்கிரஸ் கட்சி ஆளும் மத்திய (இந்திய) அரசு எடுத்த நடவடிக்கைகள் ஏராளம். ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவர் செய்த ஒவ்வொரு காரியமும் தமிழர்களின் நல்வாழ்வை மனதில் வைத்துச் செய்யப்பட்டவை. அதையும் விடுதலைப் புலிகள் எதிர்த்தார்கள். அதனால் இப்போது இலங்கையில் அவர்கள் அந்நாட்டு அதிபரால் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு, அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவதற்கு ஆயிரம் கோடி ரூபாவை இந்திய அரசு இலங்கை அரசிடம் கொடுத்திருக்கிறது. இந்நிலையில் பிற நாட்டுக்காரர்கள் நம் நாட்டுக்கு வருவது சகஜம். விளையாட்டு வீரர்கள் நம் நாட்டில் வந்து கிரிக்கெட் விளையாடுவதைப் பார்த்திருக்கிறோம். ஆகவே இங்கு வந்த இலங்கைக் கால்பந்து விளையாட்டு வீரர்களைத் தடுப்பது, இலங்கையிலிருந்து தமிழகத்தில் உள்ள கோவில் குளம் போன்றவற்றிற்கு பிரார்த்தனைக்காக வரும் இலங்கை சுற்றுலாப் பயணிகள், ஆன்மீகவாதிகள் போன்றவர்களைத் தடுப்பது தேவையில்லாத வேலை என்றே நான் கருதுகிறேன். அதுதான் எங்கள் கட்சியின் கருத்தும். இலங்கை வேறு நாடு. நாம் வேறு நாடு என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். டெல்லியில் ஒரு முறை இலங்கைத் தமிழ் எம்.பி.க்கள் என்னைச் சந்தித்தார்கள். அவர்களே கூட, "நீங்கள் தமிழ்நாட்டில் செய்யும் பிரச்சினைகள் எங்களுக்கு இலங்கையில் நெருக்கடியைக் கொடுத்து விடக்கூடாது. எங்களுக்கு பாதிப்பு வந்து விடக்கூடாது" என்று என்னிடமே கூறியிருக்கிறார்கள்.

நமக்கு அண்டை நாடாக இருக்கும் இலங்கையுடன் நல்லுறவு தேவை. அங்குள்ளவர்கள் இங்கும் இங்குள்ளவர்கள் அங்கும் வந்து போவது நடைமுறையில் சாதாரணமாக நடைபெறும் விடயம். இந்நிலையில் நாம் இங்கே செய்யும் செயல், அந்நாட்டிற்கு விமானம் மூலமோ, கப்பல் மூலமோ போகும் இந்தியப் பயணிகளுக்கு பிரச்சினையாகவும் மாறிவிடக்கூடாது. ஆகவே சுற்றுலாப் பயணிகளைத் தடுப்பது, தாக்குவது என்று பகையை வளர்ப்பது, இருநாடுகளுக்கு இடையே நல்லுறவு ஏற்பட பயன்தராது. அந்நாட்டு பிள்ளைகள் இங்கு வந்து விளையாடுவதால் என்ன ஆகிவிடப் போகிறது. அதைத் தடுப்பது முற்றிலும் ஏற்க முடியாத விடயம். இலங்கை இராணுவத்திற்கு மிலிட்டரி பயிற்சி இந்தியாவில் கொடுக்கவேண்டாம் என்று சொல்லுங்கள். ஒப்புக் கொள்ளலாம். அதில் கூட பாகிஸ்தானில் உள்ள இராணுவத்தினர் கூட இந்தியாவில் பயிற்சி பெறுகிறார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஆகவே அண்டை நாடுகளை நாம் சண்டை நாடுகளாகப் பார்க்கக்கூடாது. குறிப்பாக இலங்கையிலிருந்து தமிழகம் வந்தவர்கள் நமது விருந்தினர்கள். அவர்களைத் தாக்குவது மாபெரும் கலாசாரத் தவறு.

**சி.பி.ராதாகிருஷ்ணன்**
தேசிய செயற்குழு உறுப்பினர்
பாரதீய ஜனதா கட்சி



சிங்களவர்களாக இருந்தாலும் சரி, தமிழர்களாக இருந்தாலும் சரி தவறு யார் செய்தாலும் கண்டிக்கப்பட வேண்டும். சிங்கள அரசு செய்த தவறுக்கு அப்பாவிச் சிங்களவர்களைத் துன்புறுத்தக்கூடாது, அது தவறு. இலங்கை அரசை எதிர்ப்பது வேறு. நிராயுதபாணிகளாக தமிழகம் வந்த சிங்களவர்களை எதிர்ப்பது என்பது வேறு. அப்படிச்செய்வது கோழைத்தனம். தமிழர்கள் ஒரு போதும் எந்தவொரு தேசிய இனத்திற்கும் எதிரிகள் அல்ல. பௌத்த மதமும், இந்து மதமும் வெவ்வேறானது அல்ல. இரண்டும் ஒரே கலாசார பிரதிபலிப்புகளைக் கொண்ட மதங்கள்தான். பௌத்த மதத்தைப் போதிக்கும் இலங்கையில் இன பாகுபாட்டைக் காட்டி தமிழர்களை இரண்டாந்தர குடிமக்களாக நடத்துவது சிங்கள அரசுகள் காலம் காலமாக செய்து வரும் கொடுமை. இதற்கு மாற்று தமிழ்க் கலாசாரத்தைத் துறந்து, தமிழ்நாட்டிற்கு விருந்தினர்களாக வந்த அப்பாவிச் சிங்களவர்களை விரட்டியடிப்பதல்ல. சிங்கள இனவாதத்திற்கு மாற்று இன்னொரு இனவாதம் அல்ல. தமிழனின் உயர்ந்த பண்பு எல்லோரையும் போற்றுவதுதான். வீரத்தோடு எதிர்த்து நிற்பதுதான். அப்பாவிகளைத் தாக்குவதல்ல. இதுவே காலம் காலமாக இருந்து வரும் தமிழ் மரபு. அந்த மரபு தமிழ் மண்ணில் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழகம் வரும் இலங்கை சுற்றுலாப் பயணிகள் தாக்கப்படக்கூடாது.

**ஜி.ராமகிருஷ்ணன்**
தமிழ் மாநிலச் செயலாளர்
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி



இலங்கைத் தமிழர் பிரச்சினையில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் யுத்தம் நடைபெற்றது. அதன் பிறகு மூன்று வருடங்கள் ஆகியும் அங்குள்ள தமிழர்களுக்கு இன்னும் சம அந்தஸ்து, வடக்கு-கிழக்கு இணைப்பு, மாநில சுயாட்சி, தமிழர்கள் பகுதியிலிருந்து இலங்கை இராணுவம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை போன்ற பலவற்றையும்

நிறைவேற்றிக்கொடுக்க இன்றுவரை இலங்கை அரசு முன்வரவில்லை. இந்திய அரசும் அதற்கான முயற்சிகளை மேற் கொள்ளவில்லை. இது போன்ற சந்தர்ப் பத்தில் இலங்கையிலிருந்து வரும் விளையாட்டு வீரர்களைத் திருப்பி அனுப்புவது சரியான அணுகுமுறை அல்ல. அதே போல் சுற்றுலாப் பயணி களைத் தாக்குவதும் அங்குள்ள இலங் கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வழி வகுக்காது. இருநாட்டு மக்களுக்கு இடையே உள்ள உறவு பேணிக் காக்கப்பட வேண்டும். அது எந்த விதத்திலும் சீர்குலைந்து விடக்கூடாது. விளையாட்டு வீரர்களைத் திருப்பி அனு ப்புவது, அங்கிருந்து வரும் பயணிகளைத் தாக்குவது எல்லாம் இரு நாட்டு உறவு களைப் பாதிக்கும். பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் எவ்வளவோ பிரச்சி னைகள் இருக்கின்றன. ஆனால் இரு நாட்டு கிரிக்கெட் டீம்களும் பரஸ்பரம் போய் விளையாடி விட்டுத்தான் வருகி றார்கள். இலங்கை கிரிக்கெட் அணியும் இங்கே வந்து விளையாடுகிறது. இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் போய் விளையாடுகிறது. எங்கள் கட்சியைப் பொறுத்தமட்டில் மனித உறவுகள் பாது காக்கப்படவேண்டும். அந்த உறவுகளுக்கு எக்காரணத்தைக் கொண்டும் குந்தகம் விளைவிக்கும் வகையில் இலங்கை விளையாட்டு வீரர்களைத் திருப்பி அனுப்புவது, பயணிகளைத் தாக்குவது போன்ற சம்பவங்களில் தமிழகத்தில் உள்ளவர்கள் ஈடுபடக்கூடாது.

**ஜவஹிருல்லா**


சட்டமன்ற உறுப்பினர், மனித நேய மக்கள் கட்சி
ராமநாதபுரம் தொகுதி.



இலங்கைத் தமிழர்களை கொடுமைப் படுத்தியது, அவர்களுக்கு எதிராக இலங்கை அதிபர் போர்க்குற்றம் புரிந்தது எல்லாம் தமிழக மக்கள் மனதில் கோப மாக இருந்தது. இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமை பாதிக்கப்பட்டது, குறிப்பாக என் தொகுதியில் உள்ள தமிழக மீன வர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப் படுவது எல்லாமும் கோபத்தை ஏற்படுத்தியது. மீனவர்கள் கடல் கடந்து மீன் பிடிப்பது ஒன்றும் புதிதல்ல. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையிலேயே கூட இது மாதிரி மீனவர்கள் மீது தாக்குதல் நடப்பது கிடையாது. ஆனால் தமிழக மீனவர்கள் தாக்கப் படுவதை இலங்கை அரசு தலையிட்டு நிறுத்தவில்லை. இதனால் தமிழக மக்க ளுக்கு கோபதாபம் இருந்தது. அதன் வெளிப்பாடு என்று இதை எடுத்துக் கொண்டாலும், இலங்கை சுற்றுலாப் பயணிகளைத் தாக்குவது சரியான நடவடிக்கை இல்லை. மற்றப்படி விளை யாட்டு வீரர்களை அனுப்பியது "அடை யாள பூர்வமாக" அனுப்பியது என்று தமிழக முதல்வர் சொல்லியிருக்கிறார்.



## பனுவல் பார்வை







பெ.முத்துலிங்கம்

# பிரபாகரன் கதை

முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னர், ஈழவிடுதலைப் போரின் வளர்ச்சி, வீழ்ச்சி மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் அணுகுமுறை, இலங்கை அரசியல் தலைவர்களின் அணுகுமுறை தொடர்பான வரலாற்றுத் தகவல்கள் அடங்கிய ஒருசில நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள நூல்கள் பெரும்பாலும் கடந்த முப்பது வருடகால யுத்தத்தின்போது, ஊடகத் துறையில் பணியாற்றியவர்களினாலே பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளன.இவ்வாறு எழுதப்பட்டுள்ள நூல்களில் “The Prabhakaran Saga” என்ற நூல் பக்கச் சார்பற்ற வரலாற்றுப் பின்புலத்தை உள்ளடக்கிய நூலாக வெளிவந்துள்ளது. கடந்த முப்பது வருட ஈழப் போராட்ட வரலாற்றில், 1989 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் முதல் ஈழப்போராட்ட நிகழ்வுச் செய்திகளை வெளியிட்ட ஊடகவியலாளர் என். முராரி என்பவராலேயே மேற்குறிப்பிட்ட நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் கடந்த மாதம் இந்திய சேஜ் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. “டெக்கான் ஹெரால்ட்” பத்திரிகையின் இணை ஆசிரியராக கடமையாற்றி 2009இல் ஓய்வுபெற்ற திரு.முராரி அவர்கள் 1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் முதல் இலங்கையின் விடுதலைப் போராட்ட நிகழ்வுகளை வெளிக்கொணரும் செய்தியாளராகச் செயற்பட்டுள்ளார். இறுதிப்போராட்டமானமுள்ளிவாய்க்கால் வரை நடந்த சம்பவங்களையும், இவ்விடைப்பட்ட காலகட்டங்களின் போது இலங்கையின் ஆட்சிப் பீடத்திலிருந்த ஆட்சியாளர்களின் நிலைப்பாடுகள் எவ்வாறானதாக இருந்தன, சமாதானக் கலந்துரையாடலின் போது மத்தியஸ்தராகக் கடமையாற்றிய நாடுகளின் இந்நிலைப்பாடுகள் எவ்வாறானதாக இருந்தன மற்றும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு எவ்வாறானதாக இருந்தது என்பது பற்றி தமது நூலில் எடுத்துரைத்துள்ளார். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைமை உறுப்பினர்களுடன் இவர் ஏற்படுத்திக் கொண்டிருந்த உறவுகள் மற்றும் இந்திய, இலங்கை அரசியல் கொள்கை வகுப்போர்களிடம் ஏற்படுத்திக் கொண்ட உறவுகள், உள்ளக ரீதியாக இத் தலைவர்கள் எவ்வாறான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தனர் என்பதை



முராரி

வெளிக்கொணர ஏதுவாக அமைந்துள்ளமையை இந்நூல் மூலம் அடையாளம் காணமுடிகிறது.

தோற்றுப் போன ஒப்பந்தம், ஈழப்போர் இரண்டு, சந்திரிக்கா யுகம், நீண்ட மற்றும் கடினமானயுத்தநிறுத்தம், கடைசிப்பக்கம் எனும் நான்கு அத்தியாயங்களின் கீழ் பல சிறு தலைப்புகளில் ஒவ்வொரு முக்கிய நிகழ்வுகளைப்பற்றி திரு.முராரி எழுதியுள்ளார். தோற்றுப் போன ஒப்பந்தம் என்ற அத்தியாயத்தின் கீழ் ராஜீவ், ஜே.ஆரினால் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் எவ்வாறு சம்பந்தப்பட்ட பிரிவினர்களான தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஈழ விடுதலை இயக்கங்களுடன் கலந்துரையாடாது அவர்கள்மீது எவ்வாறு தீர்வுத் திட்டம் திணிக்கப்பட்டது என்பதையும், அதேவேளை இலங்கை ஆட்சியாளர்களது நிலைப்பாட்டினை அறியாது எவ்வாறு தீர்வுத் திட்டம் திணிக்கப்பட்டது என்பது பற்றித் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். ஒட்டு மொத்தத்தில் சம்பந்தப்பட்ட தமிழ் மற்றும் சிங்களத் தலைமைகளின் பால் அனுபவமுதிர்ச்சியற்ற இந்தியக் கொள்கை வகுப்போரினால் பலவந்தமாக திணிக்கப்பட்ட ஒப்பந்தம் என இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஒப்பந்தத்தை விருப்பின்றி நிர்ப்பந்தத்தின் காரணமாகவே செய்தார்

என்பதை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின் அவரால் முன்வைக்கப்பட்ட செய்திகளை தொட்டுக்காட்டுவதன் மூலம் எடுத்துக் கூறியுள்ளார். மறுபுறம் விடுதலைப்புலி களின்தலைவர்வே.பிரபாகரன்ஒப்பந்தத் தினை எவ்வாறு நிர்ப்பந்தம் காரணமாக போலியாக ஏற்றுக்கொண்டார் என்பதை யும் அதேவேளை ஒப்பந்தத்தினை முறிப் பதற்கான சூழலை எவ்வாறு உருவாக்கி னார் என்பதை நடைபெற்ற நிகழ்வுகளை எடுத்துக் கூறுவதன் மூலம் விளக்கப் படுத்தியுள்ளார். மேலும் இந்தியாவின் வியட்நாமாக இலங்கை எவ்வாறு மாற் றப்பட்டது என்பதையும், இந்திய இரா ணுவத்தினருக்கு எதிரான யுத்தத்தில் பிரேமதாச தலைமையிலான அரசாங் கத்தினை விடுதலைப்புலிகள் எவ்வாறு வென்றெடுத்து இந்திய இராணுவத்தி னரை இலங்கையிலிருந்து வெளி யேற்றுவதில் வெற்றி கொண்டனர் என் பதனை ஆதாரத்துடன் வெளிக்கொணர்ந் துள்ளார்.

ஒப்பந்தத்தினை முறியடிக்க மேற் கொண்ட உபாயத்தின்போது திருமணம் முடித்து இரு மாதங்களே ஆன விடு தலைப்புலிகளின் மூத்த இராணுவத் தள பதியான குமரப்பா மற்றும் புலேந்திரன் என்ற இருவரையும்துணைத்தளபதியான மாத்தையா ஊடாக கொன்றமை (சய ணைட் வழங்கியதன்) மூலம் பிரபாகரன் எவ்வாறு வெற்றி கண்டார் என்பதையும், மறுபுறம் இந்திய இராணுவத்தின்பால் வடகிழக்கு வாழ் தமிழ் மக்கள் வெறுப்புக் கொள்ளும் வகையில், திலீபனை உண்ணாவிரதம் மேற்கொள்ளச் செய்து அவரையும் பலிகொடுத்தார் என்பதனை தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்.

இரண்டாம் அத்தியாயமான இரண்டாம் ஈழ யுத்தம் எனும் தலைப்பின் கீழ் இந்திய இராணுவத்துடன் போரிட்டு இந்திய இரா ணுவத்தை நாட்டைவிட்டு அகற்றுவதில் வெற்றி கொண்ட பிரபாகரன் பின்னர் இலங்கை ஜனாதிபதி பிரேமதாசவுடன் மேற்கொண்டிருந்த 13மாத தேனிலவை முறித்துக் கொள்வதற்காக எவ்வாறான உபாயத்தை அதாவது சரணடைந்த 600 தமிழ் பொலிஸ் காவலர்களை படு கொலை செய்வதன் மூலம் வெற்றிகரமா கக் கையாண்டார் என்பதையும் வெளிக் கொணர்ந்துள்ளார். இத்தகவல்களை வெளிக்கொணர்கையால், பிரபாகரன் தமது இலக்கினை அடைவதற்கு தயக்க மின்றிமேற்கொண்டபடுகொலைகளைப் பற்றி விளக்கியுள்ளதுடன், எதிர்காலத்தில் எதிரியாக மாறலாம் என நினைக்கும் நபர்களை முன்கூட்டியே கொலை செய் யும் பிரபாகரனின் மனோநிலையைப் பற்றியும் இந்நூலில் வெளிப்படுத்தியுள் ளார். மேலும் இவ்வத்தியாயத்தின் கீழ் பத்மநாபா படுகொலை பற்றி குறிப்பிடு கையில் அக்காலகட்டத்தில் தமிழக முத லமைச்சராக இருந்த கலைஞர் கருணா நிதி விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டுக் கொண்டு, பொதுவில் ஏனைய இயக்கங்களுக்கு எதிரான வரல்ல என்பதை போலித்தனமாகக் கா ட்டிக் கொண்டு விடுதலைப்புலிகளுக்கு தமிழகத்தில் செயற்பட எவ்வாறு அனுமதி யளித்தார் என்பது பற்றியும் குறிப்பிட்டுள் ளார். கலைஞரிடம் மேற்கொண்ட செவ்வி களின் போது அளித்த பதில்களை தொட்டுக்காட்டுவதன்மூலம் இவற்றினை வெளிப்படுத்தியுள்ளார். இந்திய அமைதி காக்கும் படை இலங்கையை விட்டு வெளியேறிய வேளை ஈ.பி.ஆர்.எல்.எப்.



தலைவர்களின் 800 பேரடங்கிய குடும்ப அங்கத்தவர்களை ஏற்றிச்சென்ற கப்பல் சென்னை துறைமுகத்தை அடைந்த வேளை, விடுதலைப் புலிகளுக்கு ஆதர வாகச்செயற்படும் வகையில், அக்கப்பலி லிருந்தவர்களை தமிழகத்தில் இறங்க விடாது வடக்கிற்கு திருப்பியனுப்பியதைச் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் பத்மநாபா கொலைச் சம்பவத்திற்கு முன்னதாக திரு.முரார்ரி கலைஞர் கருணாநிதியுடன் மேற்கொண்ட செவ்வியொன்றின் போது எல்.ரி.ரி.ஈ யினர் எவரும் தமிழ் நாட்டில் இல்லையென்று கூறியதையும், பின்னர் பத்மநாபா கொலையின் பின்னர் அதே கேள்வியை மீண்டும் அவரிடம் கேட்ட போது "நான் தமிழ் நாட்டில் முகாம்கள் இல்லையெனக் கூறினேனே ஒழிய அவர்களது நடமாட்டம் இல்லையெனக் கூறவில்லையே" எனக் கூறியதைச் சுட்டிக்காட்டி கலைஞர் கடைப்பிடித்த இரட்டை நிலைப்பாட்டினை வெளிக் கொணர்ந்துள்ளார்.

சந்திரிக்கா யுகம் என்ற தலைப்பின் கீழ் சந்திரிக்கா காலத்தில் சமாதானத்திற்காக நிலவிய சூழலையும், சந்திரிக்காவினால் முன்மொழியப்பட்ட அதிகாரப்பரவல் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை விட கூடிய அதிகாரத்தினைக் கொண்டதாக இருந் தமை மற்றும் அது எவ்வாறு விடுதலைப் புலிகளினால் நிராகரிக்கப்பட்டது என் பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் சந்திரிக்காமீதுமேற்கொண்டபடுகொலை முயற்சியும் படுகொலை முயற்சியிலி ருந்து மீண்ட சந்திரிக்கா பிரபாகரன் நோயின் அறிகுறியே, நோயல்ல. ஆகை யால் விடுதலைப்புலிகளை அழித்தொழி த்தாலும், தமிழர் பிரச்சினை இருக்கும் என்று கூறியதை தமது முன்னுரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து நீண்ட மற்றும் கடின மான யுத்தநிறுத்தம் என்ற அத்தியாயத் தில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் நோர்வே யின் அனுசரணையுடன் மேற் கொள்ளப் பட்ட சமாதான உடன்படிக்கை பற்றியும் அதேவேளை சமாதான உடன்படிக்கை முடிவுறும் வகையில் விடுதலைப்புலி களினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அலகிற்கான அதிகாரங்கள் மற் றும் இலங்கை அரசாங்கத்தின் விடாப்பிடி யான நிலைப்பாடுகள் என்பன பற்றிய தகவல்களையும் வெளிக்கொணர்ந்துள் ளார்.

இறுதியாக இறுதிக்கட்டம் எனும் அத்தி யாயத்தில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதி பதியாக பதவியேற்றபின் தொடரப்பட்ட சமாதான கலந்துரையாடல்கள் பற்றியும் விடுதலைப் புலிகளின் மூல உபாயங் களைப்பற்றியும், இந்தியா உட்பட சர்வ தேச நாடுகள் விடுதலைப் புலிகள் தொடர் பாக கடைப்பிடித்த நிலைப்பாடு பற்றியும் வெளிக்கொணர்ந்துள்ளார். இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எவ்வாறு தோன்றியுள்ள சர்வதேச மாற்றத்தினை தனக்குச்சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். மறுபுறம் 9/11 சம்பவத்தின் பின்னர் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் விடுதலைப் புலிகள் தொடர்பாக எவ்வாறான கொள்கையினைப் பின் பற்றத் தயாராகியுள்ளன என்பதை விடு தலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் புரிந்துகொள்ளாமை பற் றிய கருத்தினையும் வெளிக்கொணர்ந் துள்ளார். இவற்றுடன் யுத்தத்தின் இறுதி

நாட்களில் விடுதலைப் புலிகள் சரண டைய முன்வந்தமை வரையிலான தக வல்களை இந்நூலில் உள்ளடக்கியுள் ளார்.

திரு.முராரி அவர்கள் பக்கச்சார்பற்ற வகையில் உண்மைத்தகவல்களை முன் வைத்துள்ளதுடன், ஈழப் போரின் போது சமாதான முயற்சியினை மேற்கொண்ட தரப்பினரான, இலங்கை அரசாங்கம் மற் றும் விடுதலைப் புலிகள் ஏலவே தத்தமது நிகழ்ச்சி நிரலினைத் தீர்மானித்து வைத் துக் கொண்டு போலியாக கலந்துரை யாடலில் ஈடுபட்டுள்ளமையை தமது கருத்தாக முன்வைத்துள்ளார். விடு தலைப் புலிகள் சமஷ்டி, இடைக்கால நிர் வாகம் போன்ற கோரிக்கைகளை சமா தானக் கலந்துரையாடலில் முன்வைத் தாலும் அவையனைத்தும் தரமுடியாத வகையிலான தனிநாட்டிற்கான கோரிக் கையை வலுப்படுத்துவதாக இருந்தன என்பதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

மறுபுறம் ஆட்சிபீடமேறிய இலங்கை அரசாங்கங்கள் எவ்வித அதிகாரப்பகிர் வினையும் கொடுக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே ஆரம்ப முதல் சமா தானக் கலந்துரையாடலில் கலந்து கொண்டன என்பதைத் துல்லியமாக எடுத்துக்காட்டியுள்ளார். அதிலும் குறிப் பாக தற்போதைய ஜனாதிபதி பொலிஸ், காணி மற்றும் வட-கிழக்கு இணைப்பு விடயத்தில் எவ்வித விட்டுக் கொடுப்பு களுக்கும் தயாரில்லை என்ற நிலைப் பாட்டில் தொடர்ந்து இருந்து வந்துள்ள மையைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல உண்மைத்தகவல்களை வெளிக் கொணர்ந்துள்ள திரு.முராரி தமது தனிப்பட்ட கருத்தினை முன்னுரையில் வெளிப்படுத்தியுள்ளார். உலகில் பலம் பொருந்திய கெரில்லா இயக்கமாகவும், நிரந்தரப் படையணியைக் கொண்ட மற் றும் குறிப்பிட்டளவு விடுதலைப் பிரதேச த்தையும் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பு, முற்றாக இல்லா தொழிக்கப்படுவதற்கு அதன் தலைவர் வே.பிரபாகரனே காரணம் என்பதனை ஆதாரபூர்வமாக முன்வைத்துள்ளார். மக்களுக்காக ஆயுதம் ஏந்திய பிரபாகரன் மக்கள் தலைவனாக இருப்பதனைக் கைவிட்டு சர்வாதிகாரியாக மாறியதுடன், விரும்பாத மக்களை தம்முடன் இணை த்துக் கொண்டு ஈழத்திற்கான சித்திர வதைப்பயணத்தை மேற்கொண்டு தமது இறுதி நிலையை அடைந்தார் எனக் கூறியுள்ளார். மேலும் எதிர் க்கருத்தின ருக்கு விட்டுக்கொடுக்காத பிரபாகரனின் நிலைப்பாடே விடுதலைப்புலிகள் அழிவு நிலையை அடைவதற்கான காரணம் எனக்கூறியுள்ளார்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் மீளெழுச்சி பற்றி தமது கருத்தினை பின் வருமாறு பதிவு செய்துள்ளார். பிரபாகர னின்றி விடுதலைப்புலிகளை நினை த்துப் பார்க்க முடியாது எனக்கூறியுள்ள இவர், விடுதலைப் புலிகளின் இயக்கம் பிரபாகரனின் குழந்தை எனவும் அக் குழந்தையை வேறு எவராலும் வழிநடத்த முடியாத வகையிலேயே பிரபாகரன் தமது வாழ்நாள் முழுவதும் பேணி வளர்த்து வந்துள்ளார் எனக்குறிப்பிட் டுள்ளார். ஈழத்தில் இனி ஒரு போராட்டத் தலைமை உருவாக பலகாலம் எடுக்கலாம் எனக் கூறும் முராரி அவ்வாறு தோன்றும் தலைமை விடுதலைப் புலிகளின் தலை மையைப் போல் இறுக்கமானதாகவோ அல்லது தமது நிலைப்பாட்டிலிருந்து பிறழாத தலைமையாகவோ இருக்காது என எதிர்வு கூறியுள்ளார்.


இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாட்டினைப் பற்றி எதிர்வு கூறுகையில் அவரது செயற்பாடா னது வெற்றியாளனின் தெரிவு (Victor's Choice)ச்செயற்பாடு எனக் குறிப்பிட்டுள் ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின்கீழ்தமிழர்களின்பூர்வீகப் பிரதேசம் என்பது, எட்டாக்கனி என்பதை ராஜபக்ஷ ஆற்றிய உரைகளைத் தொட் டுக்காட்டுவதன் மூலம் எடுத்துக் கூறியுள் ளார். யுத்த வெற்றியின் பின்னர் ஆற்றிய உரையில் நாட்டில் இனிமேல் இனரீதி யான பகுதி காணப்படமாட்டாது எனக்கூறி யதை இதற்கான ஆதாரமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

சுருங்கக்கூறின் முராரியின் பக்கச்சார் பற்ற இந்நூலினை இன்றைய தமிழ்த் தலைமைகளும், இளம்தமிழ்த்தலைமை யினரும் வாசிப்பது அவசியமாகும். அவ் வாறு வாசிப்பதனூடாக எதிர்கால மூல உபாயங்களை அடையாளம் காணுவ தற்கான அடித்தளத்தை இட்டுக்கொள் ளலாம். ●




மனித இரக்கம்
என்று
சொல்கிறோமே...
இதுவென்ன
மிருக இரக்கமா?
இதற்கொரு
கவிதை
நீங்கள்
எழுதினால்
என்ன?

samakalam@expressnewspapers.lk




# அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு கிடைத்த 9/11 எனப்படும் வரம்

சர்வதேச அரசியல்



பேராசிரியர்
சி.சிவசேகரம்

உலக வர்த்தக மையத்தின் மீது நடந்த விமானத் தாக்குதல் பற்றிய பல உண்மைகள் இன்னமும் அமெரிக்க மக்களுக்குக் கூறப்படவில்லை. இவ்வளவு நுட்பமாக ஒரு தாக்குதலை நடத்துவதற்கான திட்டமிடலும் அதை உலகின் தலைசிறந்த உளவு நிறுவனங்கள் உள்ள அமெரிக்காவில் செய்து முடிப்பதும் அமெரிக்காவினுள் எவருடையதும் உதவியில்லாமல் நடந்திருக்க இயலுமா? அது ஒரு புறமிருக்க, அத்தாக்குதல் இஸ்லாமிய தீவிரவாதிகள் எவரும் இலக்கு வைக்க விரும்பக்கூடிய யூதப் பெருவணிகர்கள் கட்டிடத்தினுள் நுழைவதற்கு முன்னரே ஏன் நடந்தது? அத்தாக்குதலில் இறந்தோர் சுத்திகரிப்புத் தொழிலாளர் போன்ற ஏழைகளாகவே இருந்தனர். தீயணைப்புப் படையினரும் அதில் இறந்தனர். இக்கேள்விகளின் மூலம் இது இஸ்லாமிய அடிப்படைவாதிகளோ தீவிரவாதிகளோ சம்பந்தப்படாத விடயம் என்று நான் யாரையும் எண்ணத் தூண்டவில்லை. ஆனால் இஸ்லாமிய அடிப்படைவாதிகளும் தீவிரவாதிகளும்



கட்டாயமாக அமெரிக்க நிறுவனத்தின் பகைவர்களாக இருக்க அவசியமில்லை என்பதையும் அவர்கள் மூலம் அமெரிக்க அரசின் சதி நிறுவனம் ஒன்று அமெரிக்க முதலாளி வர்க்கத்தில் எவருக்கும் உடல் சேதம் இல்லாமல் ஒரு பயங்கர படு கொலையை நடத்தியிருக்க இயலாதா என்பது நாம் புறக்கணிக்கக்கூடிய வினா வல்ல.

இஸ்லாமிய தீவிரவாதத்தினதும் முஸ் லிம் அடிப்படை வாதத்தினதும் தாயக மாகவும் ஆதரவுத் தளமாகவும் இருந்து வருவது சவூதி அரேபியா. சவூதியின் ஆளும் குடும்பங்கள் இஸ்லாத்தின் பெய ரால் ஆட்சி நடத்தினாலும் அவர்கள் வாழும் வாழ்க்கை இஸ்லாமிய வழியி லானதல்ல என்பதில் இரகசியம் இல்லை. அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகள் சவூதியினதும் பிற அரபு நாடுகளதும் எண்ணெய் வளத்தை வற்றச் சுரண்டிப் பெரும் பணம் சம்பாதிக்கின்றன. சவூதி ஆட்சியாளர்கள் அக்கொள்ளையில் பங்காளிகளாக உள்ளனர். அவர்கள் இஸ்லாத்தைப் பரப்புகின்ற பெயரில் இன்று வஹாபி, சலாஃபி போன்ற தீவிரக் கொள்கையுடைய குழுக்களை முஸ் லிம்கள் வாழும் இடமெல்லாம் அனுப்பி இஸ்லாமிய உலகைப் பிளவுபடுத்துகிறார் கள். ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் மட்டு மன்றி அல்ஹைடா எனும் பயங்கரவாத அமைப்பின் உருவாக்கத்திலும் சவூதி ஆட்சியாளர்களது பங்கு பெரியது. இங் கெல்லாம் இஸ்லாமிய விரோத அரசி யலை முன்னெடுக்கும் அமெரிக்காவும் சவூதி ஆட்சியாளர்களும் ஒரே கோஷ்டி யாக செயல்பட்டுள்ளனர். இன்றும் பல ஆபிரிக்க நாடுகளில் அரசியல் உறுதி யின்மையை ஏற்படுத்தப்பயன்படும் சக்திகளாக அல்ஹைடா உட்பட்ட இஸ் லாமிய அடிப்படைவாதிகள் உள்ளனர். அமெரிக்காவின் தேவைகளையே அவர் கள் நிறைவேற்றுகின்றனர். லிபியா விலும் இன்று சிரியாவிலும் இயங்கும் இஸ்லாமிய தீவிரவாதிகளின் ஆதரவுத் தளம் சவூதி அரேபியா. அவர்களுடன் அமெரிக்காவுக்குப் பகையில்லை. 9/11 என்பதில் வெறும் பயங்கரவாதிகள் மட்டு மல்லாது அரசுகள் சிலவும் சம்பந்தப் பட்டிருக்கலாம் என்பதற்கு வேறு சான்று களும் உள்ளன. எனினும் எதையும் நிறுவுவதோ நிரூபிப்பதோ எளிதல்ல. எதையும் நிரூபிப்பது என்நோக்கமும் அல்ல. ஏனெனில் அதற்கான தேவை இங்கு இல்லை. அதற்கான ஆற்றலும் எனக்கில்லை. எனினும் கைக்கெட்டக் கூடிய தகவல்களின் அடிப்படையில் அமெரிக்க அரசும் ஊடக நிறுவனங்களும் நமக்கு வடிகட்டி வழங்குகிற செய்திக ளுக்கும் அப்பால் நம்பார்வை போக வேண்டியுள்ளது. அதுபோகக்கூடிய திசை களைச் சுட்டிக்காட்டுவது தேவையானது. உண்மைகளைச் செய்தித் தாள்களும் வானலைகளும் கட்டிப் போடுகிற போது, சங்கடமான கூரிய கேள்விகளால் மட் டுமே கயிறுகளையும் காகிதப் போர்வை களையும் அறுத்து உண்மைகளை நமக்குக் காட்ட இயலும்.

எது எவ்வாறாயினும், 9/11 என்பது அமெரிக்க பொருளாதாரத்திற்குக் குறிப் பிடத்தக்க தீங்கு எதையும் செய்துள்ளதா என்று கேட்டால், இல்லையென்றே பொருளாதார நிபுணர்கள் பலரும் கூறுவர்.

9/11 தாக்குதல் அமெரிக்காவின் பாதுகாப்பை இடைஞ்சலானதாக்கியுள் ளது என்று கூற இயலுமா என்றால், அதற்கும் விடை இல்லை என்றே அமையும்.

9/11 இன் பயனாக அமெரிக்க உலகின் ஆயுதப் பெரு வல்லரசு என்ற தகுதிக்கு எவ்விதமான கேடும் நேர்ந் துள்ளதா என்றால், அதற்கும் இல்லை என்ற மறுமொழியே கிடைக்கும்.

ஆனால், 9/11 மூலம் அமெரிக் காவால் ஒரு புதிய உலக ஆதிக்க வேலைத் திட்டத்தைத் தொடக்கி வைக்க முடிந் துள்ளது. அத்துடன், அதன் பின்னணி யில், திருப்பித் தாக்கும் வலிமையற்ற எந்த நாட்டின் மீதும் எவ்வித நியாய மு(மி)ன்றி போர் தொடுக்க அதற்கு இயலு கிறது என்பதையும் நாம் அறிவோம்.

எனவே 9/11 என்பது அமெரிக்க-சோவியத் ஒன்றியம் கெடுபிடிப்போர் (பனிப்போர் எனப்படுவது) முடிந்த பின்பு அமெரிக்காவின் போர் முனைப்பை நியாயப்படுத்துவதற்கான ஒரு வலிய கருவியாகி உள்ளது. அதன்மூலம் அமெ ரிக்காவால் "பயங்கரவாதத்திற்கெதிரான போர்" என்ற நடவடிக்கையைத் தொடக்கி வைத்து அதில் தனது கூட்டாளிகளாகச் சில நாடுகளைப் புதிதாகச் சேர்த்துக் கொண்டுமுள்ளது.

9/11 எப்படி நிகழ்ந்திருந்தாலும் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் சவூதி அரே பியாவுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தன என்பதில் ஐயமில்லை. எனி னும் முதலில் தண்டிக்கப்பட்டது ஆப் கானிஸ்தான். அங்கு சோவியத் ஆதரவு டன் நிறுவப்பட்ட ஒரு ஆட்சியைக் கவிழ் க்க அமெரிக்காவும் சவூதி அரேபியாவும் ஊட்டி வளர்த்த தலிபான்கள் இப்போது அமெரிக்காவின் எதிரிகளாகி விட்டனர். ஆப்கானிஸ்தானுக்கும் 9/11க்கும் என்ன தொடர்பு என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால் அங்கே அமெரிக்கத் தலைமையிலான ஒரு போர் தொடுக்கப்பட்டது.

ஈராக் மீது போர் தொடுப்பதற்குச் சொல்லப்பட்ட ஒரு காரணமும் உண்மை யானது அல்ல. எனினும் ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் உள்ளதாகக்

கூறப்பட்டு அங்கு ஒரு போர் தொடங் கப்பட்டது. அதை நியாயப்படுத்த, சதாம் ஹுஸைன் ஆட்சிக்கும் அல்-ஹைதாவுக்கும் தொடர்புகள் கற்பிக்கப்பட்டன. ஆனால், சதாமின் ஆட்சி சில ஆண்டுகள் முன்பு இன ஒழிப்பு நடவடிக்கைகளைக் குர்தியர்கட்கு எதிராகவும் தென்ஈராக்கின் ஷியா முஸ்லிம்கட்கு எதிராகவும் மேற்கொண்ட போது, அதை அமெரிக்காவும் ஐரோப்பாவும் மௌனமாக அங்கீகரித்தனர். உண்மையில், இஸ்லாமிய தீவிரவாதம் மிகவும் வெறுத்த ஆட்சியாளர்களுள் சதாம்ஹுஸைன் முக்கியமானவர்.


அமெரிக்காவின் பயங்கரவாத ஒழிப்பு நாடகம், திட்டமிட்டும் திட்டமிடாமலும் வேறு நாடுகளிலும் அமெரிக்கத்தாக்குதல்களும் ஆக்கிரமிப்பும் நிகழக் காரணமாயின. சூடானில் ஒரு மருந்துப் பொருள் உற்பத்திச் சாலை மீது நடாத்தப்பட்ட விமானத் தாக்குதலும் தென் சூடானில் பிரிவினைவாத ஊக்குவிப்பும் அங்கும் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை மனதில் வைத்தே மேற்கொள்ளப்பட்டன.

இன்று பாகிஸ்தான் மிகவும் அரசியல் உறுதியற்ற நிலையில் உள்ளதென்றால், அதற்குஆப்கானிஸ்தானில்நடந்துவரும் போரில் அமெரிக்கா பாகிஸ்தானை பயன்படுத்தியமை முக்கியமான காரணமாகும்.


அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்பு நாடகத்தில் சில நாடுகளினதும் சில அமைப்புகளதும் பயங்கரவாதம் கண்ணில் படாது போய்விடும். அங்கெல்லாம் பயங்கரவாதத்திற்கு எதிரான அரசநடவடிக்கை மனித உரிமை மீறல் என்று கண்டிக்கப்படும். வேறு சில இடங்களில், பயங்கரவாதிகளை வேட்டையாடுகிற பேரில் அடக்குமுறை ஆட்சியாளர்களுக்கு எதிரான விடுதலை இயக்கங்களும் குறிவைக்கப்படும். எனினும் பயங்கரவாதத்திற்கு எதிரானபோர்என்றபெயரில் அமெரிக்கா இதுவரை செய்து வந்ததெல்லாம் தான் விரும்பாத ஆட்சிகளைக் கவிழ்ப்பதும் தனக்குப் பயனற்றுப் போன அல்லது முற்றாகக் கீழ்ப்படியாது பயங்கரவாத அமைப்புகளைக் கைகழுவி விடுவதுமே.

சர்வதேச அரங்கில் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்பது இப்போது செல்லாக் காசாகி விட்டது. அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கெதிரான போரின் நோக்கம் இப்போது தெளிவாகி விட்டது. எனினும், "இப் புனித யுத்தத்தின்" இன்னொரு பக்கம் அதிகம்

# திரைப்பட எதிர்ப்பு; அமெரிக்கா விதைத்த வினைகளின் அறுவடை



லிபியாவின் பெங்காசி நகரில் அமெரிக்க உதவி தூதரகம் மீதான தாக்குதலின்போது...



அ.மார்க்ஸ்

உலகெங்கிலுமுள்ள முஸ்லிம் மக்கள் அமெரிக்கத் திரைப்படம் ஒன்றை எதிர்த்துக் கிளர்ந்துள்ளனர். முஸ்லிம்கள் தம் உயிரினும் மேலாக மதிக்கும் இறைதூதர் நபிகள் நாயகத்தை இழிவு செய்யும் முஸ்லிம்களின் அப்பாவித்தனம் (The Innocence of Muslims) என்கிற அந்தத் திரைப்படத்தைத் தயாரித்தவர் அமெரிக்கக் குடியுரிமை கொண்ட ஒரு இஸ்ரேலிய யூதர். பெயர் சாம் பாசில். ஃப்ளோரிடாவைச் சேர்ந்த கிறிஸ்தவ அடிப்படைவாதியும் முஸ்லிம் வெறுப்பாளருமான கிறிஸ்டியன் டெர்ரி ஜோன்ஸ் என்பவர் இத்திரைப்படத்தைப் பரப்பி வருகிறார்.

படத்தைத் தயாரித்த சாம் பாசிலின் உண்மைப் பெயர் நகவ்லா பேசிலி. நகவ்லா எனவும் அவர் யூதரல்ல எகிப்திய காப்டிக் கிறிஸ்தவர் என்றும் இன்னொரு கருத்து உள்ளது. இவர் கலிபோர்னியாவை மையமாகக் கொண்ட ஒரு ரியல் எஸ்டேட்காரர் எனவும் நிதி மோசடிக்காகத் தண்டிக்கப்பட்டவர் எனவும் ஒரு தகவல் உள்ளது. பாசில் வேறு, நகவ்லா வேறு என்றும் சிலர் சொல்கின்றனர். ஆக படத்தின் பின்னணி மர்மமாக உள்ளது. ஒன்று நிச்சயம். முஸ்லிம் வெறுப்பைத் தூண்டும் அடிப்படைவாதிகள் இப்படத்தை எடுத்துள்ளனர். 500மில்லியன் டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட இப் படத்திற்கு முஸ்லிம் வெறுப்பைக் கக்கு மராயிரம் அமெரிக்க யூதர்கள் இதற்கு நிதி உதவி செய்துள்ளனர். படத்தில் நடித்துள்ள நடிகர்கள் இது இப்படியான படம் எனச் சொல்லப்படாமலேயே தாம் இதில் நடிக்க வைக்கப்பட்டோம் என்கின்றனர்.

ஒரு நல்ல திரைப்படத்துக்குரிய எந்த அம்சமும் இல்லாத இந்த மூன்றாந்தர மான திரைப்படம் இப்போது இணை

யத்தளங்களில் கிடைக்கிறது. ஒரு மாபெரும் மதத்தை இழிவு செய்து, முஸ்லிம்கள் மத்தியில் ஆத்திரத்தைத் தூண்டும் நோக்குடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் படத்திற்கும் அமெரிக்க அரசிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என ஹிலாரி கிளின்டன் அறிவித்துள்ள போதிலும் படத்தைத் தயாரித்த சாம் பாசில் எந்த வருத்தத்தையும் தெரிவிக்கத் தயாராக இல்லை. இறைதூதர் நபிகள் நாயகத்தை ஒரு ஏமாற்றுப் பேர்வழி எனவும் இஸ்லாம் ஒரு புற்றுநோய் எனவும், இஸ்லாம் மதத்தின் அபத்தங்களைத் தோலுரிக்கவே இந்தப் படத்தைத் தாம் தயாரித்துள்ளதாகவும் அவர் பேட்டியளித்துள்ள செய்திகள் பத்திரிகைகளில் வந்துள்ளன.

அவர் மேலும் கூறியுள்ளவற்றையும் படத்தில் இறைதூதர் முகம்மதும் இஸ்லாமும் சித்திரிக்கப்பட்டுள்ள விதங்களையும் இங்கே பதிவு செய்வது முஸ்லிம் மக்களின் மனதைப் புண்படுத்தும் என்பதால் தவிர்க்கிறேன்.

எதிர்பார்த்ததைப் போலவே மிகப் பெரிய எதிர்வினைகளை இப்படம் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. லிபிய நகரமான பெங்காசியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன் நிகழ்ந்த ஆர்ப்பாட்டம் தாக்குதலாக மாறி அமெரிக்கத் தூதர் கிறிஸ்டபர் ஸ்டீவன்ஸும் இதர மூன்று அமெரிக்க அதிகாரிகளும் கொல்லப்பட்டுள்ளனர். எகிப்து, ஏமன், டுனீசியா, பாகிஸ்தான், வங்கதேசம் என முஸ்லிம் உலகெங்கிலும் அமெரிக்கத் தூதரகங்கள் முன் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. கார்ட்டுமில் நடைபெற்ற பொலிஸ் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலும் காஷ்மீர் உள்ளிட்ட பல இடங்களில் அமெரிக்கத் தூதரகங்கள் முன் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. சென்னையில் (செப்.14) தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்கக் கொடிகள் எரிக்கப்பட்டதோடு, கல்வீச்சில் கண்காணிப்புத் தொலைக்காட்சி ஒன்றும் மின் விளக்குகளும், கண்ணாடிகளும் சேதமடைந்துள்ளன. இதை ஒட்டி முஸ்லிம் இளைஞர்கள் பலர் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர். 7000 பேர் வரை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வோம் என முன்னதாகவே அறிவித்திருந்தும் காவல் துறை போதிய காவலர்களை அங்கு நிறுத்தாததோடு, ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைது செய்து அகற்றுவதற்குப் போதிய வாகனங்கள் கொண்டு வரப்படாததும்தான் நடந்த வன்முறைகளுக்குக் காரணம் என ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை ஏற்ற தமிமுன் அன்சாரி தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமெரிக்கா அந்தந்த நாட்டு அரசுகளை வற்புறுத்தியுள்ளது. லிபியாவை நோக்கி அமெரிக்கப் போர்க்கப்பல்கள் இரண்டு வந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. லிபியாவில் செப்டம்பர் 11 ஐ ஒட்டி அமெரிக்கத் தூதரகம் தாக்கப்பட்டிருப்பதால், இது ஜிகாதிகள் நடத்திய பயங்கரவாதத் தாக்குதல் என்பதாக ஒரு கருத்தையும் அமெரிக்கா உருவாக்கி வருகிறது.

லிபியாவில் நடந்துள்ளது பயங்கரவாதத் தாக்குதலா, இல்லையா என்பது ஒருபுறமிருக்க, இன்று உலகெங்கிலும் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த எதிர்ப்பை வெறுமனே இந்தத் திரைப் படத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்பாகக் கருத பேசப்படுவதில்லை. அமெரிக்கக் குடிகளை மிரட்டி பணியவைக்கவும் அமெரிக்க அரசு வெளிநாடுகளில் மட்டுமன்றி உள்நாட்டிலும் மேற்கொள்ளுகின்ற அடக்குமுறைகளை நியாயப்படுத்தவும் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுக்கவும் இப்போர் மிகவும் பயன் பட்டுள்ளது.

அதன் இன்னொரு விளைவுதான், முக்கியமாக அமெரிக்காவிலும் கணிசமான அளவிற்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் வளர்ந்துள்ள இஸ்லாமிய விரோதமாகும். முஸ்லிம் என்றாலே பயங்கரவாதி என்று நினைக்கும் அளவுக்கு ஆட்சியாளர்களும் ஊடகங்களும் பீதியைக் கிளப்பி விட்டுள்ளன. எனவே, "பயங்கரவாதத்திற்கெதிரான போர் எனப்படுவது, முஸ்லிம்களுக்கு எதிரான போராகவும்" அடையாளம் பெற்றது.

இந்த நிலையிலேயே "அரபு வசந்தம்" மலர்ந்தது. அது துனீஷியாவிலும் எகிப்திலும் சர்வாதிகார ஆட்சிகளை மாற்ற உதவியது. ஆனால் வேறெங்கும் அமெரிக்கச் சார்புச் சர்வாதிகார ஆட்சிகளே மாற்றாமற் தடுப்பதில் மேற்குலகு மிக எச்சரிக்கையாய் இருந்தது. பெரும்பாலானமக்கள்கிளர்ந்தெழுந்தபாஃரெய்னில் சவூதி அரசாங்க இராணுவக் குறுக்கீட்டால் அரபு வசந்தம் கடும் குளிர்காலமாக்கப்பட்டது. எகிப்திலே ஏற்பட்ட மாற்றம் தனது தர்க்க ரீதியான அந்தத்தை எட்டுவதற்கு முன்னரே, அங்கு இராணுவ ஆட்சிக்கும் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்புக்குமிடையே சமரசம் காணப்பட்டு அமெரிக்க இஸ்ரேலிய நலன்கள் பேணப்பட்டன. துனீஷியாவில் ஏற்பட்ட மாற்றம் எதிர்பார்த்த ஜனநாயகப் பலாபலன்களைத் தரவியலாமல் தடுமாறுகிறது. ஆனால் ஒரு சிறுபான்மைக் குழுவினர் மூலம் செயற்கையாக ஒரு உள்நாட்டுப் போரை மூட்டி நேரடியான இராணுவக் குறுக்கீட்டின் மூலம் லிபியாவில் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தப்பட்டது. இப்போது அதேவிதமான முயற்சி சிரியாவில் நடக்கிறது.

எனவே, அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கெதிரான போர் என்பது, முக்கியமாக மத்திய கிழக்கிலும் இஸ்லாமிய உலகிலும் வலுவிழந்துகொண்டு போன அமெரிக்க மேலாதிக்கத்தை மீள நிலைநிறுத்தும் ஒரு முயற்சியே. அத்துடன்சேர்த்துப் பிற நாடுகளில் அமெரிக்கச் சார்புச் சர்வாதிகாரிகளின் ஆட்சிகட்கு எதிரான மக்கள் கிளர்ச்சிகளை தாக்கவும் அது பயன்பட்டது.



லிபியாவில் கொல்லப் பட்ட அமெரிக்க தூதுவர் கிரிஸ் ஸ்டீவன்ஸ்

9/11க்குப் பின்பான அமெரிக்க, அமெரிக்கச் சார்பு மேற்குலக நடத்தையின் பிரதான சமூகப் போக்குகளாக வெளிப்பட்டுள்ள 2 விடயங்களில் ஒன்று அமெரிக்க, ஐரோப்பிய வெள்ளை நிறவாத அரசியற் சிந்தனையின் எழுச்சியாகும். மற்றது கடுமையான இஸ்லாமியப் பகைமை.

இரண்டுமே ஃபாசிசத் தன்மையுடையவை. எனவே ஜனநாயக மறுப்பும் அவற்றுடன் சேர்ந்து வளர்ந்துள்ளது.

ஐரோப்பாவில் நவ ஃபாசிசம் கணிசமான வலிமையுடன் உள்ளது. நிறவாதமும் அந்நிய குரோதமும் இன்றைய பொருளாதார நெருக்கடியால் வலுப்பெற்றுள்ளன. இச்சூழலில் கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் இஸ்லாமிய எதிர்ப்பு மிகக் கேவலமான முறைகளில் வெளிப்பட்டுள்ளது. சில ஆண்டுகட்கு முன்பு டென்மார்க்கில் நபிகள் நாயகத்தையும் இஸ்லாத்தையும் இழிவு செய்து கேலிச்சித்திரங்கள் வெளியிடப்பட்டன. அவை பற்றி உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அண்மையில் அதேவிதமான நோக்கத்துடன் வெளிவந்த ஒரு அமெரிக்க குறுந்திரைப்படம் அமெரிக்கா தனது நட்புநாடுகளாகக் கருதும் அரபு நாடுகள் பலவற்றிலும் பிற முஸ்லிம் நாடுகளிலும் கடும் அமெரிக்க எதிர்ப்பலையைத் தூண்டியுள்ளது. ஒரு அமெரிக்க ராஜதந்திரி லிபியாவிற் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த எதிர்ப்பலை வெறுமனே ஒரு குறுந்திரைப்படத்திற்குரிய ஆட்சேபனையல்ல. முஸ்லிம்களிடையே முக்கியமாக அரபு முஸ்லிம்களிடையே அமெரிக்காவுக்கு எதிராகக் கனன்றுகொண்டிருக்கும் மனக்கொதிப்பின் வெளிப்பாடே அது.


இஸ்லாமிய உலகைப்பிரித்துப் பகைமைக்குட்படுத்துகிற அமெரிக்க – சவூதிச் சூழ்ச்சியும் இங்கு கூற முக்கியமானது. தெளிவாகவே இஸ்லாத்திற்கும் முஸ்லிம்கட்கும் எதிரான ஒரு வேலைத்திட்டத்தை அமெரிக்காவும் மேற்குலகும் முன்னெடுக்கின்றன. எனினும் மத்திய கிழக்கில் இன்று இஸ்ரேலுக்கு அடுத்த படியாக அமெரிக்காவின் நெருங்கிய நண்பனாக உள்ள சவூதி அரேபியாவே இஸ்லாமிய தீவிரவாதச் சிந்தனைகளின் பிரதான ஆதரவுத் தளமாகவுள்ளது. இந்த முரண்பாட்டை விளங்கிக் கொள்ளும் போது தீவிர அடையாள அரசியலை முன்னெடுப்போர் எவ்வாறு அவர்களுடைய பிரதான எதிரியாகக் கூறப்படுவோருடன் நட்பு பூண்டோ மறைமுகமாக உதவியோ சகவாழ்வு வாழ முடிகிறது என்பதையும் முடியாது. இந்த எதிர்ப்பிற்குப் பின்னணியாக இரண்டு அம்சங்கள் உள்ளன. இறைதூதர் முகம்மதையும் இஸ்லாம் மதத்தையும் மேற்குலகு இன்று நேற்றல்ல, கடந்த பல நூறாண்டுகளாகவே தொடர்ந்து இழிவு செய்து வருகிறது.

13ஆம் நூற்றாண்டில் ஃப்ரான்ஸை ஆண்டவரும் முஸ்லிம்கள்மீது சிலுவைப் போரைத் தொடங்கியவருமான பதினாலாம் லூயி பின்னர் கிறிஸ்தவ மதத்தால் பின்னர் புனிதராக அறிவிக்கப்பட்டார். இறுதி நாட்களில் எதிர் கிறிஸ்து ஒருவர் தோன்றி ஆட்சி செய்வார் எனக் கிறிஸ்தவர்களின் புதிய ஏற்பாட்டில் உள்ள வாசகத்தைச் சுட்டிக்காட்டி அந்த எதிர் கிறிஸ்து முகம்மது நபிகள்தான் என மேலைச் சமூக அறிவுஜீவிகள் தொடர்ந்து கூறி வந்தனர். நபிகள் நாயகத்திற்கு புனித குரான் இறை அருளால் இறக்கப்பட்டது என்கிற முஸ்லிம்களின் அடிப்படை நம்பிக்கையும் கேலி செய்யப்பட்டது. அப்படிச் சொல்லி நபிகள் மக்களை ஏமாற்றி வந்தார் எனவும், இறை வசனம் இறங்கியபோது நபிகள் அடைந்த பரவசமும் வேதனைகளும் வெறும் காக்காய் வலிப்பே எனவும் நூல்கள் எழுதப்பட்டன. நபிகள் வாழ்ந்த வரலாற்றுச் சூழலைக் கணக்கில் கொள்ளாமல் அவரது பலதார மணங்களும் சிறுமி ஆயிஷாவை அவர் திருமணம் செய்ய நேர்ந்ததும் இழித்துரைக்கப்பட்டன.

நபிகளைப் பொய்யராகச் சித்திரித்து எழுதப்பட்ட மான்டி குரூசின் டிஸ்புடேஷியா எனும் நூலை சீர்திருத்தக் கிறிஸ்தவத்தைத் தோற்றுவித்த மார்டின் லூதர் மொழிபெயர்த்து ஒரு முன்னுரையும் எழுதினார். மகாகவி தாந்தே தனது புகழ்பெற்ற தி டிவைன் காமெடி எனும் நூலில் நபிகளை நரகத்தின் ஏழாவது குழியில் உழல்வதாக எழுதினார். ரோம சாம்ராஜ்யத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் எனும் முக்கிய நூலை எழுதிய கிப்பன், கொள்ளைகளின் மூலம் அழகிய பெண்களையும் நிறைய சொத்துக்களையும் அடையலாம் என ஆசையூட்டி இஸ்லாத்தை வளர்த்தார் என நபிகள் பற்றி எழுதினார்.

இப்படி மேலைச் சமூகம் இஸ்லாத்தை இழிவு செய்து வந்ததற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும். முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் நபிகள் நாயகம் ஒரு அழகிய முன்மாதிரி. எதை ஏற்றுக் கொண்டாலும் அவரை இழிவு செய்வதை அவர்களால் தாங்க முடியாது. மேலைச் சமூகம் தொடர்ந்து செய்து வந்த இழிவுகளினால் முஸ்லிம்கள் மனம் புண்பட்டுக் கிடந்த பின்னணியைமறந்துவிட்டுசல்மான்ருஷ்டியின் சாத்தானின் பாடல்கள் நூலுக்கு ஏற்பட்ட எதிர்ப்பை (1989) நாம் புரிந்து கொள்ள முடியாது. நபிகளை இழிவு செய்த அந்நூலுக்கு ஆயத்துல்லா கோமேனி விதித்த ஃபத்வாவை நாம் ஏற்றுக் கொள்ள இயலாது என்பது உண்மைதான். ஆனாலும் ஒன்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கோமேனியின் இந்த ஃபட்வாவை 44 முஸ்லிம் நாடுகளும் எதிர்த்தன. 2005இல் டென்மார்க் நாட்டு இதழ் ஒன்றில் நபிகளின் கேலிச் சித்திரம் வெளியிடப்பட்டபோது ஏற்பட்ட எதிர்ப்பும் இத்தகையதே.

முஸ்லிம்கள் எல்லோரும் ஜிகாதிகள், சகிப்புத்தன்மை அற்றவர்கள். அதனால்தான் ஒரு திரைப்படத்தைக்கூட அவர்களால் சகித்துக்கொள்ள இயலவில்லை என்கிற ஒரு கருத்தைக் கட்டமைப்பதும் கூட இத்தகைய திரைப்பட வெளியீடுகளின் நோக்கமாக உள்ளது. ஆனால் இப்படியான எதிர்ப்புகளை ஏதோ முஸ்லிம்கள் மட்டுமே மேற்கொள்கின்றனர்



என்பதல்ல. டான் பிரவுனின் டாவின்சி கோட் திரைப்படத்திற்கும், தி லாஸ்ட் டெம்ப்டேஷன் ஆஃப் கிறைஸ்ட் படத்திற்கும் கிறிஸ்தவ சமூகம் காட்டிய எதிர்ப்பை நாம் மறந்து விட முடியாது. டாவின்சி கோட் திரைப்படத்தைத் தமிழக அரசு தடை செய்தது. இந்துத்துவ அமைப்புகள் இது போல நடத்திய போராட்டங்களை நாம் அறிவோம். ஓவியக் கண்காட்சிகள், இசை நிகழ்ச்சிகள், ஏன் வாட்டர் போன்ற படத்தின் படப்பிடிப்புகளையும் கூட அவர்கள் எதிர்த்துள்ளனர். மிகச் சமீபத்தில் டாம் 999 திரைப்படத்திற்குத் தமிழகத்தில் ஏற்பட்ட எதிர்ப்பையும் அறிவோம்.

எனினும் இன்று இந்தத் திரைப்படத்தின் மீதான கோபம், அந்தப் படத்தோடு நின்று விடாமல் அமெரிக்காவின் மீது திரும்பியுள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் முஸ்லிம் நாடுகளின் மீது அமெரிக்கா தொடுத்து வரும் அநீதியான ஆக்கிரமிப்புகள், போர்கள், நாட்டெல்லைகளைத் தாண்டி மேற்கொள்ளப்படும் ட்ரோன் தாக்குதல்கள் ஆகியன அதன் மீது உலக முஸ்லிம்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. லிபியாவின் கேர்னல் கடாஃபியும் ஈராக்கின் சதாம் உசேனும் நேட்டோ மற்றும் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளால் கொல்லப்பட்ட முறைகள் அவர்கள் மனதில் ஆறாத ரணத்தை ஏற்படுத்தியுள்ளன, ஆட்சி மாற்றம் (regime change) என்கிற பெயர்களில் அவர்கள் முஸ்லிம் நாடுகளுக்குள் அத்து மீறிப் புகுந்து அரசுகளைக் கவிழ்ப்பதும், ஷியா- சுன்னி சகோதரப் போர்களை உருவாக்குவதும் நிலையற்ற ஆட்சிகளுக்குக் காரணமாவதும் எப்போதையையும் விட முஸ்லிம்கள் மத்தியில் அமெரிக்க எதிர்ப்பை அதிகரித்துள்ளது.

லிபியா, ஆஃப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் அமெரிக்க ஆக்கிரமிப்பு ஏற்படுத்திய குழப்பங்களின் விளைவாக இன்று அங்கெல்லாம் ஆயுதம் தாங்கிய தீவிரவாத அமைப்புகள் சுதந்திரமாக நடமாடுகின்றன. பெங்காசியில் கொல்லப்பட்ட அமெரிக்கத் தூதர் கிறிஸ்டபர் ஸ்டீவன்ஸ் கடாஃபிக்கு எதிரானவர்களின் துணையோடு அங்கு அமெரிக்க இருப்பை உறுதி செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பின் லேடனின் முக்கிய உதவியாளரான லிபியின் கொலைக்குப் பழிவாங்க வேண்டுமென அல் குவேதா அமைப்பு லிபியர்களுக்கு அழைப்பு விடுத்திருந்ததும் நினைவிற்குரியது.

அமெரிக்கா தான் விதைத்த வினைகளை இப்போது அறுவடை செய்யத்துவங்கியிருக்கிறது.

விளங்கிக்கொள்ளலாம்.

இன்னொரு விதமாகச் சொன்னால் "தேசம் ஞானங், கல்வி ஈசன்பூசை எல்லாம் காசுக்குப் பின்னாலே குதம்பாய் காசுக்குப் பின்னாலே" என்பதை நாம் தேசியம், மதம் என்பனவெல்லாம் முதலாளிய நலன்கட்கு முன்னால் நில்லாது என விளங்கிக் கொள்ளலாம்.

எனினும் உலகம் மாறுகிறது. ஐரோப்பியக் கொலனியம் போனது போல அமெரிக்க நவ கொலனியமும் போகும் நாள் தொலைவில் இல்லை. அந்த நாள் வேறொரு சுரண்டல் மையத்தின் ஆதிக்கத்திற்கு வழி வகுக்காமல் கவனிப்பது தான் முற்போக்குச் சக்திகளின் பொறுப்பாகும்.



...ஸ்தா... அமெ...
எதி...ப்பு ஆ...ட்டம்

# சுட்ட சாம்பலின் சுடர்மிக எழுவோம்



உயிர்கள் கொன்று பிணங்கள் தின்று
மனங்கள் வெந்த சாம்பல் மேடு
மரணம் கண்டு மரணம் வென்று
சனங்கள் வாழும் சாம்பற் காடு
சாம்பல் மேட்டின் சாம்பற் காடு - இது
சாம்பற் காட்டின் சாம்பல் மேடு

ஆண்டாண்டு காலமாய்
ஆண்டு ஆண்டு வந்த
சாம்பற் காடும் - அதன் சாம்பல் மேடும்

காலம் கடந்தாலும்
கலிமுற்றிப் போனாலும்
கழித்தொதுக்கி விட்டாலும்
கனவுகள் போகாது - எங்கள்
காலம் வரும் ஒரு நாள்
என்றாவது ஒரு நாள் - அன்று
கேள்விகள் பல கூடவே வரும் -
அப்போது
சுடர்மிக எழுவோம்
சுட்ட சாம்பலின் நின்று
வரலாற்றைக் கொன்று
வரலாற்றைத் தின்று
வரலாற்றில் நின்று
பதில்களை வேண்டியபடி
கேள்விகளோடு

அந்தக் கேள்விகளின் வெம்மை
உங்களை எரிக்கும்
உங்களைத் தொல்லைப்படுத்தும்
உங்களை அலைக்கழிக்கும் -
இறுதியில்
அது உங்களையே கொல்லும்

வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப்
புரட்டி
இரத்தமும் சதையும் அலறலும் ஓலமும்
நிறைந்ததாய் எங்கள் வரலாறு
எழுதப்படுகையில்
நீங்கள் என்ன செய்தீர்கள்?

முட்கம்பி வேலிகளுக்குப் பின்னாலும்
பெருமரங்களின் நிழல்களிலும்
வெட்டவெளிக் கூடாரங்களிலும்
நித்திய வாழ்வுக்கான போராட்டத்தில்
- எங்கள்

மிக எளிமையான
மக்கள் ஈடுபட்டிருக்கையில்
நீங்கள் என்ன செய்தீர்கள்?

எல்லாவற்றையும் இழந்து - ஏதிலியான
மக்கள்
ஒரு வேளை உணவுக்காக வரிசையில்
நிற்கையில்
உணவுக்கான வரிசை நெரிசலில்
அகப்பட்டுச் சாகையில்
குடிநீருக்காக தங்கள் பிஞ்சுக்
குழந்தைகளைத் தொலைக்கையில்
நீங்கள் என்ன செய்தீர்கள்?

தந்தைமாரும் பிள்ளைகளும்
கடத்தப்படுகையில்
கணவர்மாரும்
குழந்தைகளும் காணாமற் போகையில்
கண்டவரும்
நின்றவரும் கைதுசெய்யப்படுகையில்
நீங்கள் என்ன செய்தீர்கள்?

எங்கள் வரலாற்றின்
பக்கங்களைப் புரட்டிப் புரட்டி
நீங்கள் சுட்டுப்போட்ட சாம்பலில்
இருந்து

சுடர்மிக எழுவோம் - வரலாற்றின் ஊடு

ஒரு மனிதப் பேரவலத்திற்கான
அத்தனை ஏற்பாடுகளும்
செய்யப்பட்ட நிலையிலும்
வெற்று வாக்குறுதிகளையும்
பொய்யான நம்பிக்கைகளையும்
பயனற்ற உறுதிமொழிகளையும்
கொடுத்தது யார்?

மனிதப் பேரவலம் நடந்தேறுகையில்
உண்ணாவிரதங்களாலும்
வீதி மறியல்களாலும்
ஆர்ப்பாட்டங்களாலும்
அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா - என
எங்கும், ஊடக வெளிகளை நிறைத்து
என்ன கண்டீர்கள்?

நாம் கட்டியிருந்த கோவணமும்
காணாமற் போகக் காரணம் யார்?

இன்றைய தமிழ் மக்களின்
அவலத்திற்கு
வரலாறு யார் மீது குற்றம் சுமத்தும்?
இந்தியாவையா
பாகிஸ்தானையா

அமெரிக்காவையா சீனாவையா
நோர்வேயையா - அல்லது
ஐரோப்பிய ஒன்றியத்தையா
இப்படியொரு கேள்வியை
வேதாளம் கேட்டிருந்தால்
விக்கிரமாதித்தனின் அலுப்பில்லாமல்
முருங்கை மரத்தில்
என்றென்றும் தொங்கியிருந்திருக்கலாம்
விக்கிரமாதித்தனுக்குக் கதைசொல்ல
ஒரு காட்டேரியோ
கொள்ளிவாய்ப் பிசாசோ
அகப்படாமலா போயிருக்கும்

எங்களுக்குத்தான் எத்தனை வரலாறுகள்
வென்ற வரலாறு - தோற்ற வரலாறு
துரோகி வரலாறு - துரோக வரலாறு
வாழ்ந்த வரலாறு - வீழ்ந்த வரலாறு
சொந்த வரலாறு - அதுதான் நொந்த
வரலாறு

கேட்கக் கேட்க இனிக்கும் கதைகள்
சப்புக் கொட்டி இரசிக்கும் கதைகள்
வீர தீர பராக்கிரமக் கதைகள்
பழம்பெருமை பேசும் கதைகள் - இவை
எதையும் உங்களுக்குச் சொல்ல
என்னால் இயலாது

கேட்க விரும்பியவற்றைச் சொல்லியும்
சொல்ல விரும்பியவற்றைக் கேட்டும்
கெட்டழிந்த கதைதானே எங்களது
கேட்க இனிதான கதையெதையும்
சொல்லுவது
இனியும் என்னால் இயலுமா?

மரண ஓலங்களும்
சித்திரவதையின் குரல்களும்
அடக்குமுறையின் கரங்களும்
சோரம்போன எழுத்துக்களும்
போராட்ட மேன்மையும் - என
எல்லாம் கலந்த குழம்பலாகவே
இருக்கிறதெம் வரலாறு

பொய்யும் புனைகதையும்
கூட்டுச் சேர்ந்த குப்பையாய்
பொய் முடிச்சுக்களின் கூடாரமாய்
இருக்கிறதெம் வரலாறு

வரலாறு என்றும்
வீரதீரப் பரம்பரை என்றும்
கங்கை முதல் கடாரம் வரை யாவும்
ஆண்டவர்கள் நாம் என்று
ஒன்றுக்கும் பயனற்ற கதைகளை நீர் -
இனிமேலும்
மறந்தேனும் உங்கள் பிள்ளைகட்குச்
சொல்லாதீர்

நியாயத்துக்கும் அநியாயத்துக்கும்
உண்மைக்கும் பொய்க்கும்
சரிக்கும் பிழைக்கும்
வேறுபாடு தெரியாத சமூகமாக
நாம் எவ்வாறு மாற்றப்பட்டோம்?
நடப்பன எதுவும் நமக்கல்ல என்று
காந்தியின் மூன்று குரங்குகள் போல
மௌனமாய் ''ம்'' கொட்டி,
''ம்'' கொட்டி
வாழ நாம் எப்படிப் பழகினோம்? - எப்படி
நாம்
அவ்வாறு பழக்கப்படுத்துண்டோம்?

தத்துவத்தின் முடிவென்றும்
வரலாற்றின் முடிவென்றும்
நவீனத்துவத்தின் முடிவு இதுவென்றும்
சோசலிசத்தின் முடிவு இதுவென்றும்
தேச அரசுகளின் முடிவு இதுவென்றும்
இறுதிகளின் இறுதிகளை
முழக்கங்களாய் மாற்றி
முடிவுகளைப் பற்றிப் பேசினார்கள்.

வரலாறு,
அருந்ததி ராயையும்
அமர்த்யா சேனையும்
அமிர்தானந்த மாயியையும் - ஒரே
விதமாகத்
தன்னையவர் பார்ப்பதற்குக் கற்றுத்
தரவில்லை
என்றும் அது அவ்வாறுகற்றுத்
தருவதில்லை

சுட்ட சாம்பலின் சுடர்மிக எழுந்து
வரலாறு பற்றியும்
வரலாற்றில் உங்கள் வகிபாகம் பற்றியும்
- நாளை
உங்களது பிள்ளைகள் உங்களிடம்
கேட்கலாம்

மக்கள் அல்லற்படுகையில்
காணாமற் போகையில்
பசியில் தவிக்கையில்
சிறையில் வாடுகையில் - நீங்கள்
என்ன செய்தீர்கள் என
உங்களது பிள்ளைகள் உங்களிடம்
கேட்கலாம்


அப்போது உங்களால்
பழம் பெருமைகள் பற்றியோ
ஆண்டபரம்பரைக் கதைகள் பற்றியோ
சேர சோழ பாண்டியர் பற்றியோ
பேச முடியாது

வரலாற்றைத் தமது தேவைகட்கு ஏற்றபடி
கருவியாய்க் கொள்பவர்கள் எப்போதும்
கடந்த காலத்தின் ஒரு துண்டைக்
கத்தரித்து
பொற்காலமாகச் சோடித்துக்
கதைபுனைந்து
அதற்காக ஏங்கி வாழ்வை அழிப்பார்கள்

வரலாறு கூரான ஒரு கருவி எனினும்
அது
எதிரிகளை மட்டுமே காயப்படுத்தாது
கையில் எடுத்த எவனுக்கும் காயங்கள்
உண்டாக்க அதற்கியலும்.

அதனாற் தான் சொல்கிறேன்
எதற்கும் பயனற்ற கதையையெல்லாம்
வரலாறாய்;
உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லாதீர்
தயைகூர்ந்து பிள்ளைகளுக்குச்
சொல்லாதீர்

*தெ.ஞாலசீர்த்தி*
*மீநிலங்கோ*



# மெல்ல... டெஸ்ட் இனி சாகும்...?



நான்காவது "ருவென்ரி-20" உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இலங்கையில் நடைபெற்று வருகிறது. டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒரு நாள் போட்டிகளுக்கான முக்கியத்துவம் குறைந்து விட்ட நிலையில் "ருவென்ரி-20" போட்டிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. இந்தியாவின் ஐ.பி.எல் போன்று பங்களாதேஷ் மற்றும் இலங்கையிலும் உள்நாடுகளில் 20 ஓவர் போட்டிகள் தொடங்கிவிட்டதால் உபகண்டத்தில் 20 ஓவர் போட்டிக்கு மவுசு அதிகரித்து விட்டது.

நவீன உலகம் இன்று சுருங்கிவிட்டது. எல்லாவற்றிலும் நேரக்கட்டுப்பாடு பேணப்படுகிறது. மக்களைக் கட்டிப் போடும் சினிமாவும் விளையாட்டுத் துளையும் நேரக்கட்டுப்பாட்டை கடைப் பிடிக்க வேண்டிய கட்டாயமேற்பட்டுள்ள நிலையில், அந்த நேரக்கட்டுப்பாடினுள் மக்கள் சுவாரஸ்யத்தை தேடத்தொடங்கி விட்டதால், முன்னர் மூன்று மணிநேர மென்ற சினிமா இன்று இரண்டு மணி நேரம் அல்லது ஒன்றரை மணி நேர மாகிவிட்டது.

விளையாட்டு உலகம்



நடராஜ விநாயகன்

சினிமாவைப் போலவே மக்கள் விளையாட்டையும் பார்க்கத் தொடங்கி விட்டதால், சினிமாவைப் போல் விளையாடின் நேரமும் குறைக்கப்பட வேண்டியதாகிவிட்டது. வேறு விளையாட்டுக்களைப் போலல்லாது கிரிக்கெட் மிக நீண்ட நேரத்தை எடுத்து விடுவதால், காலப் போக்கில் கிரிக்கெட்டின் வடிவமும் மாறத் தொடங்கியது. முன்னைய காலத்தில் ஐந்து அல்லது ஆறு நாட்களுக்கு டெஸ்ட் கிரிக்கெட் ஆடப்பட்டது. அதில் சலிப்பேற்பட அதன் வடிவமும் மாறியது. ஒரு நாளில் 60 ஓவர்கள் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் போட்டியாக அதன் வடிவம் மாற்றப்பட்டது. ஆனால் அதுவும் டெஸ்ட் போட்டியை போலிருக்கவே அதில் பத்து ஓவர் குறைக்கப்பட்டு ஒரு நாள் போட்டி 50 ஓவராக மாறியது.




60 ஓவர் 50 ஓவராக மாறியபோதும் காலப்போக்கில் அதிலும் விறுவிறுப்பு குறையவே மேலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. 50 ஓவர் போட்டியின் சட்டதிட்டங்கள் மாற்றப்பட, ஆடுகளத்தை சுற்றி 30 யார் வட்டம் போடப்பட்டது. அதற்கேற்ப விதிகளிலும் திருத்தங்கள் வர ஒரு நாள் போட்டியை மேலும் விறுவிறுப்பாக்கும் முயற்சிகளும் முன்வைக்கப்பட்டன.

ரசிகர்களின் ரசனைகளும் மாற போட்டி விதிகளும் மாறத் தொடங்கின. இதனால் ஒரு காலத்தில் ஒரு நாள் போட்டியென்றால் நாடும் நகரங்களும் ஸ்தம்பித மடையும். அந்தப் போட்டிகளுக்கு தயாராகி அவற்றை ரசித்து அவற்றின் வெற்றி தோல்விகளால் அடுத்த போட்டிகளுக்கு வீரர்களைத் தயார் செய்ய வேண்டிய நிலையிலிருந்தது. ஆனால் இன்றோ ஒரு நாள் போடிகள் கூட சலித்துப் போய் விட்டன. இதனாலேயே இதன் உருவமும் மாறத் தொடங்கியது. ஐம்பது இருபதாகியது. ஐம்பதில் இல்லாத சுவாரஸ்யத்தை ரசிகர்கள் இருபதில் காணத்தொடங்க, ஐம்பது ஓவருக்கான உலகக் கிண்ணத்தைபோல் 20 ஓவருக்கும் ஒரு கிண்ணம் தயாராகியது.

டெஸ்டுக்கும் ஒரு நாள் போட்டிக்கும் இல்லாத அந்தஸ்து 20 ஓவர் போட்டிக்கு கிடைத்துள்ளது. டெஸ்ட்போட்டிகளையோ ஒருநாள்போட்டிகளையோ கையிலெடுக்காத தனியார் துறை 20 ஓவரை கையிலெடுத்தது. எதனையுமே வேகமாகவும் விறுவிறுப்பாகவுமாக்கும் விளம்பரத் துறை மக்களை பெரிதும் ஆக்கிரமித்து விட்ட நிலையில் டெஸ்டுக்கும் ஒரு நாள் போட்டிக்கும் இல்லாத முக்கியத்துவம் 20 ஓவருக்கு கிடைத்தது. குறுகிய நேரத்தில் விறுவிறுப்பான போட்டி என்பதால்,

விளம்பரத்துறையும் டெஸ்டையும் ஒரு நாள் போட்டியையும் கைவிட்டு 20 ஓவரைக் கையிலெடுத்தனர்.

விளையாட்டுத் துறையும் இன்று விளம்பரத்துறையின் கைதியாகி விட்டதால் திறமை, போட்டியின் தரமென்பதற்கப்பால் குறுகிய நேரத்தில் கூடிய சுவாரஸ்யத்திற்கு அதிக விலை கிடைக்கிறது. அதற்கு அதிக விளம்பரங்கள் மிகப்பெரிய கட்டணத்தில் கிடைப்பதால் முழு உலகத்தின் கவனமும் விளம்பரத் துறையின் விருப்பு வெறுப்புக்கேற்ப தங்கள் சேனையையும் மாற்றவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உலகின் மிகப் பிரபல வீரர்கள் பலரைக் கூட புகழ்பெற்ற விளம்பர நிறுவனங்கள் பல தங்கள் விளம்பரங்களில் நடிக்க வைப்பதால் விளம்பர தாரர்களின் விருப்பு, வெறுப்பிற்கேற்பவே அணிகளில் வீரர்களின்தெரிவுகளும்இடம்பெறுவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. தங்கள் விளம்பரங்களின் ஒப்பந்தமான மிகபிரபலமானசிரேஷ்டவீரர்களை ஓய்வு பெற விடாது தடுப்பதும் கிரிக்கெட் சபைகளைநெருக்குதல்களுக்குள்தள்ளி அவ்வாறானவர்களை அணிகளுக்குள் புகுத்துவது இந்த விளம்பர நிறுவனங்களின் கைகளிலேயே இருப்பதாக பரவலாககுற்றச்சாட்டுகள்எழுந்துள்ளன.

விளம்பரத்துறையினரின் ஆதிக்கம் விளையாட்டுத்துறையை தலைகீழாக்குகிறது. எந்தப் போட்டியையும், எந்த நிகழ்வையும் நேரில் பார்ப்பதைவிட தொலைக்காட்சிகளில் பார்ப்பது மிகவும் சுவாரஸ்யமாகி விட்டதால் எதனையும் வீட்டில்இருந்தபடியேரசிக்கும்நிலைக்கும் ரசிகர்கள் தள்ளப்பட்டு விட்டனர். மைதானங்களில்நேரில் சென்று போட்டிகளைப் பார்ப்பது போன்ற உணர்வை தெரிவைக் கட்சிகளின் அளவுகளும் தீர்மானித்து வருவதாலும் எந்தவொரு போட்டிக்கும் நேரில் செல்லும் ரசிகர்களால் ரசிக்க முடியாதவற்றை 30, 40 என கமராக்களின் எண்ணிக்கையை அதிகரித்தது. போட்டியின் அனைவற்றையும் ஒரு சில நிமிடங்களில் "ரீ-பிளேக்"களின் மூலம் திரும்பத் திரும்ப காட்டி விடுவதால் மைதானங்களுக்கு நேரில் சென்று போட்டிகளை பார்ப்பதை விட தொலைக் காட்சிகளின் மூலம் பார்க்க விரும்பும் ரசிகர்களின் எண்ணிக்கை பெரும் அளவு அதிகரித்து விட்டது.

இதனால்மைதானங்களுக்குச்சென்று போட்டிகளைப் பார்ப்பதை விட தொலைக் காட்சிப் பெட்டிகளுக்கு முன் ரசிகர்கள அமர்ந்து விடுவதால் மைதானங்களில் ரசிகர்களின் எண்ணிக்கையும் குறையத் தொடங்கி விட்டது. இதனை தொலைக் காட்சி நிறுவனங்கள் விளம்பர நிறுவனங்களும் நன்கு பயன்படுத்த தொடங்கவே, ஒரு காலத்தில் விளையாட்டுப் போட்டிகளும், திரைப்படங்களை தயாரிப்பதைப் போல் போட்டிகள் நடைபெறும் போது அவ்விடத்தில் ரசிகர்கள் இல்லாது தொலைக்காட்சிகளில்மட்டுமேஅவற்றை ரசிகர்கள் பார்க்கும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்று "ருவென்ரி-20"போட்டியானது டெஸ்ட்போட்டியின் மிகப்பெரும் எதிரி, சர்வதேச ஒருநாள் போட்டிகளை நடத்துவதாக இல்லை என்பதைத்தீர்மானிக்கும் சக்தி, ரசிகர் கூட்டத்தை மைதானங்களுக்கு பெருமளவில் ஈர்த்தெடுக்கும் வஸ்திரமாக்கிவிட்டது. "ருவென்ரி-20" போட்டிகளால் நாடுகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர்களில் டெஸ்ட் போட்டிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு விட்டன அல்லது டெஸ்ட் போட்டிகளை இல்லாது செய்து அவற்றுக்குப் பதிலாக "ருவென்ரி-20" போட்டிகள் நடத்தப் படுகின்றன. ஒவ்வொரு நாடுகளும் கிரிக்கெட் சபைகளின் வருமானத்தை பெருக்குவதற்காக உள்நாடுகளில் "ருவென்ரி-20" போட்டித் தொடர்களை நடத்த தொடங்கி விட்டனர்.

டெஸ்ட் போட்டியை கிரிக்கெட்டில் இருந்து நீக்கிவிடும் காலம் நெருங்கிவிட்டதோ என்ற அச்சம் எழுந்துள்ளது. கிரிக்கெட் உலகின் ஜாம்பவான்கள் எல்லோரும் டெஸ்ட் போட்டிகளில் சாதனை படைத்து வந்தவர்கள் என்பதால் நேற்று வந்த "ருவென்ரி-20" க்காக டெஸ்ட் போட்டிகளை தாரை வார்க்க வேண்டுமா என்பதை கிரிக்கெட் உலகம் தான் தீர்மானிக்க வேண்டும்

இந்தியாவில் ஐ.பி.எல், அவுஸ்ரேலியாவில் "பிக்-பாஷ்", பங்களாதேஷில் பி.பி.எல், இலங்கையில் எஸ்.எல்.பி.எல் என்பதுடன் பாகிஸ்தான், இங்கிலாந்தில், தென்னாபிரிக்காவிலும் இவ்வாறான தொடர்கள் தொடங்கப்படவுள்ளன. இவற்றுக்காக டெஸ்ட்போட்டிகளின் எண்ணிக்கை குறைக்கப்படுகின்றன அல்லது ரத்துச்செய்யப்படுகின்றன. அடுத்த ஆண்டு மே மாதம் -மேற்கிந்திய அணிகளுக்கிடையே மேற்கிந்தியாவில் நடைபெறவிருந்த டெஸ்ட் தொடரை ஐ.பி.எல். போட்டிகளுக்காக கைவிட இலங்கை, மேற்கிந்திய அணிகள் உடன்பட்டு விட்டன. இந்தியாவில் ஐ.பி.எல் தொடரின் இலங்கை, மேற்கிந்திய வீரர்கள் மிக முக்கிய வீரர்களென்பதால் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான தொடரைக் கைவிட்டு இதற்குப் பதிலாக ஒருநாள் மற்றும் "ருவென்ரி-20" போட்டிகளை நடத்த இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் இணங்கிவிட்டன.

இன்னொரு நாட்டில் நடைபெறப் போகும் "ருவென்ரி-20" தொடருக்காக பாரம்பரிய கிரிக்கெட்டுக்கான டெஸ்ட் தொடரை கைவிட வேறிரு நாடுகள் முன்வந்தமை டெஸ்ட் போட்டிகளின் நாட்கள் எண்ணப்படுவதையே தெளிவு படுத்தியுள்ளது. இலங்கை - மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் ஐ.பி.எல் தெடரின் நேர அட்டவணையை குறுக்கீடு செய்வதாலேயே டெஸ்ட் தொடரை கைவிட இந்த இரு நாடுகளும் முன்வந்துள்ளன. இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இந்த முடிவிற்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளதால் மேற்படி இருநாடுகளதும் கிரிக்கெட் சபைகள் பல்வேறு காரணங்களைக் கூறுகின்றன.

இந்த நிலைமைகளைப் பார்க்கையில் டெஸ்ட் போட்டியை கிரிக்கெட்டில் இருந்து நீக்கிவிடும் காலம் நெருங்கிவிட்டதோ என்ற அச்சம் எழுந்துள்ளது. கிரிக்கெட் உலகின் ஜாம்பவான்கள் எல்லோரும் டெஸ்ட் போட்டிகளில் சாதனை படைத்து வந்தவர்கள் என்பதால் நேற்று வந்த "ருவென்ரி-20"க்காக டெஸ்ட் போட்டிகளை தாரை வார்க்க வேண்டுமா என்பதை கிரிக்கெட் உலகம் தான் தீர்மானிக்க வேண்டும்.

அறிவியல் களரி

# விதியெழுதும் இறைவனுக்குச் சவால்
# கருவறையினுள் சத்திரசிகிச்சை



வைத்தியக் கலாநிதி எம்.கே. முருகானந்தன்

செய்வது என்னவென்று புரியாது திகைத்து நின்றாள். தாய்மைக் கனவுகளுடனும் பூரிப்பிலுமிருந்த அவளது உணர்வுகள் ஒரே நிமிடத்தில் சுக்குநூறாகத் தகர்ந்தன.

அவள் பார்த்த காட்சிதான் அவளை நிலைகுலைய வைத்தது. பார்த்தது தனது வயிற்றை. அதனுள் இருந்த கருப் பையை, அதற்கும் உள்ளே கைகால் களைஅசைத்துக்கொண்டுகுழந்தையாக உருவாகிக் கொண்டிருக்கும் கருவை.

கருவின் வாயிலிருந்து பெரிய நீர்க் குமிழி போல எதுவோ வெளியே நீட்டிக் கொண்டிருந்தது.




17 வாரங்களே கர்ப்பம் தரித்திருக்கும் அவளது வயிற்றை மருத்துவர்கள் வழமையாகச் செய்யும் பரிசோதனையான அல்ரா சவுண்ட் ஸ்கான் செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஸ்கான் இயந்திரத்தின் திரையில் தெரிவதைத்தான் அவளும் பார்த்துக் கொண்டிருந்தாள். இரண்டு வாரங்களுக்கு முன் செய்த ஸ்கான் பரிசோதனையில் எந்தவிதப் பிரச்சினையும் இருந்திருக்கவில்லை.

இப்பொழுது, இரண்டு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில் தனது அனுபவத்தை வெளியுலகிற்கு வெளிப்படுத்தியிருக்கிறாள். மருத்துவத்துறையில் முன்னோடி என்று சொல்லக் கூடியதான ஒரு சத்திரசிகிச்சை மூலம் மருத்துவர்கள் அவளது வயிற்றிலிருந்த குழந்தையை காப்பாற்றினார்கள் என்பது தெரிய வந்துள்ளது. குட்டித் தேவதை என்று பொருள்பட அந்தக் குழந்தைக்கு லெயினா என்று பெயரிடப்பட்டுள்ளது.

அந்நேரத்தில் இது என்ன என்ற அவளது கேள்விக்குத் தெளிவான விடை கிடைக்கவில்லை. அது ஒரு கட்டி என்பது மட்டுமே அப்போது தெரியவந்தது. 100,000 கர்ப்பங்களில் ஒருவருக்கு மட்டுமே தோன்றக்கூடிய ஒரு அரிய நோய் இது. புற்றுநோயாக (fetal oral teratoma) மாறி உயிரைப் பறிக்கக் கூடியது என மருத்துவர்கள் பிற்பாடு கூறினார்கள். என்ன செய்வது எனத் தெரியாது திகைப்பில் ஆழ்ந்தாள். அவளால் விடை காணக்கூடிய விடயம் அல்லவே இது.

இரண்டு தேர்வுகளை அவள் முன் மருத்துவர்கள் வைத்தார்கள். முதலாவது- மருத்துவ ரீதியான கருச்சிதைவு ஆகும். அவர்களது நாட்டில் அது சட்ட ரீதியானது. உள்ளே துடித்துக் கொண்டு ஒவ்வொரு கணமும் அவளோடு உறவாடிக் கொண்டிருக்கும், அவளது உயிரோடு கலந்த, இரத்தமும் சதையும் போன்ற கருவை அழிக்க அவளுக்கு எப்படி மனம் வரும்?.


இரண்டாவது தேர்வானது - குழந்தை தானாகப் பிறக்குமட்டும் காத்திருந்து அதன் பின்னர் வேண்டிய சத்திர சிகிச்சைகளைச் செய்து கட்டியை அகற்றுவதாகும். கட்டி வளரும் வேகத்தில் அது பிறப்பதற்கிடையில் இரண்டு இறாத்தல் வரை பெரிதாகக் கூடும் என அஞ்சப் பட்டது. அதனால் உள்ளேயே குருதிப் பெருக்கு ஏற்பட்டு அழியவும் கூடும் என மருத்துவர்கள் கருதினார்கள்.

அவ்வாறு நிகழாமல் குழந்தை உயிரோடு பிறந்தாலும் கூட, பல சத்திரசிகிச்சைகளுக்கு உட்படுத்த நேரிடும். தொண்டைக்குழியில் துவாரமிட்டு (tracheotomy) சுவாசத்தை இலகுவாக்க வேண்டியிருக்கலாம். கட்டியை அகற்ற, அது பரவியிருந்தஇடங்களைஇயல்பாக்க என இன்னும் பல செய்யப்பட நேரலாம். இதனால் அங்கக் குறைபாடுகள் ஏற்படும் சாத்தியங்கள் அதிகம்.

ஏதாவது ஒரு மாற்று வழி இருக்கக் கூடும், இருந்தே ஆக வேண்டும் என எண்ணத்தில், தேடலில் இறங்கினாள் Gonzalez. அப்பொழுது அவளுக்கு வயது 39 ஆகி விட்டது. கணவன் Alain உம் துணையாக இருந்தான். கரு வயிற்றினுள் இருக்கும்போதே சத்திரசிகிச்சை செய்யக்கூடிய வாய்ப்பு உள்ளதா என வினவியபோது அவளுக்கு Dr Ruben Quintero என்ற பெயர்தரப்பட்டது.

University of Miami இல் பணியாற்றிக் கொண்டிருந்த கருக்களுக்கான சிகிச்சைத் துறை முன்னோடியான Dr Ruben Quinteroவுக்கு இது ஒரு சவாலாக இருந்தது. ஏனெனில் இவ்வாறான ஒரு சிகிச்சை உலகளாவிய ரீதியில் எங்குமே இதுவரை செய்யப்படவில்லை. எனவே முன்பாகவே எதிர்பார்க்க முடியாத பல சிக்கல்கள் ஏற்படக்கூடும் என தாய்க்குத் தெளிவுபடுத்தினார்.

Dr Ruben Quintero மற்றும் அவரது மனைவியுமாக Eftichia Kontopoulos சத்திரசிகிச்சையை மேற்கொண்டனர். Eftichia கருக்களின் சத்திரசிகிச்சையில் விசேட மருத்துவர் என்பது குறிப்பிடத் தக்கது. endoscope துணையுடன் ultrasound யினால் பார்த்து லேசர் முறையில் செய்யப்பட்ட சத்திரசிகிச்சை இதுவாகும். கட்டியை நெருக்கமாகப் பார்ப்பதற்காக வயிற்றினுள் endoscope பை செலுத்து



வதற்கு செய்யப்பட்ட சிறிய துளை தவிர வேறு வெட்டுக் காயம் எதுவுமின்றி கட்டி அகற்றப்பட்டது. கருப்பையில் காயம் எதுவுமே கிடையாது.

லேசர் மூலம் வெட்டப்பட்டபோது கட்டியானது துண்டிக்கப்பட்டு நீந்தி மறைந்தது போல தாய்க்குத் திரையில் தெரிந்தது. வயிற்றிலிருந்த பெரும் பாரம் திடீரென நீங்கிவிட்டதாக உணர்ந்தாள். கட்டி அகன்றதும் குழந்தையின் முகம் கணினித் திரையில் தெளிவாகத் தாய்க்குத் தெரிந்தது. வயிற்றிலுள்ள பாரத்திற்கு மேலாக அவளை அமுத்திக் கொண்டிருந்த மனப் பாரம் அக்கணமே மறைந்தொழிய மகிழ்ச்சி அவளை முற்றுமுழுதாக ஆட்கொண்டது.

எட்டு மாதங்களுக்குப் பின்னர் லெயினா 8 இறாத்தலும் 1 அவுன்சும் உள்ள குழந்தையாக விக்கினமின்றிப் பிறந்தாள். வாயருகில் இருந்த சிறிய மறுவைத் தவிர வேறு ஊனம் ஏதும் காணப்படவில்லை.

கருப்பையினுள் வைத்து சத்திர சிகிச்சை செய்வது இதுவே முதற் தடவையல்ல. 1999ஆம் ஆண்டு வெளியான ஒரு புகைப்படம் மூக்கில் கை வைக்குமளவு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது. அது எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு சின்னஞ்சிறு கையினது படம். தாயின் கருப்பையிலிருந்துதான் வெளியே நீட்டிவந்த அதன் விரல்கள், கையுறையிட்டிருந்த மருத்துவரின் கைவிரல்களை பற்றிக் கொண்டிருந்தது.

நீரில்மூழ்கித்தத்தளித்துக்கொண்டிருப்பவன் உயிர் தப்புவதற்கான கடைசி முயற்சியாக கையில் அகப்படும் எதையாவது நம்பிக்கையோடு எட்டிப் பிடிப்பதை அது எனக்கு நினைவூட்டியது.

அதற்கிணையான நிலைதான் அந்தப் பிஞ்சுக்கரங்களுக்கு. கருப்பையில் கருவாகி உருவாகிக் கொண்டிருக்கும் 21 வாரங்களேயான குழந்தையின் கைகள்தான் வெளியே நீட்டிக் கொண்டிருந்தன. அக்குழந்தைக்கு ஒரு மிக ஆபத்தான நோய் ஏற்பட்டிருந்ததை அவதானித்தார்கள். அதனுடைய முதுகெலும்பு பிளந்து அதனூடாக முண்ணான் வெளியே தள்ளிக் கொண்டிருந்தது. இந்நோயை Spina bifda என அழைப்பார்கள்

இறந்து பிறப்பதோ அல்லது பிறந்த பின் சிலகாலம் மட்டுமே வாழ்வதோ அதன் தலையெழுத்தென விதிக்கப்பட்டிருந்தது. அந்த விதியை மாற்றும் சிகிச்சையை Dr.Joseph Bruner செய்திருந்தார். ஆழ்மயக்கத்தில் ஆழ்த்தும் மயக்க மருந்து கொடுத்தே அச் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. தாய் மட்டுமன்றி கருவிலுள்ள குழந்தையும் மயக்கத்திலிருக்கும்போதே அல்ரா சவுண்ட் உதவியுடன் கருப்பையில் குழந்தை எங்கிருக்கிறது, எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் கண்டறிந்த பின்னர் நேரடியாக அடிவயிற்றைத் குறுக்காக வெட்டித் திறந்து செய்யப்பட்ட சிகிச்சை இது.

இச் சிகிச்சையின் முக்கிய பிரச்சினை கருப்பையிலுள்ள பனிக்குட நீர் வெளியேறி ஏனைய உறுப்புகளைப் பாதிக்காமல் பாதுகாப்பதாகும். அதேபோல குழந்தையின் மூளை முண்ணான் தொகுதியிலுள்ள cerebrospinal fluid வெளியேறினால் அங்குள்ள அமுத்தம் குறையும். இதனால் பின்மூளை பிதுங்கி வெளியேறி பிடரிப்பகுதியில் கட்டியுடன் (Hydrocephalus) பிறக்கக் கூடும். இவை ஏற்படாமல் தடுப்பதற்கு கரு 20 வாரங்களைத் தாண்ட முன்னரே சத்திரசிகிச்சை செய்ய வேண்டியது அவசியமாகும்.

இன்றுள்ள மருத்துவ வசதிகளோடு ஒப்பிடுகையில் சுமார் 13 வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட இச் சத்திரசிகிச்சையானது அக் காலகட்டத்தில் மிகவும் முன்னேற்றகரமானது என்பதில் ஐயமில்லை.

கருவில் சத்திரசிகிச்சை செய்வதானது ஆச்சரியப்படவைப்பதாக இருந்தபோதும் அது துரித வளர்ச்சியடைகின்ற துறையாக இருக்கிறது. அதில் மூன்று முக்கிய வகைகள் உள்ளன.

1. திறந்த கரு அறுவைச் சிகிச்சையானது (Open fetal surgery) முற்று முழுதாக தாயின் கருப்பையைத் திறந்து கருவை நேரடியாகப் பார்த்துச் செய்வதாகும்.
2. குறைந்த அளவில் தாயின் வயிற்றைத் துளையிட்டு செய்யப்படும் Fetoscopic surgery அறுவை சிகிச்சை ஆகும். இதனை (fetendo) எனவும் கூறுவர். வயிற்றினுள்ளே இருக்கும் இரைப்பை சிறுகுடல், பெருங்குடல் ஆகியவற்றை திறந்து பார்க்காமல் வாயினூடாக குழாய் போன்ற உபகரணத்தைச் (endoscope) செலுத்திப் பார்ப்பதை ஒத்ததுதான் fetoscope. இந்த உபகரணத்தை தாயின் வயிற்றின் ஊடாகக் கருப்பையினுள் செலுத்தி அல்ரா சவுண்ட் உதவியுடனும் பார்த்துக் கொண்டே சிகிச்சையும் மேற்கொள்ளப்படுகிறது.
3. இப்பொழுது செய்யப்பட்டது கருப்பையில் ஒரு சிறு காயம் கூட ஏற்படுத்தாது, எண்டஸ்கோப்பை கருப்பையினுள்ளே செலுத்தாது செய்யப்பட்டதாகும்.

கத்தியின்றி, இரத்தமின்றி கருவில் ஏற்படுகின்ற கோளாறுகளை சரிசெய்ய முனையும் சிகிச்சையானது பாரிய முன்னேற்றம் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

பிறவி அங்கவீனம் என்றும் பரம்பரை நோய்களென்றும் வருபவை முன்வினைப் பயன் எனக்கூறி தன்னைத் தானே நொந்து சுயபச்சாபிதம் கொள்ளும் காலம் மறைந்து செல்கிறது.

விதியை எழுதிச்செல்லும் இறைவனின் பேனாவில் உட்புகுந்து புதிய விதிகளை மனிதன் தானே எழுதும் காலம் விரைந்து வருகிறது. ஆம் மனிதன் மகத்தானவன். அவனால் ஆகாதது ஒன்றும் இல்லை.

ஆயினும் மண்ணுயிர்களில் அக்கறையும் பற்றும் அவற்றின் நல்வாழ்விற்காக தன்னாலான பங்களிப்பைச் செய்பவன் மட்டுமே மகத்தானவனாக இருக்க முடியும். அவர்கள் இறைவனிலும் மேலானவர்கள். அவர்கள் மருத்துவர்களாக மட்டுமே இருப்பதும் இல்லை.

சமூகவியல் பிரச்சினை

## முன்னேஸ்வரம் காளி கோயில்

# மிருக வேள்வி கிளப்பும் சர்ச்சைகள்

உ. லிப்பிக்கா



மிருக வேள்வியை ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்பதற்கு அப்பால் இது தொடர்பான நியாயப்பாடுகளையும் எதிர்ப்பவர்களின் உள்நோக்கங்களையும் புரிந்து கொள்வதற்கு பல விடயங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியமானதாகும்

மிருகவேள்வி எனும் சடங்கு இன்று நேற்று முளைத்த ஓர் சடங்கு அல்ல. அது பல்லாண்டுகாலமாக எமது நாட்டிலும் இந்தியாவிலும் பல இந்துக் கோவில்களில் நடைபெற்றுவரும் ஓர் சம்பிரதாயமாகும். மிருகவேள்வி பற்றி நாம் புராணக் கதைகளில் கூடப் படித்திருக்கிறோம். உதாரணத்திற்கு கண்ணப்ப நாயனாரின் இறைச்சிப்படையலைப் பற்றிக் கூறலாம்.

இருந்தபோதும் கடந்த 350 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் முன்னேஸ்வரம் காளி கோயிலின் மிருக வேள்வி விழாவை நிறுத்துமாறு கோரி சில பௌத்த அமைப்புகள் சர்ச்சையை ஏற்படுத்தி வருவதுடன், நீதிமன்றங்களை நாடுவதையும் கடந்த சில வருடங்களாகக் காணக்கூடியதாக உள்ளது.

கடந்த வருடம் இக்கோயிலில் மிருக வேள்வியை நிறுத்துமாறு கோரி பௌத்த அமைப்புகளால் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில் சிலாபம் நீதிமன்றம் அதனை நிறுத்துமாறு தடையுத்தரவைப் பிறப்பித்திருந்தது. இருந்த போதிலும் அதை மீறி கடும் எதிர்ப்புக்கு மத்தியில் மிருக வேள்வியை கோயில் நிர்வாகத்தினரும் பக்தர்களும் நடத்தியிருந்தனர்.

அதேபோன்று இவ்வருடமும் அதனை நடத்தவிடாது ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கடந்த வருடம் தடையுத்தரவை பிறப்பித்திருந்த சிலாபம் நீதிமன்றம் இவ்வருடம் இவ்வார்ப்பாட்டங்களை நிறுத்தும் வகையில் தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்திருந்ததுடன், மிருக வேள்வியைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் இந்நீதிமன்றத்திற்கு இல்லையெனவும் கூறியிருந்தது.

இத்தீர்ப்பின் பின் சில பௌத்த அமைப்புகள் ஒன்று சேர்ந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூலம் தடையாணை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக தாக்கல் செய்துள்ள ரிட்மனு இன்னமும் நிலுவையில் இருக்கிறது.

செப்டெம்பர் முதலாம் திகதியே முன்னேஸ்வரம் காளி கோயிலின் மிருக வேள்வி தினமாகும். அதனைத் தடுப்பதற்கு கோயில் பூசகர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் பயமுறுத்தல்களும் அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்ட வண்ணமிருந்தன. இவ்வேளையில் ஜனாதிபதி கேட்டுக் கொண்டால் மிருக வேள்வி சம்பந்தமாக பரிசீலிக்கத்தயார் என்று கோயில் நிர்வாகத் தினர் ஆகஸ்ட் 31ஆம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தனர். இதற்கு, நாடெங்கும் புத்தரின் புனித சின்னம் (கபில வஸ்து) எடுத்துச் செல்லப்படவிருப்பதால் அப்பவனி முடியும்வரை மிருக வேள்வியை ஒத்திவைக்கும்படி ஜனாதிபதி செயலகத்திலிருந்து கேட்கப்பட்டிருந்தது. இவ்வேண்டுகோளுக்கு கோயில் நிர்வாகமும் இணங்கியது. ஆனால் இது வேண்டுகோளா? அல்லது அறிவுறுத்தலா என்று தெரியாத நிலையில் இச்சர்ச்சை இன்று வரை தீர்க்கப்படாமலேயே உள்ளது.

தற்போது புத்தரின் புனித சின்னம் இலங்கையிலிருந்து மீண்டும் இந்தியாவிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், மிருக வேள்வி நடைபெறுமா என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் முன்னேஸ்வர காளி கோயில் பூசகர் தெரிவித்துள்ள பின்வரும் கருத்து அமைந்துள்ளது.

"மிருக வேள்வி பெருவிழா என்பது முன்னேஸ்வர காளி கோயில் திருவிழாவின் பத்தாவது நாளான மகேஸ்வர பூஜையுடன் நடைபெறுவதாகும். வேள்விக்காக திருவிழா அன்றி திருவிழாவின் ஒரு அம்சமாகவே வேள்வி நடைபெறும். அது குறிப்பிட்ட தினத்தில் நடைபெறா விட்டால், ஒத்திவைக்கப்பட்ட தினத்தில் அதனை மேற்கொள்ள முடியாது. இவ்வருடத்தில் அதனை மேற்கொள்வது உகந்ததல்ல. இனி அடுத்த வருட திருவிழாவில் தான் குறிப்பிட்ட மிருக வேள்வியை மேற்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் சார்பாக கருத்து தெரிவித்துள்ள லலித் வீரதுங்க, ஜனாதிபதி செயலகம் ஒரு போதும் மிருக வேள்வியை நடத்துவதற்கு அனுமதியையோ சம்மதத்தையோ வழங்கவில்லை என்றும் தானோ தனது செயலகத்திலிருந்து எவருமோ இந்த மிருக வேள்வி பூஜையில் ஒருபோதும் கலந்து கொள்ளவேயில்லை என்றும் இவ்விடயம் தற்போது நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டிருப்பதனால் இவ்விடயம் தொடர்பாக எந்த ஒரு முடிவையும் ஜனாதிபதி செயலகம் எடுக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக முன்னேஸ்வர காளி கோயில் பக்தர்கள் சிலரிடம் வினவிய போது, காளியம்மனுக்காகச் செய்யப்படும் மிருக வேள்வியை நடத்த விடாது தொடர்ந்து பல வருடங்களாக மனித உருவிலிருக்கும் பல அசுரர்கள் பல தடைகளை ஏற்படுத்தி வருகிறார்கள். மிருக வேள்வி என்பது மனிதருக்குள்ளும், பிரதிஷ்டை செய்யப்படும் தெய்வ விக்கிரகங்களுக்குள்ளும் சாந்தியடையாது அலைந்து திரியும் தீய ஆவிகள் புகுந்துவிடாமல் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படுவதாகும். இதனை ஒழுங்காக தொடர்ந்து செய்யாவிட்டால் தீய ஆவிகளினதும் அசுரர்களினதும் ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் கீழ்ப்பட்டு மனித சமூகம் அழிவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் நிலை உருவாகும் என்றும், நாட்டுக்கும் மக்களுக்கும் பாரிய அனர்த்தங்கள் ஏற்படும் என்ற பயத்தையும் வெளிப்படுத்தினர்.



350 வருடங்களுக்கு மேல் இடம் பெற்றுவரும் முன்னேஸ்வர காளி கோயில் திருவிழாவில் நடைபெறும் மிருக வேள்விக்கெதிராக பலரும் பலவிதமான கருத்துகளை கூறி வருகின்றனர். இந்துக்கள் சிலரும் இதற்கு எதிராக தெரிவித்து வரும் கருத்துகள் இதற்கு எதிராகச் செயற்படும் பௌத்த சமய மேலாதிக்கவாதிகளின் தீப்பந்தங்களுக்கு நெய் வார்ப்பது போல் அமைந்துள்ளது.

இவ்விடயத்தில் மிருக வேள்வியை ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்பதற்கு அப்பால் இது தொடர்பான நியாயப்பாடுகளையும் எதிர்ப்பவர்களின் உள்நோக்கத்தையும் புரிந்து கொள்வதற்கு பல விடயங்களை சீர் தூக்கிப்பார்ப்பது பொருத்தமானதாக இருக்கலாம்.

இந்து சமயம் பொதுவாக உயிர்ப் பலியிடலையும் குறிப்பாக மிருக வேள்வியையும் நிராகரிப்பதாக பொத்தம் பொதுவாக இடித்துரைக்கின்றனர்.

இந்து சமயம் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சௌரம், காணபத்தியம், ஸ்மார்த்தம் ஆகிய ஆறு பிரிவுகளைக் கொண்டது.

- சைவம் – சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயப் பிரிவு.
- வைணவம் – விஷ்ணுவையும் அவரது பத்து அவதாரங்களையும் வணங்கும் சமயப் பிரிவு.
- சாக்தம் – சக்தியை வணங்கும் சமயப் பிரிவு.
- கௌமாரம் – முருகனை வணங்கும் சமயப் பிரிவு (குமரனை வணங்குவது கௌமாரம்).
- சௌரம் – சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயப் பிரிவு.
- காணபத்தியம் – விநாயகரை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயப் பிரிவு.
- ஸ்மார்த்தம்– சிவன்,சக்தி ,விஷ்ணு, கணேசர், சூரியன் மற்றும் முருகனை வணங்கும் சமயப் பிரிவு.

மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் சாக்த சமயத்தில் அதாவது சக்தி வழிபாட்டில் மிருகவேள்வி பூரணமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஏனைய பிரிவுகளில் அது முற்றாக தடைவிதிக்கப்படவில்லை.

வைணவ சமயத்தை அடிப்படையாகக் கொண்ட பெருநாளான தீபாவளியின் போது மாமிசப்படயலும் ஊன் உண்ணுதலும் இன்றும் நடைமுறையில் இருக்கிறது.

பொதுவாக விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படும் போது மட்டுமல்ல, கோபுரங்கள், தேர்கள் பிரதிஷ்டை செய்யப்படும் போதும் உயிர் பலியிடுவது வழக்கத்திலிருந்து வருகிறது.

இந்தியாவில் மட்டுமல்ல இலங்கையிலும், குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் கூட மிருகங்களை கோயில்களில் பலியிடும் வழக்கம் இருக்கின்றன.

மலையகத்தில் காவல் தெய்வங்களாகக் கொள்ளப்படுகின்ற முனியாண்டி, ரோதமுனி, மலைமுனி, காளி, வனத்து சின்னப்பர், கவ்வாத்து சாமி போன்ற பெயர்களில் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் சிறு சிறு வழிபாட்டிடங்களில் ஆடு, பறவை பலி நடைபெற்று வருகிறது( பெரும் எண்ணிக்கையில் அல்ல).

மலையகத் தோட்டப்புறங்களில் வருடாந்தம் நடைபெறும் மாரியம்மன் திருவிழாக்களுக்கு முன்னர் அல்லது பின்னர் வீடுகளில் வீட்டு மாரியம்மனுக்கென படைத்தல் நடைபெறுவதுடன், அப்படையலில் கோழிப்பேடு முதல் முட்டையும் படைக்கப்படுவதுண்டு.

கதிர்காமம் இன்று, இந்து அல்லது சைவக் கோயிலாக அன்றி பௌத்த மதத்தின் தேவாலயமாக மாற்றப்பட்டுள்ளது (முருக கடவுளை வழிபடும் மலைவாசிகள் மிருக இறைச்சியை படையல் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்). இந்த மாற்றம் பௌத்த மதத்தின் உள்ளீர்ப்பாகும்.

அதேபோன்று 15ஆம் நூற்றாண்டில் குளக்கோட்ட மன்னனின் வருகையுடன் கட்டப்பட்டதாகச் சொல்லப்படும் முன்னேஸ் வரத்தையும் பௌத்த தேவாலயமாக மாற்ற வேண்டும் என்பதே இதன் உள்நோக்கமாகும்.முன்னேஸ்வர காளி கோயில் பூசகர்களை கப்புராளைகளாக

(கதிர்காமத்தில் போன்று) கொள்ளும் விருப்பத்தை பௌத்த மேலாதிக்க வாதிகள் கொண்டுள்ளனர். திடீர் திடீரென அறிமுகப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலையங்கள் போன்று புனித பூமி பிரகடனங்களும் பெருகிக் கொண்டிருக்கின்றன.

முன்னேஸ்வர ஆலய பிரதேசமும் புனித பூமியாக 1994ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டு அங்கு பௌத்த விகாரை ஒன்றும் அமைக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அந்த விகாரையின் கீழேயே முன்னேஸ்வர இந்துக்கோயில்களும் இருக்க வேண்டும் என்பதே பௌத்த மேலாதிக்கவாதிகளின் குறிக்கோளாகும். அக்குறிக்கோளை எய்துவதற்காகவே முன்னேஸ்வர இந்துக் கோயில்களின் விவகாரங்களில் தலையீடுகள் செய்யப்படுகின்றன என்பது வெளிப்படையானதே என்றும் அதற்கு கிடைத்துள்ள துருப்புச் சீட்டே காளி கோயில் மிருக வேள்வி பயன்படுத்தப் படுகிறது என்றும் பொதுவாக கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இந்து சமயத்தின் மேற்கண்ட பிரிவுகளில் மிருகப் பலி சிறு சிறு இருந்த போதும் சாக்தம் என்னும் சக்திவழிபாட்டில் உயிர்ப் பலி பிரதானமாக பறவைகள் மிருகங்களைப் பலியிடுதல் ( ஆடுகள், பறவைகள் ஆனால் மாடுகள் அல்ல) தொடர்ந்து இருந்து வருகிறது. வேறு எந்த சமயத்திலும் இல்லாதவாறு நேர்த்திக் கடன் என்பது அதாவது வாழ்க்கையில் துன்பங்கள் நீங்க சொத்து சுகங்கள் சேர, துஷ்டர்களை பழிவாங்க கடவுளிடம் அல்லது தெய்வத்திடம் மன்றாடி எதிர்பார்ப்பைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்வதற்காக அவை நடைபெறுவதற்கு முன்பாக அல்லது நடைபெற்ற பிறகு மிருகங்களைப் பலியிடுவதற்கான உத்தரவாதத்தை பக்தர்கள் முன் மொழிந்து செயற்படுவதில் மிருகப்பலி முதன்மையாக இருந்து வந்துள்ளதை வரலாற்றிலிருந்து அறிய முடிகிறது.

மிருகப் பலியிடல் என்பது இந்து சமயத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல, அவற்றை பண்டைய கிரேக்க நாகரிகத்திலும் யூத, இஸ்லாமிய நாகரிகத்திலும் காணக்கூடியதாக இருக்கிறது. இஸ்லாமிய நாகரிகத்தில் இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

வருடாந்தம் இஸ்லாமியர்கள் கொண்டாடும் ஹஜ் பெருநாளை ஒட்டி மாடுகளை வெட்டி மாட்டிறைச்சியை உறவினர்களிடம் பரிமாறிக்கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனை குர்பான் என்று அழைப்பர்.

இன்றும் உலகளாவிய ரீதியில் மாமிசத்தை உண்ணும் மனிதர்கள் எண்ணிக்கை பெரியளவில் இருக்கின்றன. விலங்குகளை உண்ணும் உணவைக் கொண்டு மிருக, தாவர, மிருக-தாவர பட்சினிகள் என்று வகைப்படுத்தலாம். மனித இனம் இரண்டையும் கலந்து உட்கொள்ளும் மிருக-தாவர பட்சினியாகும் (சமய, உடலியல், சுகாதார காரணத்துக்காக தாவர பட்சினியாக மட்டும் இருக்கும் மனிதர்களும் உள்ளனர்).

மாமிச பட்சினியாக இருப்பவர்களுக்கு ஏதோ வகையில் மாமிசம் கிடைத்தாக வேண்டும். அந்த மாமிசத்தைப் பெறுவதற்காக சட்ட ரீதியாக, சட்ட மறுப்பாக, சமய ரீதியாக விலங்குகள் கொல்லப்பட வேண்டும். அதற்காக மிருகங்கள் பல வகையில் கொல்லப்படலாம். இதனால் தான் கொன்றால் பாவம், தின்றால் போச்சு என்ற வாய்மொழி இன்றும் வழக்கத்தில் இருந்து வருகிறது.

பொதுவாக இன்று உடல் ஆரோக்கியத்திற்காகப் பாவிக்கப்படும் எல்லா மருந்து வகைகளிலும் மாமிசக்கூறுகள் ஏதோவகையில் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மிருக வேள்விக்கு எதிர்ப்பு என்பது அடிப்படையில் ஊன் உண்ணுதலுக்கு எதிரானதா, மிருகங்கள், பறவைகளைக் கொலை செய்வதற்கு எதிரானதா அல்லது முன்னேஸ்வரம் காளி கோயில் உட்பட இந்துக்கோயில்களில் மிருகங்களைப் பலியிடுவதற்கு எதிரானதா என்பதே தற்போது நம்முன் உள்ள கருத்துக் களத்துக்குரிய விடயமாகிறது.

வருடாந்தம் முன்னேஸ்வர காளி கோயிலில் நேர்த்திக்கடனுக்காகப் பலியிடுவதற்காகக் கொண்டுவரப்படும் நூற்றுக்கணக்கான மிருகங்கள் பறவைகள் மீது ஜீவ காருண்யம் கொண்டவர்களாக சில பௌத்த துறவிகளுடன் மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் வெகுஜன தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா முக்கிய போராட்ட வீரராக இருந்து வருகிறார். மிருக வதையை எதிர்ப்பதற்காக அன்றி காளி கோயிலில் மிருக வேள்வி ஒரு கிரியையாக இடம்பெறுவதை தன்னால் அனுமதிக்க முடியாதென்றும்



மிருக வேள்வி மட்டுமன்றி இந்து சமயத்துடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் சட்ட ரீதியாகவும் சம்பிரதாய பூர்வமாகவும் ஒருங்குபடுத்தல் அவசியமாகும். இந்து சமய நிறுவனங்கள் இது குறித்து கவனம் செலுத்தினால் மாத்திரமே மிருக வேள்வி எதிர்ப்பு மற்றும் இந்து சமய வழிபாட்டு முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வரலாம்



அதனைத் தடுத்து நிறுத்த தன்னுடைய உயிரையும் கொடுக்கத் தயாரென்று சூளுரைத்து வருகிறார்.

இலங்கையில் மிருகவதைக்கு எதிரான சட்டம் (cruelty to animal) ஊன் வினைஞர் கட்டளை சட்டம் (butchers ordinance) தாவரங்கள், பூக்கள் பாதுகாப்புச் சட்டம்ம்(fauna and flora protection ordinance) மற்றும் சூழல் பாதுகாப்புச் சட்டங்களை மிருகங்கள் பாதுகாப்பு தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன. இவற்றில் கோயில்களில் நடைபெறும் வேள்விகளைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை.

முன்னேஸ்வர கோயிலில் அமைந்துள்ள காளி கோயிலில் மிருக வேள்வியைத் தடை செய்ய வேண்டும் என்ற எதிர்ப்பின் அடிப்படையானது மிருக வதைக்கு எதிரானதோ, புலால் உண்ணுவதற்கு, சூழல் மாசடைவதற்கு எதிரானதாகவோ கொள்ளப்படவில்லை. மிருகங்களைப் பலியிடும் சமயக் கிரியைக்கு எதிராகவே கொள்ளப்படுகிறது.

வருடாந்தம் நூற்றுக்கணக்குக்கு மேலான மிருகங்களும், பறவைகளும் நேர்த்திக்காக பக்தர்களால் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டாலும், அவை அனைத்தும் பலியிடப்படுவதில்லை, சில பறவைகளும், ஆடுகளுமே அடையாளமாகபலியிடப்படுகின்றன. ஏனையவை ஏலத்தில் விற்கப்பட்டு அதில் கிடைக்கும் வருமானம் கோயில் நிதியில் சேர்க்கப்படுகிறது.

காளி கோயில் முன்றிலில் மிருக வேள்விக்காக கட்டப்பட்டுள்ள கூடாரத்திலேயே மிருக பலியிடல் நடைபெறுவதுண்டு. அதனை பொது மக்கள் பார்க்க முடியும்.

அகில இலங்கை இந்து காங்கிரஸ், மிருக வேள்வியை நிறுத்துமாறு அறிக்கை விட்டதே தவிர இந்து சமயத்திற்கும் மிருக வேள்விக்கும் இருக்கின்ற தொடர்பு, முன்னேஸ்வர காளி கோயிலில் நடைபெற்றுவரும் விதம் போன்றன பற்றியோ வேள்விக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றியோ சரியான விளக்கத்தை முன்வைக்கத் தவறிவிட்டது.

மிருக வேள்வி இந்து சமயத்தில் நம்பிக்கையாக இருந்து வருவதுடன், மிருகங்களைக் கொன்று குவிக்கும் எண்ணம் கொண்டதல்ல என்றே வேள்வியை நியாயப்படுத்துபவர்கள் கூறுகின்றனர். முன்னேஸ்வர காளி கோயிலில் மிருக வேள்வி என்ற பெயரில் வகைதொகையின்றி மிருகங்கள் கொலை செய்யப்படுவதில்லை.

மிருக வேள்வியினால் சூழல் மாசடைகிறதா என்பது பற்றியும் பகிரங்கமாக மிருகங்கள் கொலை செய்யப்படுவதால் மக்களுக்கு ஏற்படும் மனோரீதியான பாதிப்புகள் பற்றியும் கேட்கப்பட்ட போது அவ்வாறு பாதிப்புகள் ஏற்படுவதாக இருந்தால் மிருக வேள்வியை ஒரு ஒழுங்கமைப்புக்கு கொண்டுவர இந்து மதத்தினர் மிருக வேள்வி நடைபெற வேண்டிய விதம் பற்றி ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒழுங்கு விதிகளை ஆக்கிக் கொள்ளலாமே தவிர, பௌத்த மேலாதிக்க வாதிகள் இது தொடர்பாக கட்டளை இட முடியாது. மிகவும் பழமைவாய்ந்த இந்து சமயத்தில் காலத்திற்குக் காலம் ஒவ்வாத விடயங்கள் கழிக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முழுமையாக இல்லாமல் விட்டாலும் சாதி, பால் ரீதியாக இருந்து வந்த மூட நம்பிக்கைகள் சில தற்போது நடைமுறையில் இல்லை என்று புத்தள பிரதேசத்தில் உள்ள ஐயனார் கோயில் ஒன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் இந்து ஆலய பரிபாலனம், சொத்துகள் பற்றி சரியான சட்ட ஏற்பாடுகள் இல்லை. இந்திய இந்து வழக்காறுகளே இங்கும் கடைப்பிடிக்கப்படுகின்றன. எனவே, மிருக வேள்வி மட்டுமன்றி இந்து சமயத்துடன் தொடர்புடைய பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் சட்ட ரீதியாகவும் சம்பிரதாய ரீதியாகவும் ஒழுங்கு படுத்தல்கள் அவசியப்படுகின்றன. இவை பற்றி இந்து சமய நிறுவனங்களும் பக்தர்களும் நடவடிக்கைகளை எடுத்தால், மாத்திரமே மிருக வேள்வி எதிர்ப்பு மற்றும் முன்னெடுக்கப்படும் இந்து சமய வழிபாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வரலாம்.



# 'திருவிளையாடலுக்கு' ஒரு திருவிளையாடல்

கலையுகம்

எம்.கே.என்.

இலங்கை வானொலியில், 1983 வரை 224 முறை கதை வசனம் ஒலிபரப்பப்பட்ட "திருவிளையாடல்" மீண்டும் விழாக் கோலத்துடன் திரைக்கு வருகிறது. ஏறக்குறைய 47 வருடங்கள் கழித்து டிஜிட்டல் சினிமாஸ்கோப்பில் இந்தப் படத்தை வெளியிடுவதற்கான ஆயத்தப்பணிகள் எல்லாவற்றையும் முடித்து விட்டார் பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் ஏ.பி.நாகராஜனின் (ஏ.பி.என்) மகன் சி.என். பரமசிவம். "கர்ணன்" படம் டிஜிட்டலில் வந்து கலக்கிய போது தமிழ் ரசிகர்களின் ஒட்டுமொத்த கோரிக்கையும் "அடுத்து திருவிளையாடல் எப்போது டிஜிட்டலில் வரும்?" என்ற ஆர்வம் மிகுந்த கேள்வி தான். "கர்ணன் படம் பார்த்து விட்டு திரையரங்கை விட்டு வெளியில் வந்தவுடன் எனக்கு போன் பண்ணுவார்கள். ஏதோ ஒருவர் பேசுகிறார் என்று நினைத்தேன். பிறகு பார்த்தால் பல பேர் போன் போட்டு உங்கள் அப்பா எடுத்த திருவிளையாடலை எப்போது டிஜிட்டலில் கொண்டு வரப் போகிறீர்கள் என்று கேட்கத்தொடங்கினார்கள். "தந்தையின் திரையுலகை விட்டு விலகி ஒட்டுமொத்தமாகப்ராப்பர்ட்டி டெவலப்பராகவும், டொனேஷன் வாங்காமலும் "ஸ்மைல்" என்ற நிறுவனம் நடத்திக் கொண்டிருந்த நான் திருவிளையாடல் படத்தை டிஜிட்டலில் எடுக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். அதற்கு என்னைத் தூண்டி விட்டது ரசிகர்களின் ஏகோபித்த கோரிக்கைதான்" என்று பெருமிதத்துடன் நம்மிடம் பேசத் தொடங்கினார் சி.என். பரமசிவம்.

கர்ணன் படம் பார்த்து விட்டு திரையரங்கை விட்டு வெளியில் வந்தவுடன் பலர் தனக்கு உங்கள் அப்பா எடுத்த திருவிளையாடலை எப்போது டிஜிட்டலில் கொண்டு வரப்போகிறீர்கள் என்று கேட்டார்கள். ரசிகர்களின் ஏகோபித்த வேண்டுகோளே அந்த படத்தை டிஜிட்டலில் எடுக்க தன்னைத் தூண்டியது என்கிறார் ஏ.பி.நாகராஜனின் புதல்வர் பரமசிவம்




இது மாதிரிப் படம் எடுக்கும் போது தன் தந்தை விட்டுச் சென்ற புகழை எந்த விதத்திலும் கெடுத்துவிடக்கூடாது என்பதில் குறியாக இருந்தார் ஏ.பி.என்.னின் மகன். "என் தந்தையின் படங்களில் பிரமாண்டம் இருக்கும். அதில் நடிப்பவர்களுக்கு இடையே வேடப்பொருத்தம் இருக்கும். இன்றைக்கும் தில்லானா மோகனாம்பாள் சண்முகசுந்தரம் என்றால் சிவாஜி நினைவுக்கு வருவார். திருவிளையாடலில் வரும் "தருமி" என்றால் நாகேஷ் ஞாபகத்திற்கு வருவார். ஜில்ஜில் ரமாபாய் என்றால் மனோரமா தான் ஞாபகத்திற்கு வருவார். மோகனாம்பாள் என்றால் பத்மினிதான் நினைவுக்கு வருவார். அதே போல் என் தந்தை வசனத்திலும் அதிக கவனம் செலுத்துவார். "நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே" என்ற அனல் பறக்கும் வசனம் இன்று முழங்காத மேடைகளே இல்லை. நகைச்சுவையிலும் அவர் கவனம் செலுத்தத் தவறுவதில்லை. "உமது பாட்டில் குறை இருக்கிறது" என்று புலவர் நக்கீரன் தருமியிடம் கூறும் போது, "பிழை இருந்தால் அதற்கு ஏற்றவாறு பரிசுத் தொகையைக் குறைத்துக் கொண்டு மீதியைக் கொடுங்கள்" என்று திருவிளையாடல் படத்தில் வரும் நாகேஷின் நகைச்சுவைக் காட்சியை ரசிக்காதவர்கள் யாரும் இருக்க முடியாது." என்றவர், "இரட்டை அர்த்தம் வரும் வசனங்கள் என்றாலே இன்று அசிங்கமான விடயங்களைச் சொல்வார்கள் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால்

என் தந்தை அதற்கு விதிவிலக்கானவர். திருவிளையாடல் படத்தில் நக்கீரனாக வந்திருப்பது சிவன் என்பதை தருமியிடம் எடுத்துரைக்க சிவாஜி இரட்டை அர்த் தத்தைப் பேசும் வசனங்களும், அதற்கு நாகேஷ் சொல்லும் பதில்களும் இன்றும் தியேட்டர்களில் கரவொலி எழுப்பும். இப்படியெல்லாம் அர்த்தமுள்ள தமிழ் வசனங்களை எழுதிய என் தந்தை பள்ளிக்கூடம் பக்கமே தலை வைத்துப் படுக்காதவர். ஏனென்றால் அவர் தன் நான்கு வயதில் தந்தையை இழந்தார். ஐந்து வயதில் தாயை இழந்தார். தமிழில் ஆழமான அறிவு கிடைத்தது என்றால் அவருக்கு இறைவன் கொடுத்த கொடை'' என்றார் உருக்கமாக.

புராணப்படங்களில் ஏ.பி.என் கொடி கட்டிப் பறந்த நேரம். நட்சத்திர நடிகர்களான சிவாஜி, எம்.ஜி.ஆர், நடிகைகள் பத்மினி, முக்கிய இசை அமைப்பாளர்கள், நகைச்சுவை மன்னன் நாகேஷ், பிரபல கமெராமேன்கள் எல்லாம் அவருடைய படங்களை அலங்கரிப்பார்கள். அந்த நேரத்தில் "முக்கிய நடிகர்களை வைத்து எடுக்கும் படத்தில் அவர்களின் திறமை எதிரொலிக்கிறது. இந்தப் படங்களில் ஏ.பி.என்-னுக்கு என்றும் தனித் திறமை என்ன தெரிகிறது?'' என்ற விமர்சனம்தமிழ்த்திரையுலகில்எழுந்தது. இது ஏ.பி.நாகராஜனின் காதிலும் விழுந்தது. உடனே புகழ்பெறாத ஹீரோ, ஹீரோயின்களை வைத்துப் படம் எடுக்க வேண்டும் என்ற சிந்தனை அவர் மனதில் தோன்றியதாம். அப்படி உருவான படம் தான் "வா ராஜா வா'' என்ற படம். அதில் ஏழு வயசுப் பையன் ஹீரோ. அறிமுகமாகியிருந்தகுன்னக்குடிவைத்தியநாதன் மியூசிக் டைரக்டர். இதை நினைவுகூர்ந்த ஏ.பி.என். மகன், "அது ஒரு சமூகச் சிந்தனை ததும்பிய திரைப்படம். என் தந்தைக்கு புராணப் படங்களையும் தாண்டி சமூக நோக்கம், சமூக நல்லிணக்கம் போன்றவற்றை வலியுறுத்தும் சிந்தனையும் இருந்தது. சமூகத்திற்கு செய்தி சொல்ல வேண்டும் என்பதற்காகவே படங்களை எடுத்தார். நாத்திகம் உச்சத்தில் இருந்த நேரத்தில் திருவிளையாடலை தமிழகத்தில் எடுத்து திரைக்கும் கொண்டு வந்தார் என் தந்தை. வா ராஜா வா என்ற படத்தில் சொல்லப்பட்டுள்ள வசனங்கள் என் தந்தையின் சமூகச் சிந்தனையைவிவரிக்கும்.உதாரணமாக, "விரும்பிப் போனால் விலகிப் போகும். விலகிப் போனால் விரும்பி வரும்'', "நினைப்பது போல் நடப்பதில்லை'' போன்ற தத்துவ வரிகள் அதை எடுத்துக் காட்டும். இந்தப் படம் எடுக்கப்பட்ட காலத்தில் சிவாஜியின் "சிவந்த மண்'' ஒரு புறமும், இன்னொரு புறம் எம்.ஜி. ஆரின் "நம் நாடும்'' சூட்டிங் நடந்து கொண்டிருந்ததாம். அதே தேதியில் "வா ராஜா வா'' படத்தையும் ரிலீஸ் பண்ண விரும்பினார் என் தந்தை. அப்போது சில விநியோகஸ்தர்கள், "உங்கள் திறமையில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும் எம்.ஜி.ஆர், சிவாஜி ஆகியோர் படம் வருகின்ற இந்த வேளையில் நம் படத்தை ரிலீஸ் செய்ய வேண்டுமா? ஒரு சில வாரங்கள் கழித்து நம் பட ரிலீஸை வைத்துக் கொள்ளலாமே'' என்றார்களாம். ஆனால் என் தந்தையோ "என் திறமையை சோதிக்க சேலஞ்சாக நான் எடுத்தபடம் இது. அந்தப் படங்கள் வரும் அதே தேதியில் என் படமும் ரிலீஸ் ஆகும்'' என்றுகூறி பிடிவாதமாகபடத்தை திரைக்குக் கொண்டு வந்தார். அப்படி வந்த "வா ராஜா வா'' நூறு நாட்கள் ஓடியது என்பது குறிப்பிடத்தக்கது'' என்றார் பரமசிவம்.

திரையுலகில் தனக்கு நிகர் தானே என்ற புகழுக்குச் சொந்தக்காரரான ஏ.பி.என்னின் படமான திருவிளையாடல் இறைவனின் திருவிளையாடல்களை வெளிப்படுத்தும் படம். அதில் நான்கு திருவிளையாடல்களை மட்டும் தொகுத்து, ரசிகர்களின் ரசனைக்கு ஏற்ப, தேன் சொட்டும் தமிழ் வசனங்களால் தமிழ்த் திரையுலகத்தை நனைத்தவர் ஏ.பி.என். நான்கு திருவிளையாடல்கள் என்னென்ன? "சிவன் நக்கீரப்புலவன் உருவில் வந்து தமிழ் மழை பெய்தது'' ஒரு திருவிளையாடல். "ஆணும், பெண்ணும் சமம்'' என்பதை உலகிற்கு அறிவிக்க பார்வதிக்கு சிவன் உணர்த்திய திருவிளையாடல் இரண்டாவது. "மீனவப் பெண்ணாகப் பிறந்த பார்வதியை மணம் செய்து கொள்ள சொக்கனாக அவதாரம் எடுத்தது'' மூன்றாவது திருவிளையாடல். "பாண்டிய நாட்டில் தர்க்கம் புரிய வந்த ஹேமநாத பாகவதரின் தலைக்கனத்தை மாற்றிய விறகு வெட்டியாக வந்த அவதாரம்'' நான்காவது திருவிளையாடல். இப்படி நான்கு திருவிளையாடல்கள் கொண்ட இப்படம் டிஜிட்டல் வடிவில் வெளியாவதில் திடீர் சிக்கல் முளைத்தது.



மதுரையைச்சேர்ந்த இந்த வயோதிப மாது திருவிளையாடல் படத்தை 150 தடவைகள் பார்த்து விட்டு அத்தனை டிக்கட் துண்டுகளையும் கொண்டு வந்து ஏ.பி. நாகராஜனிடம் காட்டினார். தனது திரைப் படத்திற்கு பேராதரவைத் தந்த அவருடன் நாகராஜன் தம்பதியர்




உமது பாட்டில் குறை இருக்கிறது என்று புலவர் நக்கீரன் தருமியிடம் கூறும்போது பிழையிருந்தால் அதற்கேற்றவாறு பரிசுத் தொகையை குறைத்துக் கொண்டு மீதியை கொடுங்கள் என்று இந்த படத்தில் வரும் நாகேஷின் நகைச் சுவைக் காட்சியை ரசிக்காதவர்கள் யாருமில்லை

இந்தப்படம் 1965இல் எடுக்கப்பட்டது. 1975 வாக்கில் இப்படி உரிமைகளை கோவையில் உள்ள "மூவி பிலிம் சர்க்யூட்" என்ற நிறுவனத்திற்கு "காப்பி ரைட்ஸ்" கொடுத்தார் ஏ.பி.என். அதன் உரிமையாளர்கள் சுலோசனா மற்றும் சரஸ்வதி ஆகியோர். ஒரு வருடம் கழித்து இவர்களிடமிருந்து விஜயா பிக்ஸர்ஸ் "திருவிளையாடல்" பட உரிமைகளை வாங்கியிருக்கிறது. அப்படி உரிமை வழங்கும் போது சில ஷரத்துகளைத் தெளிவாகவே போட்டுக் கொடுத்தார் ஏ.பி.என். நாகராஜன். அவற்றுள் மிக முக்கியமானது 35 எம்.எம். மற்றும் 16 எம்.எம். உரிமை மட்டுமே "மூவி பிலிம் சர்க்யூட்டிற்கு" வழங்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ள ஷரத்தாகும். அதை விட முக்கியமாக, "வேறு மொழிகளில் மொழி பெயர்ப்பு மற்றும் மறு தயாரிப்புச் செய்யும் உரிமைகள்" "தொலைக்காட்சி மற்றும் இதர தொழில்நுட்ப உரிமைகள்" எங்களிடமே இருக்கும். யாருக்கும் கொடுக்கப்பட மாட்டாது என்பதையும் ஏ.பி.என் அந்த ஒப்பந்தத்தில் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் திடீரென்று விஜயா பிக்ஸர்ஸ் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குப் போட்டார்கள். "உரிமை எங்களிடம் இருக்கிறது. இவர்கள் எப்படி திருவிளையாடல் படத்தை டிஜிட்டலில் எடுக்கலாம். ரிலீஸிற்கு தடை கொடுங்கள்" என்று கோரிக்கை வைத்தார்கள். சென்னை உயர்நீதிமன்றம் ஆகஸ்ட் 16ஆம் தேதி வரை "ஸ்டேட்டஸ்கோ" (அதாவது அதே நிலை நீடிக்கட்டும்) என்று உத்தரவிட்டது. அதை மீண்டும் நீட்டிக்க விஜயா பிக்ஸர்ஸ் நீதிமன்றத்தில் கோரிக்கை வைத்தது. அதை நிராகரித்து விட்டது நீதிமன்றம். அதனால் இன்றைய தேதியில் திருவிளையாடலை வெளியிட எந்தத் தடையும் இல்லை.

இந்தச் சட்டப்போராட்டம் பற்றியும் நாம் பரமசிவத்திடம் கேட்டோம். அவர், "என் தந்தை தீர்க்கதரிசி. டி.வி. மற்றும் வேறு தொழில்நுட்பங்கள் உரிமை எங்களிடமே என்று அன்றே ஜாக்கிரதையாகவே ஒப்பந்தம் போட்டிருக்கிறார். அதனால் அவர்கள் உரிமை கொண்டாடுவது தான் தவறு. என்னிடம்தான் உரிமை இருக்கிறது. அவர்கள் வழக்குப் போடுவார்கள் என்று கருதி என் பெயரில் உயர் நீதிமன்றத்தில் "கேவியெட்" மனு போட்டு வைத்திருந்தேன். (அதாவது இவரது கருத்தைக் கேட்காமல் ஸ்டே வழங்கக் கூடாது என்பதற்கான முன்னெச்சரிக்கை மனு) அதனால் அவர்கள் என் தந்தை இறந்தவுடன் 35 வருடத்திற்கு முன்பே காலாவதியாகிவிட்ட விஜயலட்சுமி பிக்ஸர்ஸ் பெயரில் கேஸ் போட்டார்கள். ஆனால் நீதி வென்றுள்ளது." என்றவர், "என் தந்தை எங்களுக்கு மூன்று முக்கிய பண்புகளைக் கற்றுக் கொடுத்தார். உண்மை, உழைப்பு, மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை இந்த மூன்றுந் தான் அவை. ஆகவே நாங்கள் எங்களிடம் உள்ள உரிமைப்படிதான் இந்தப்படத்தை எடுத்துள்ளோம்" என்றார் சற்று வித்தியாசமாக.

டிஜிட்டல் சினிமாஸ்கோப்பில் எடுக்கப்பட்ட திருவிளையாடல் படத்தை சிவாஜியின் மகன் ராம்குமாரிடம் போட்டுக் காண்பித்திருக்கிறார் பரமசிவம். அதைப் பார்த்த ராம்குமார், "பாட்டும் நானே...பாவமும் நானே" என்ற பாடலைக் கேட்டுவிட்டு கண்கலங்கி விட்டேன். ரொம்ப பிரமாதமாக நீங்கள் இப்படத்தை ஒரிஜினாலிட்டிக்கு பாதகம் வராமல் எடுத்துள்ளீர்கள். வெல் டன்" என்று வாழ்த்தினாராம். அந்த அளவிற்கு பழைய படம் என்பதால் அதில் உள்ள சில குறைகளைக் களைந்து சிறப்பான முறையில் டிஜிட்டலில் உருவாக்கியிருக்கிறார் பரமசிவம். இது பற்றிக் கூறிய அவர், "நான் பெரிதாக எதுவும் செய்யவில்லை. "திருவிளையாடல்" படத்தின் ஒரிஜினாலிட்டி கெட்டுவிடக் கூடாது என்பதில் மட்டுமே நான் அதிக கவனம் செலுத்தினேன். இந்த டிஜிட்டல் சினிமாஸ்கோப் படத்தை தமிழகத்தில் மட்டுமல்ல உலகம் முழுவதும் ரிலீஸ் பண்ண திட்டமிட்டுள்ளேன். அதைவிட, நான் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது தமிழர்களைப் பார்க்கிறேன். அவர்கள் எல்லாம் திருவிளையாடலை இப்போது டிஜிட்டல் செய்து கொண்டிருக்கிறீர்கள். தில்லானா மோகனாம்பாளை எப்போது டிஜிட்டலில் கொண்டு வரப் போகிறீர்கள். அந்தப் படங்கள் எல்லாம் நமது கலாசாரத்தின் அடையாளங்கள். இன்றைய இளைய தலைமுறை அதைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் ஏராளம் இருக்கிறது" என்றவர், "காதல் பாடல் இல்லாமல், கடைசி வரைகட்டிப்பிடிக்காமல், ஒருவரைஒருவர் தொட்டுக் கொள்ளாமல் பரதநாட்டிய கலைஞியாக பத்மினியும், நாதஸ்வர வித்வானாக சிவாஜியும் நடித்த படமல்லவா. திருவிளையாடல் ரிலீஸ் ஆனதும் தில்லானா மோகனாம்பாளையும் டிஜிட்டலில் கொண்டு வரப் போகிறேன்" என்று உற்சாகத்துடன் கூறியவர், "என் தந்தை சினிமாவிற்கு வந்து 60ஆவது ஆண்டு விழா அடுத்த வருடம் வருகிறது. அந்த வருடம் இந்திய சினிமாவின் நூறாவது ஆண்டு விழாவும் கூட. அதற்காக என் தந்தை ஏ.பி.என்-னை முன்னிறுத்தி ஒரு டாக்குமெண்டரி படம் எடுப்பதில் இப்போது சீரியஸாக இருக்கிறேன். ஏனென்றால் அவர் சமூகச் சிந்தனைகளை பவர்புல் மீடியாவான சினிமா மூலம் மக்களுக்கு போதித்தவர்" என்றார் மிகுந்த பெருமிதத்துடன்.



மனைவி, பிள்ளைகளுடன் இயக்குநர் நாகராஜன்

## கடைசிப் பக்கம்

# மூன்று மரணங்கள்



பேராசிரியர் சி.மௌனகுரு

நவீனம், முதலாளித்துவத்தின் வருகையுடன் ஆரம்பிக்கிறது. பண்ட உற்பத்தி, பரிவர்த்தனை, இலாபமீட்டல், மீண்டும் மீண்டும் இலாபமீட்டுதல் மூலதனத்தை மென்மேலும் அதிகரித்தல் என்பனவே முதலாளித்துவத்தின் நோக்கங்களாம்.

முதலாளித்துவத்திற்கு மூன்று கால கட்டங்களுண்டு. ஒன்று தேசிய முதலாளித்துவம் தன்நாடுகட்குள் இயங்கிய காலம்.

இரண்டு, அது தன் எல்லையைப் பிராந்தியங்களுக்குள் விரிவுபடுத்திய ஏகாதிபத்திய கால கட்டம். இதனைக் காலனித்துவ காலம் என்பர்.

மூன்று, ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து காலனித்துவ நாடுகள் விடுபட்டபின்னர் பன்னாட்டு முதலாளித்துவம் என்ற பெயரில் உலக முதலாளித்துவம் மக்கள் மீது படை எடுக்கும் காலம்.

படை எடுப்பு எதனைக் கொண்டுவரும்? ஆக்கிரமிப்பை, அழிவை, அலைவை, பண்பாட்டுத் திணிப்பை. நமது நாடும் நாமும் முதலாளித்துவத்தின் மூன்றாவது கால கட்டத்துள் நிற்கிறோம். ஆக்கிரமிப்பையும் அழிவையும் அலைவையும் பண்பாட்டுத் திணிப்பையும் கணம் தோறும் சந்திக்கிறோம்.

இது ஊடகங்களின்யுகம், நமது இருண்ட அறையை இந்த ஊடகங்கள் தமது பிரகாசமான ஒளியால் நிரப்பி, நம்மை இன்னொரு உலகில் வாழவைத்துக் கொண்டிருக்கின்றன.

நாம் நம்மையறியாத மூன்று மரணங்களைச் சந்தித்துள்ளோம் என்கிறார் ஜீன் போத்திரியார் என்ற பிரெஞ்சு அறிஞர் (இவர் பற்றித் தமிழில் எஸ்.வி.ராஜதுரை நூல் ஒன்று எழுதியுள்ளார்)

முதல் மரணம் நவீனத்தின் மரணம் இரண்டாவது மரணம் செக்ஸின் மரணம் மூன்றாவது மரணம் உண்மையின் மரணம். நவீனம் மரணிக்குமா? செக்ஸுக்கு ஏது மரணம்? உண்மைக்கும் மரணமுண்டா? ஆம் உண்டு.

### நவீனத்தின் மரணம்

இலாபமீட்டுவதற்காக நுகர்வுப் பொருட்களை கணம் தோறும் உற்பத்தி செய்கிறார்கள் முதலாளிகள். காலையில் நவீனம் என விளம்பரப்படுத்தப்படும் பொருள் அதே குணமுள்ள இன்னொரு பொருள் மாலையில் அறிமுகப்படுத்தப்படுகையில் பழசாக மாறிவிடுகிறது. புதிய-நவீன மோஸ்தர் தேடி இளம் தலைமுறை அலைகிறது.

### செக்ஸின் மரணம்

புனிதமான பொருளாக மறைபொருளாக பேசப்பட்ட செக்ஸ், இன்று பகிரங்கமாகிவிட்டது. தொலைக்காட்சிகளும் கொம்பியூட்டர்களும் பாலுணர்வு தோன்றும் வகையில் உறுப்புகளை வயது வித்தியாசமின்றி பார்வையாளரின் முன் பரப்பிவைக்கின்றன. புனிதம், மறைபொருள், குறிப்பிட்ட வயதுக்குரியது என்ற செக்ஸ் பற்றிய கோட்பாடும் மரணித்துவிட்டது.

### உண்மையின் மரணம்

இன்றைய உலகுக்குக் கம்பியூட்டர்களும் தொலைக்காட்சிகளும் புதிய உண்மைகளைத் தருகின்றன. அது தான் போலி உண்மை. உண்மைபோலத் தோற்றங்காட்டும் போலி இதனைப் போலி உண்மைகளின் வரிசை (The orders of simulakra) என்பர்.

நிஜவாழ்வுக்குப் பதிலாக நகல் வாழ்வு வாழ்கிறோம். நகல் வாழ்வை, நகல் மனிதர்களை, நகல் பொருட்களை உண்மை என நம்புகிறோம். அவர்கள் போல நடை உடை பாவனைகளை ஏற்படுத்திக் கொள்கிறோம். சிறந்த உதாரணங்கள் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களும் விளம்பரங்களும் ஒரே மாதிரியான பல பொருட்கள் சந்தையில் குவிகின்றன. எதுவும் நம்மைச் சிந்திக்க விடுவதாயில்லை.

சிந்திக்கும் திறன் என்ற மகா சக்தியை வெகுஜனத்தினரிடமிருந்து இவை பறித்து விடுகின்றன. தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள் என்று ஜனநாயகக் குரல்போல ஒலிக்கும் குரலுக்குப் பின்னால் இருக்கும். ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானம் நமக்குத் தெரிவதில்லை. அவர்கள் கூறுவதை மாத்திரமே நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இன்னொரு வகையில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தை அவர்கள் நமக்கும் தெரிவிக்கிறார்கள் அவ்வளவுதான்.

மரபு அழிகிறதே என்ற ஓலம் ஒருபுறம். எங்கள் இஷ்டம் போல நடக்க எம்மை விடுங்கள் காலம் மாறுகிறது நாமும் மாறுகிறோம் என்ற ஓலம் மறுபுறம்.

குழம்பிப் போயிருக்கிறது உலகு. குழப்பமான ஒரு சூழலில்; சிந்திக்க இடம் தராத ஒரு சூழலில் வாழ்கிறோம்.


நமது நாட்டை எதிர்கொள்ளும் பேராபத்துகள் 5 கூறுங்கள் என்றால் முதலாவது பேராபத்தாக நான் குழப்ப சூழலைத்தான் கூறுவேன்.

இனம், மதம், சாதிப் பிரதேசம், பால் வர்க்கம் என்ற பேதமின்றி அனைவரையும் இந்தக் குழப்பம் பாதித்துள்ளது.

குழப்பமான சூழலில் இருந்து விடுபட பல பிரயத்தனங்களைப் பலர் எடுக்கிறார்கள். இக்குழப்பமான சூழலில் வாழும் கலைஞர்கள் எள்ளல் தன்மையும் பகிடியும் கொண்ட மொழியால் மட்டுமே சாதாரண மனநிலையை அடைகின்றனர் என்கிறார் அறிஞர் ஜாமிசன். சமூக அக்கறையும், கொடுமைகளுக்கு எதிரான தார்மீகக் கோபமும் கொண்ட பெரும்பாலான கலைஞர்களின் எழுத்துக்களில் வரும் எதிர்ப்புணர்ச்சியில் எள்ளலும் பகிடியும் இருப்பது இதனாலேயே.

கலைஞர்கள் மாத்திரமன்றி குழப்பநிலைக்குள்ளான புத்திக் கூர்மையுள்ள இளம் தலை முறையிடமும் இந்த எள்ளலும் பகிடியும் வந்து விடுவதனைக் காணுகிறோம்.

**எம்.ஜி.சுரேஷின் பின் நவீனத்துவம் என்றால் என்ன? என்ற நூலிருந்து பெற்ற சில சுவாரஸ்யமானதும், சிந்திக்கக் கூடியதுமான சில கருத்துக்களை இங்கு நான் முன்வைத்துள்ளேன்.**




மேலதிக தகவல்களுக்கு : +94-773-186-987






All Models of Computer printer Ribbons

Electronic Typewriter Ribbons

Inkjet Cartridges, Inkjet Refills

Laser Printer Toners,

Digital Duplicating Inks, Black & Colour

Digital Stencil Master Rolls

Photocopy Papers, Roneo Papers

Toner for any copies

Computer Accessories & Papers

Fax Papers, Fax Ink Film Rolls & Cartridges

Paper, Board Packing Materials

All types of Office Stationery


















RAINBOW STATIONERS (PVT) LTD.




# Rainbow Stationers (Pvt) Ltd.

**IMPORTERS, DEALERS IN PAPER & STATIONERY**

No. 18, Maliban Street, Colombo 11, Sri Lanka.

Voice : 2433906 (Hunting) 2433907, 2433908 Fax : +94 11 2433904

e-mail: rainbowst@sltnet.lk Website : www.rainbowsts.com

***Join the Largest Stationery House***


Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.